O23:38.TV
N01
58624

சிவமயம்.

# திருவெற்றியூர்ப்புராணம்.

இஃது

[illegible] நாட்டு [illegible] சேர்ந்த

தேவிகோட்டையின்கண்

மாத்தூர்க்கோயிலில் உறையூர் வகுப்பு

ஸ்ரீ இலக்குமணச் செட்டியாரவர்கள்

குமாரர்

இலக்குமணச்செட்டியாராகிய

சிந்நயச்செட்டியாரவர்களால்

இயற்றப்பெற்றது.

மேற்படியூர்

[illegible] சித. பெ. சிதம்பரஞ் செட்டியாரால்

சென்னபட்டணம்:

ஸ்டார் ஆப் இந்தியா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

கலியப்தம் ௫௦௦௨ இல் செல்லாநின்ற

பிலவ ௵ புரட்டாசி ௴.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
29 NOV. 1901
MADRAS.

Q23:38·TY
N01
58624



சிவமயம்.

ஸ்ரீ ஜெபபுரமென்னுந் திருவெற்றியூர்
மூவர்முதலிகள் அருளிச்செய்த தமிழ்வேதமாகிய
தேவாரம்பெற்ற வைப்புஸ்தலங்களுள் ஒன்று என்பது
பின்வருமாற்றுலுணர்க.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தேவாரம்

### க்ஷேத்திரக்கோவை.

மனவஞ்சர்மற்றோடமுன்மாதராரு
  மதிகூர்திருக்கூடலிலாலவாயு
மினவஞ்சோலையிடைமாமருது
  மிரும்பைப்பதிமாகாளம்வெற்றியூருங்
கனமஞ்சினமால்விடையான்விரும்புங்
  கருகாவூர்நல்லூர்பெரும்புலியூர்
தனமென்சொலிற்றஞ்சமென்றேநினைமின்
  றவமாமலமாயினதானறுமே. (௧)

## திருநாவுக்கரசுநாயனார்

### பாவநாசத்திருப்பதிகம்.

பற்றற்றார்சேர்பழம்பதியைப்பாசூர்நிலாயபவளத்தைச்
சிற்றம்பலத்தெந்திகழ்கனியைத்தீண்டற்கரியதிருவுருவை
வெற்றியூரில்விரிசுடரைவிமலர்கோனைத்திரைசூழ்ந்த
வொற்றியூரெமுத்தமனையுள்ளத்துள்ளேவைத்தேனே. (௧)

## க்ஷேத்திரக்கோவைத்

### திருத்தாண்டகம்.

உஞ்சேனைமாகாளமூறலோத்தூ
  ருருத்திரகோடிமறைக்காட்டுள்ளு
மஞ்சார்பொதியின்மலைதஞ்சைவழுவூர்
  வீரட்டமாதானங்கேதாரத்தும்
வெஞ்சமாக்கூடன்மீயச்சூர்வைகா
  வேதீச்சுரம்வியலூர்வெற்றியூருங்
கஞ்சனூர்கஞ்சாறுபஞ்சாக்கையுங்
  கயிலாயநாதனையேகாணலாமே. (அ)

## சுந்தரமூர்த்திநாயனார்

### திருநாட்டுத்தொகை.

மூலனூர்முதலாயமுக்கண்ணன்முதல்வனூர்
நாலனூர்நரையேறுகந்தேறியநம்பனூர்
கோலநீற்றன்குற்றாலங்குரங்கணின்முட்டமும்
வேலனூர்வெற்றியூர்வெண்ணிக்கூற்றத்துவெண்ணியே. (௬)

— —

சிவமயம்.

# நூலாசிரியர் பெயர்.

நூலாசிரியர் மாணாக்கராகிய
தேவிகோட்டை மாற்றூர்க்கோயில் உறையூர் வகுப்பு
அழ. சுப. சு. சுப்பிரமணியச் செட்டியாரவர்கள்
இயற்றியது.

---

சொன்னயமோ பொருணயமோ வருணயமோ வருளின்
றொடர்நயமோ செவிப்புலத்துத் தொக்கவிசை நயமோ
பன்னயமோ வுன்னயமோ பரபக்க சுபக்கப்
பருப்பொருளின் விழுப்பொருளின் பானயமோ பாத்தின்
டென்னயமோ நயந்தான்மெய்ச் சிவநயந்தான் றேவை
யியன்மாற்றூர்க் கோயிலுறை யூர்வகுப்பான் வீர
சின்னயப்பேர் வித்துவநய வணிகசிகா மணிகு
செயபுரமான் மியந்தமிழாற் றிருந்துறயாத் தனனே.

உ

சிவமயம்.

# நூலாசிரியர் வரலாறு.

இந்நூலாசிரியராகிய இலக்குமணச் செட்டியா ரென்னும் ஸ்ரீமத் சிந்நயச் செட்டியாரவர்கள் பாண்டிமண்டலத்திலே, தேவிகோட்டையிலே, நகரத்தாரென்று வழங்குகின்ற தனவைசியர் குலத்திலே, நகரக்கோயில் ஒன்பதனு ளொன்றாகிய மாற்றூர்க் கோயிலிலே, உறையூர் வகுப்பிலே, வீர. விலாசப் பிரசித்த கௌரவ குடும்பத்திலே பிறந்தவர்கள்.

இவ்விலாசக் குடும்பம், செல்வத்தாலுங் கொடையினாலுஞ் சிறந்து பெரும்புகழ்படைத்த பெருமையையும் பழமையையுமுடையது; இக்குடும்பத்தால் நடந்த சிவதருமங்கள் எண்ணில்லாதன; தனுக்கோடியில் அன்னமகாசத்திரமும் இக்குடும்பத்தாற் பிரதிட்டை செய்யப்பெற்று, இன்றும் நாளையும் என்றும் நிலைபெற்று ஒன்றுபோல வாடாது வழங்கிவரும் *தர்மசந்தான வழக்கத்தை• யறியாதார்யாவர்.

இம்மகிமைவாய்ந்த தர்மசந்தான குடும்பத்தில், இவர்கள் மூவர் சகோதரர்களோடு தாம் துரியராய்ப்பிறந்து, பாலியவயசிற் கல்விகற்குங் காலத்திலே மிக நுண்மதியாளர்களாய் நூல்களை அதிவிரைவிற் கற்றுமுடித்து, அரிய நூலாராய்ச்சிக்கு அருகரானார்கள். அந்நாளிலே தமிழில் வித்துவசிகாமணிகளாய் விளங்கிய தேவிகோட்டை ஸ்ரீமத் வன்றொண்டச் செட்டியாரவர்களை யடைந்து, குருபத்தி நெறிவழுவாது நின்று வழிபட்டுத், தமிழில் அரிய இலக்கண இலக்கியங்களையெல்லாங்கற்று மிகவல்லுநரானார்கள். தமிழ் நூலாராய்ச்சியோடு வடநூலாராய்ச்சியும் ஒருங்கமைந்து உபயகலைச் சதுரர்களாய், ஸ்புடமாகிய ஞானமுடையவர்களாய்த், தமக்கமைந்த சிந்நயச் செட்டியாரென்னும் நாமம் தமக்கு அந்வர்த்த நாமமென உலகர்கள் கொண்டாடும்படி பிரபல வித்துவானாய் வாழ்ந்திருந்தார்கள்; கவனசக்தியில் அதுலர்கள்.

பிரபல வித்துவகவிசிகாமணிகளாகிய செட்டியாரவர்கள் லோகோபகாரமாகத் தமிழில் அநேக பிரபந்தங்களைச்செய்தார்கள்; அவற்றுள் தேவைத்திரிபந்தாதி, அருணைச்சிலேடைவெண்பாமாலை, மீனாக்ஷியம்மை பதிகம், சிலம்பைப் பதிற்றுப் பத்தந்தாதி, மயின்மலைப் பிள்ளைத்தமிழ் என்னும் பிரபந்தங்கள் ஐந்து செய்து அவற்றை ஒன்று சேர்த்துப் பிரபந்த பஞ்சகமென் ஒரு பெயரால் நூலாசிரியராகிய தமது காலத்திற்றானே வெளியிட்டார்கள். காசியமகவந்தாதியும் இவர்கள் செய்ததேயாம்.

செட்டியாரவர்கள் தாமே அநேக பிரபந்தங்களைச் செய்து, ஏழைகளாய்த் தம்மைப் புகலடைந்த சாமானிய கவிகள்மேலிரங்கி, அப்பிரபந்தங்களைச் செய்த முதன்மையை அவர்களுக்குப் பரிசளித்துத் தனிகர்கள் முன்னிலையில் அவர்களைத் தமது அருள் நயத்தினாலுஞ் சொன்னயத்தினாலும் மகா கவிகளெனக் கௌரவம் பாராட்டி, அதனால் அதற்குப் பெரும் பொருள் தாம் நேரே அளித்தும் பிறரால் அளிப்பித்தும் வித்துவசகாயபூதர்களாய் வாழ்ந்திருந்தார்கள்; அடிக்கடி சிவஸ்தல யாத்திரை பண்ணும் முறைமையில் மூலாதார ஸ்தலமாகிய திருவாரூரிற் பற்றுடையவர்களாய்ப் பெரும்பாலும் அங்கேயே வசிப்பார்கள். அங்கு வசித்து வருங்காலையில் அதன் மருங்கினதாகிய திருவிளமரென்னுஞ் சிவஸ்தலம் மிகவும் ஜீர்ணமாயிருத்தலைக்கண்டு ஜீர்ணோத்தாரம் பண்ணிவைத்தார்கள். இன்னும் அவர்களாற் செய்துஞ் செய்வித்தும் முடித்த வித்துவஜன பக்தஜநோபகாரங்களுஞ் சிவதர்மங்களும் பல.

இனி, திருவெற்றியூர்ப் புராணமென்னும் இந்நூல் அறிஞர்களெல்லாராலும் உச்சிமேற்கொண்டு வியக்குமாறு சொன்னயம் பொருணயமடைந்த பெருஞ்சிறப்பினையுடையதென்பது இந்நூலை உள்ளிட்டாராய்வாருக்கு இனிது விளங்கும். இதன்கண் நாநாவித சப்தாலங்கார அர்த்தாலங்கார வைசித்திரியங்கள் அடிக்கடி விரவி வருதலும், நவரசங்கள் யதோசித ஸ்தானங்களிற் பொழிந்தொழுகுதலும், தேவதாரதம்மியங்களுஞ் சிவபாரம்மியமும் புலப்பட வருதலும், சைவ சித்தாந்த கௌரவ நிரூபணம் முதலிய பல சிறப்புக்களும் இந்நூற்குச் சகஜகுணபூஷணங்களாயிருப்பதை அறிஞர்கள் இனிது கண்டு மகிழ்வார்கள்.



இந்நூல் செட்டியாரவர்களது அதுலகவித்துவ சாதுரியத்திற்கு என்றும் யாண்டும் நின்று நிலவுவதோர் நிதர்சனமாய், அவர்களது புகழுடம்பை மறையவொட்டாது விளக்குவதோரலங்காரதீபமாய், அவர்கள் தமது நண்பர்களாகிய வித்துவஜனங்கள் மகிழ அவர்கட்கெல்லாம் பொதுமையினளித்தவொரு பெருவிருந்தாய்த், தமது குலப்பிரசூதர்களாகிய உரிமையாளர்களெல்லாம் எத்துணைக்காலங்கழியினும் என்றுந் தம்மை மறவாது நினைத்துக் கெழுதகைமையும் இறும்பூதுமுற்று மகிழ்ந்து கொழுகொழுப்பெய்திப் பாராட்டி மகிழுமாறு அவர்க்கெல்லா மளித்ததோரக்ஷய ஞான நிக்ஷேப நிதியாய், வித்தியார்த்திகளுக்கெல்லாந் தமிழ் அரங்கு பற்றியேறுதற்கோராதாரபூதமாய் விளங்குவதில் என்னைகொலையம்.

இப்பெருஞ் சிறப்பினதாகிய இந்நூல், ஆசிரியர்காலத்திற்குப்பின் சார்வரி௵ தைமீ ௨௭௨ இத்திருவெற்றியூர்க் கும்பாபிஷேக காலத்தில் இத்தலத்திற்றானே அம்மை சந்நிதியில் அரங்கேறியது.

திருச்சிற்றம்பலம்.

இங்ஙனம்.

அழ. சுப. சு.

தேவிகோட்டை.

# சூசிபத்திரம்.


| படலம். | பக்கம். |
| --- | --- |
| பாயிரம் ... ... ... ... | க |
| நாட்டுப்படலம் ... ... ... ... | ௪ |
| நகரப்படலம் ... ... ... ... | கக |
| நைமிசப்படலம் ... ... ... ... | ௩௦ |
| திருக்கைலாயப்படலம் ... ... ... | ௩௩ |
| தலவிசேடப்படலம் ... ... ... | ௪க |
| தீர்த்தவிசேடப்படலம் ... ... ... | ௪௫ |
| மூர்த்திவிசேடப்படலம் ... ... ... | ௫௦ |
| பார்வதி பாகம்பிரியாவரம்பெற்றபடலம் ... | ௫௪ |
| திருமால்வழிபடுபடலம் ... ... ... | ௬௬ |
| வாசுகிசிவத்துரோகநீக்கப்படலம் ... ... | ௬௫ |
| முனிவர்பூசனைப்படலம் ... ... | க0அ |


உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவெற்றியூர்ப்புராணம்.

## பாயிரம்.

### காப்பு.

**அகத்திய விநாயகர்.**

திருவ கத்தியல் சேரப் பொலிந்துகற்
பிருவ கத்திய நீண்டெழில் வெற்றியூர்
மருவ கத்திய மாமுகன் சேவடி
தருவ கத்திய பத்தியச் சால்பெலாம். (க)

**நினைத்தது முடிக்கும் விநாயகர்.**

புனைத்தரு விறப்புறு பொழிற்சய புரிக்கட்
டனைப்பொரு சிவச்சுடர் தளிக்குட வரைப்பி
லனைத்துயர் தவிர்த்தொரு மருப்புட னிருக்கும்
நினைத்தது முடிப்பவ னிழற்பத முடித்து. (உ)

**பழம் புற்று நாதர்.**

முருகு விரிமுண் டகனுதி மூவ ராகி நின்றானு
முருவ மருவ முருவருவென் றுளிரும் வடிவ முடையானு
மருவு மண்டங் கலந்திலங்கு வானுந் தானே யெனுமுண்மை
பொருவில் குறியாற் றேற்றுபழம் புற்று நாதன் கழல்போற்றி.()

**பாகம் பிரியா நாயகி.**

பாகம் பிரியாத் தடந்தடங்காப் பல்கு வெற்றி நகரின்மல
பாகம் பிரியாப் பிரியமிலாப் பரிசா ருயிர்கட் களித்துறைவாள்
பாகம் பிரியாப் பசுவமலர்ப் பதிமான் மறையாப் படைத்தவன்பாந்
பாகம் பிரியாப் பனையிருகால் பல்கால் வழுத்திப் பணிகிற்பாம்.(ச)

### நடேசர்.

செஞ்சி னடேசன் றன்னை நினைந்தியா
னெஞ்சி யிரந்தா லென்னினி யீவா
னஞ்சினும் வெய்யே னயினு நாயேன்
குஞ்சித பாதங் குஞ்சித பாதம்.

### கணபதி.

அஃறிணை யுயர்தி ணைக்கண் டங்குயி ரனைத்துந் தன்பொன்
புஃறிரு வுருவிற் பின்னர்ப் பொருந்துமென் றுணர்த்தி யாங்கு
வெஃகிறல் வேழத் தெய்வ மேனிகொள் கணேச னென்றுட்
பஃறியைப் பற்றிச் சென்று பவப்பெருங் கடல்க டத்தும்.

### வைரவக் கடவுள்.

நந்தமது நற்றாளுண் ணயந்தவர்சார் நணுகினிவ்வா
றந்தகனு மாமென்ன வுயிவுறுத்த குறிப்பென்ன
முந்தவுண வந்தகனை முனிந்துகமு முட்கோத்து
மந்தநகை புரிந்தருளும் வைரவனை வழிபடுவாம். (௭)

### குமார சுவாமி.

தன்னிக ருயர்ச்சித் தாய சடக்கர மனுவை யெண்ணித்
துன்னிய தாய வாய்மைத் தொழும்பர்தம் வேட்கை யெல்லா
மின்னிதின் யாண்டு மீதற் கிரண்டுகை யமையா வென்று
பன்னிரு கரம் படைத்த பரம்பொருள் பதங்கள் போற்றி. (௮)

### திருநந்தி தேவர்.

புடவித் தனித்தேர்ப் புண்ணியன்வாய்ப் புராண கலையு நிகமேர்ப
நிடதத் தொகையு நாற்பாத நிகழ்த்து நாளும் வினைத்தெளித்து
கடவுட் கதிர்கான் றிருள்சீக்குங் கைலை வரையைக் காவல்புரி
யிடபத் தேவ னங்கிரியை யிதயத் தேவ னங்கிரியை. (௯)

### சமயாசாரியர் நால்வர்.

ஒருமாதர் வெற்றென்பை யுயிர்ப்பித்து விண்ணுலகின்
வருமாதர் தமைவெறுத்து மதிமுடித்தார் புணர்விக்க
விருமாத ரின்பநுகர்ந் திகழ்முறைகை யியற்கையமை
தருமாதர் பேசவருள் சமயகுர வரைப்பணிவாம். (௧0)

### நாயன்மா ரறுபத்துமூவர்.

மின்பதித் தெனமிளிர் வேணிவேய் நதி
நன்பதிக் கியன்றவர் நாளுமாட் செயூஉ
வின்பதிற் சிறிய ராய நாயன்மா
ரொன்பதிற் றெழுவர்தா ளுள்ளம் பாவுவாம். (௧௧)



### திருக்கூட்டப் பொது.

திகையு லாவிய சீர்த்தித் திருத்தொண்டத்
தொகைநி லாவு தொகையடி யார்கட்கு
மகைவி லாத வகம்படிப் பல்பணி
வகையி னார்க்கும் வணக்கம் வணக்கநாம். (௧௨)

### சேக்கிழாரடிகள்.

வாக்கி னாலெனத் தேன்மலர் வாக்கிநூற்
போக்கி லாத்திருத் தொண்டர் புராணத்தை
யாக்கி யோரெமை யாக்கிய பாக்கியச்
சேக்கி ழார்சரண் சென்னியி ருத்துவாம். (௧௩)

### சந்தானகுரவர் நால்வர்.

சிந்தாமற் றென்மொழியிற் சிவஞான போதத்தைத்
தந்தாரு மெந்தைமுதற் சத்தியோ திருவான
முந்தாரு முள்ளிக்கு முற்றுவித்த கோனிறுவாய்ச்
சந்தானா சாரியரைத் தாழ்ந்துளமே வாழ்ந்துளமே. (௧௪)

### வாழ்த்து.

வேத நீநெறி வேள்வி வழங்குக
மாதர் வான்குயின் மாரி வழங்குக
வோத ஞாலத் துயிர்க்கின்ப மண்டுக
பூத நாதன் புகழ்ச்சைவ மல்குக. (௧௫)

### நூற் பயன்.

குருவெற்றி கழுமீ னிப்பொற் கோலநீ டியவா னூட்டி
யுருவெற்றி தனது சீர்த்த வுருவுக்கென் றுரைப்ப வோங்குந்
திருவெற்றி யூர்ப்பு ராணஞ் செவியுறி வுறுத்தோர் கேட்டோர்
பொருவெற்றி மும்மை யின்பப் போகமும் பெற்று வாழ்ப. (௧௬)

### அவையடக்கம்.

பொருவரு வழுச்செ றிந்த புன்மொழித் தொடர்பா லந்தோ
விருள்பொதி மனத்துப் பேதை யிதுசொற்ற தெற்றுக் கென்னி
னருள்கெழீஇக் கற்று வல்லார்க் கனிநவ ரசத்தொன் றுய
பெருநகைச் சுவைவி ளைக்கும் பெற்றியே பற்றி யென்கேன். ()

குற்றமுங் குணமுஞ் சிந்தைக் குறிப்பினாற் கோடற் பால
முற்றரு மிலக்க ணத்தின் *முரட்டுநூ லீது மான
மற்றவன் புந்த வோதிற் றுதலா லொருவர் கற்கொண்
டெற்றவுங் களிகூர்ந் தாண்ட வீசனுக் கினிதாம் போலும். (௧௮)

பாயிரம் முற்றிற்று.

* முரட்டு—முரணையுடையது.

# நாட்டுப் படலம்.

முந்தவல் லமணராதி மூர்க்கரை வென்று நிம்பக்
கொந்தலர் குளிர்தார்க் கோன்மெய்க் கூனுமட் குருடுந் தீர்த்துச்
சந்ததந் தழைப்ப ஞானசம்பந்தர் நிறீஇய சைவச்
செந்தமிழ்ப் பாண்டி நாட்டுச் செழிவளஞ் செப்ப லுற்றும். (௧)

வியத்தகு வெண்மை யுண்மை விட்டுழாம் விசும்பிற் போகிக்
கயக்கருங் கடனீர் மொண்டு கறுத்துட னிவந்த காட்சி
யியற்கையிற் றூய வான்மா விருண்டவா ணவத்தொ டக்கான்
மயக்குறீஇச் சார்ந்த தொன்றன் வண்ணமாம் வண்ணந் தேற்றும்.

சிவபிரா னருளி னற்பெள திகவுட லிளைத்த சீவன்
புவனமீ திறுத்துப் பாவ புண்ணியம் புரிதல் போல
வவமொரூஉம் பொதியத் தல்கி யஞ்சமின் னுருமுக் கான்றூர்த்
தெவருமா தரவு கூர்வா னெழிலிபெய் தன்று மாரி. (௩)

தொண்டைமே லுயிரி ரண்டு தொல்வினை தொலைந்தொ ரிர்ந்து
பண்டைநற் பான்மை யெய்திப் பரனொடுங் கலந்தான் மான
வுண்டைய வாலி வீழ்ப்பு முட்குறு மிடிப்பு நீங்கி
விண்டைவந் திட்ட தம்மா வில்விட்டு விளர்த்து மேகம். (௪)

அத்தகு பரமுத் தான்மா வாற்றிய வநந்த தன்மந்
தத்தம பயத்தோ டேனோர்ச் சாரவெவ் வேறு சென்றுங்
கொத்தகைம் மாறு வேண்டா வுயர்நிலைப் புயல்க ளீந்த
முத்தவெள் ளருவி பல்ல முனிமலைக் கோட்டின் வார்ந்த. (௫)

சொல்லின வெலாந்தஞ் சீரத் துறப்பெறு வண்மை சான்றோர்
புல்லின சூழ லோங்கிப் பொலிவெனத் தெரித்தல் செய்யு
மெல்லினன் வெப்பற் றிம்ப ரின்புற மழைபொ ழிந்த
செல்லின மிருந்த தென்றற் சிலம்புதான் வளஞ்சி றந்தே. (௬)

வரம்பில வினைய னைத்து மரபுளி யிறுதி காலத்
துரம்பெறு மாயை யின்பா லொன்றுறு கிற்ப தொப்ப
நிரந்திழு மெனக்க றங்கி நீடிய வருவி யாவுந்
தரங்கிளர் பொருநை யாற்றுத் தலைத்தலைப் பெய்த மாதோ. (௭)



அனையதோர் பெரிய மாயை யாய்வழி யசுத்தஞ் சுத்த
மெனவிரு வகையு டைத்தென் றியாவரு மினிது தேர்வா
னினமலி கறைநி றத்த வெண்கொடு தவள வண்ணத்
தனியரித் திரளீர்த் தேகுந் தாமிர பன்னி வேணி. (௮)

பொதுளிய புவன போக போக்கிய பதார்த்த முற்று
முதலெனு மாயை மாட்டு முகிழ்த்தன தழைத்தா லென்ன
நதிநத மெவற்றி னுள்ளு நனியுயர் பொருநைப் பாங்கர்ப்
புதர்கொடி பசும்புல் லாதி பொலிந்தன முளைத்த டர்ந்து. (௯)

மாயமார் மாயை தன்முன் மன்னுல காக்க நிற்கு
நாயகற் கண்டா கந்த நடம்புரி யன்பர் நேரப்
பாயதன் பொருநை வாரி பல்வளந் தரநி மித்த
மாயகார்ப் பருவ நோக்கி யகவின வோகைத் தோகை. (௧௦)

பவந்தலைப் பட்டு நின்ற பசுவர்க்கந் தோறு மாயை
யுவந்துதன் வித்தை யாற்சிற் றுணர்ச்சியை மிடைப்ப தேய்ப்பத்
தவழ்ந்தெழு வீசி வீசித் தாமிர பன்னிக் கன்னி
சிவந்தகேழ்த் தோன்றி யம்பூச் செறிப்பது சார லெங்கும். (௧௧)

தோமதன் மாயை யேசாத் துவிகரா சதங்க ளோடு
தாமச குணமுந் தோற்றுந் தன்மைய தெனவி ளக்குங்
காமரு களிநல் யானைக் கார்மத மிறுவிற் செந்தேன்
றாமரும் புனல்வி ராவித் துனைகின்ற பொருந்த நீத்தம். (௧௨)

பிரபஞ்ச முழுது மாகிப் பிறங்குபு முடிவின் மாயை
பரமன்க ணொடுங்கு மாபோற் படர்ந்தெழு பொருந்த வெள்ளஞ்
சுரதஞ்செய் குறிஞ்சி முல்லை சுரம்பனை கெய்த லென்ன
விரவைந்து நிலனுந் தாஞய் விரிந்துமுந் நீர்புக் கன்றே. (௧௩)

வேறு.

இருமைப் பயன்முற் றெளிதிற் றருதண்
பொருநைக் குடிஞைப் பொலிவோ தியதாற்
றிருவத் தியலைந் திணையிற் புணரும்
பருவத் துளசிர் பகரப் படுமே. (௧௪)

## குறிஞ்சி.

வேறு.

மாறு தீர்பர ஞானத்தை நான்முனி வருந்
தேறு மாறுமுன் பருளிய பரமதே சிகற்கு
வேறு நேரிலாக் குடிலையின் மெய்ப்பொருள் விதந்து
கூறு சாமியைச் சாமியாக் கொண்டது குறிஞ்சி. (கரு)

அன்ன வுத்தமோத் தமகுரு வாகிய வயில்வேன்
மன்னன் வைகுறும் வைகிய தன்மையான் மயக்க
வின்னல் வல்விரைந் திரியுமென் றிருங்கிரி யீண்டி
யுன்ன ருந்திறற் றுபத ரொருங்கியோ குழப்பார். (கசா)

கிளக்கு மிந்நிலத் தேவுசாரக் தவரொளி கெழுமித்
துளக்க மின்றுயர் பதக்கினி வதிந்தந் தோறு
மளக்க லாதுநீ டசலத்தி லும்பரி லமர்ந்து
விளக்க மிக்கபொன் வித்துணர் பூத்தொளிர் வேங்கை. (கஎ)

தங்கு மாருயிர்க் கிம்மைநல் லின்பமுந் தருவோ
னங்கை யாழிரண் டுடையனென் றறிவித்தற் கன்றே
நங்கை மாரொடு நம்பிக டழீஇநகர் நலத்தை
யுங்கண் மன்னுரிப் பொருளென வைத்துள துலகம். (கஅ)

குறிகு ணத்தினைக் கடந்தசேய்க் கன்பினர் கொடுமை
செறித ரப்புரி பவந்தவ மாவறு திகழ்த்து
மறிமு தற்பலேப் பிரப்பிரீஇக் களித்தெயின் மக்கள்
வெறிய யர்ச்சியும் விழுமிதாய் மிகுபயன் விளைத்து. (ககூ)

நெக்கு நெக்குள மிச்சிறு னிவேதன நிரப்பி
மைக்க ளத்தினர்க் ககழ்ந்தெடுத் தொருகணை வழங்கி
முக்கண் முற்பெறு சதுரராந் திண்ணனர் முளைத்த
வக்கு லத்தினர் பெருமித மளக்குந ராரே. (உ0)

வள்ளி மானுரக் கோடுபின் குத்திட வதனப்
புள்ளி மானுரக் கோடுமுன் குத்திடப் புளகுற்
றுள்ளு வந்தனன் கந்தவே ளுத்தலை யுதுசெய்
தெள்ளு நோன்பெனே சிவன்மகார் திருவடி தீண்ட. (உக)



பிறப்பில் பேருண் முருகனை மருகனுப் பெற்று
மறித்தொர் புன்றெய்வம் வழிபடா தவன்கழல் வணங்கும்
வெறிந்த குஞ்சிய ரிறவுளர் குழீஇயினர் மேய
குறிச்சி மான்மியங் கூறிய நனியருங் குரைத்தே. (உஉ)

ஏன லங்குரல் கவர்சுகக் குரலொடு மினிமை
யான தங்குரல் வேற்றுமை தேர்தலி னார்க்குப்
பான லம்பகக் கொடிச்சியர் கடியவும் பல்காற்
போன விக்லபேர்ப் பொருள்கெழீஇ நுகர்வவப் புள்ளு. (உங)

நிழல் விளங்குதம் மெய்யியன் மணம்பொரா நீர்மை
பழகி யோர்க்கன ராயினும் பொய்தல்வாய்ப் பாரக்
குழலெ யிற்றியர் கொங்கைவன் குவட்டிடைக் கோட்ட
வழகு கோடலாற் கந்தத்தைச் சந்தமென் றறைப. (உச)

பொடிப டத்தட மடியெடுத் திடுமிடற் புளிக்தர்
கொடிநு சுப்புடைக் குறத்தியர் கமழ்சுவைக் கோலக்
கடித டச்சுனை யாடுவர் கங்குலிற் களித்துக்
கடித டச்சுனை யாடுவர் நண்பகற் காலை. (உரு)

பிண்டி மெல்லிணர் வண்டினங் குறிஞ்சியாழ் பெருக்கத்
தொண்ட கப்பறை வேட்டுவத் தனிச்சிறார் துவைப்பக்
கொண்டன் மாமுழ வதிர்த்திட மந்திதாய்க் குனிக்கன்
மண்டு காதலி னேங்குபு மறத்தியர் மகிழ்நர். (உசா)

கைவ ளத்தினுக் கன்மொழித் தொகைப்படு நாமங்
கைவ குத்தசொற் குறமினர் தினையிடி கவலை
தைவ ருங்கொழுந் தசைநற விவற்றெறுடுந் சார்ந்தார்க்
கைவ னப்புத ணருந்திய ருந்திய ரம்மா. (உஎ)

வாட்டி மன்னுயிர் வாங்கியின் மாதரார் மருண்ட
நாட்ட நவ்வியு நகிலமால் வேழமு நாப்பட்
சேட்டி ளந்தனிச் சிங்கமு முன்மையாற் சிலம்பர்
வேட்ட மேற்கொளிற் றிவகம் வேறவண் வேண்டா. (உஅ)

வியன்கொ டிச்சியர் வண்டலிற் றூரந்தனு மீப்போ
யயர்ந்து கீழ்ப்புகூஉப் பன்முறை யம்மனை யலைவ
வியன்ற வூழ்வினை வயத்தினன் மன்பதை யெவைக்கு
முயர்ந்து வாழ்வொடு தாழ்வுமுண் டென்பன வுறழும். (உகூ)

சுரரொ டுநேர் வரையர மங்கையர் தூர்த்த
வரனு லாவர தனங்களும் வழுவைவெண் மருப்புத்
தரள முந்தவ ழிவந்தவேய் முத்தமுந் தழல்வா
யரவு கான்றசெம் மணியுமே யாவயிற் குப்பை. (௩0)

பாலை.

வேறு.

கால சூல கரத்தினள்
வாலை நீலி மடந்தையைச்
சீல பாலன தெய்வமாப்
பாலை வேலி படைத்ததே. (௩௧)

வெற்றி மாதருள் வேறுளார்
சற்ற டைந்தடல் சார்வரோ
விற்றெ னப்படு மேயவட்
பற்று மீளியர் பால்வயம். (௩௨)

செய்த நன்றி சிதைத்திடி
னுய்த லின்றென வோர்ந்தபோல்
வைதீ டிப்ப வளர்த்தவர்
நைதன் ஞாளிக ணன்பரு. (௩௩)

வறுமை தம்வயின் மல்கினும்
பிறிதி டத்தன பெட்கலா
முறைமை யாளரின் மொய்ம்மணிப்
புறவ ருந்துவ புன்பரல். (௩௪)

நெருங்கி யக்கமு நீழனு
மிருந்த நீர்மையின் யாழிசை
யொருங்கு மாற்றை யுணர்த்துவ
பருந்து மீது பறந்தரோ. (௩௫)

இருவர் மாதவ ரின்னுயிர்
தருச டாயுசம் பாதிதம்
முருவு கொண்டமை யுன்னியாங்
கெருவை யீண்டிரு மாப்பன. (௩௬)



அள்ளு தாகமகற்றியர்
கொள்ளு நீரறு கூவல்க
ளொள்ளு ணர்ச்சியுள் ளீடிலாப்
பொள்ள னெஞ்சு புரைந்தவே. (௩௭)

தொன்று தம்மெய் துளைத்தவ
னென்று மங்கு லினத்தினைச்
சென்ற டர்ப்பெழு செய்கைபோன்
மன்ற வோங்கு மராமரம். (௩௮)

அருட்சு கந்தெரி யார்சிறு
மருட்சி யின்ப மகிழ்ந்தென
விருப்பை வீயையங் கேழையர்
பெருத்த கன்னலிற் பேணுவார். (௩௯)

அஞ்சு ரப்புசொ லார்பயில்
பஞ்ச ரக்குளிர் பாலையாழ்
வெஞ்சு ரத்திடை விஞ்சையர்
நெஞ்சு ரத்தை நெகிழ்த்துமால். (௪0)

இழிவி லார்பிரிந் தேகுழிக்
கழிமு ரம்பு கவற்றிடா
துழிஞை யோமை யொடுங்குரா
வழிப ரப்பு மலர்க்குவை. (௪௧)

எந்த நாட்டினு மெய்துபு
கொந்து பல்வளங் கூட்டுறைச்
சிந்தை மேவன செய்தலா
லந்தி லார்சுர ராயினர். (௪௨)

முல்லை.

வேறு.

பொருளாற் புகுவ புகழ்ச்சியறம் புரைதீ ரின்ப மப்பொருளைத்
திருநோக் களிப்ப தனையசெழுந் திருவுக் கொருவாப் பெருமகிழ்வு
தருமாத் தலைவ னயனுதி சகல ருள்ளுந் தவச்சிறந்த
புருடோத் தமனு மவன்றேவாய்ப் புரக்கப்படுமோர் பூம்புறவம்.

தேவதேவற் கடிசொமுஞ் செங்கண் விடையுந் தேவியுமாய்ப்
பூவதாக விழிதொட்டுப் புனைந்து புண்ட ரீகாக்கத்
தாவகன்ற தனிநாமந் தரித்த சைவ சிகாமணிகுற்
றேவலிழைத்துத் தொழுபொதுவ ரிடைய ரேனுந் தலையரே. ()

ஆத்த னமரு மகன்கயிலை யயல்வாய் வியல்வாய் முத்தியவாய்க்
காத்த கண்ணர் கணக்கிறந்தோர் கலையே கல்லே கதிர்ப்படையே
நீத்தல் கெழீஇய நெறிநின்றார் நீடு நோன்பு நிகழ்த்துநர்போற்
பூத்தபிடவின் புறத்தெண்ணில் பூவை துணர்த்துப்பொலிவனமன்.

பௌவ மதித்த வக்கரியோர் பலர்க்குங் காட்சி கொடுத்து வினை
வௌவ மழவேற் றெழுந்தருளி வந்தசேந்த சடையார்போற்
கௌவல் கொண்ட மலரின்மிளிர் காயா வெதிரின் முழுதலர்ந்த
மௌவ லிடைமஞ் சரிநால வயங்கி மன்னும் வளர்மதலை. (சசு)

வேலைத் துயின்ற மாயோர்முன் மேயவுருநீத் தொளியுருவம்
பாலைப்பழித்த பனிமொழியாள் பாகனருளாற் படைத்தனர்போன்
மாலைப் பொழுதின் மணிக்காசை வடிவு மழுங்கி மறைந்தொழியக்
காலைப் பரிதி கரிதென்னக் கதிர்த்து நிரந்த சேர்திமரம். (சஎ)

மறுவி கந்த பரந்தாம வாழ்க்கை நெடியோர் யாந்தழைத்துத்
துறுமி வைகு மிதன்மாட்டுத் துறவோ ராய்நோன் புழந்துயிருக்
குறுதி பெறுந ரேலெமைநீ ரொப்பெங் ஙனமென் றும்பர்தமை
முறுவலித்த நிகர்த்தவரி மூரல முகிழ்த்த பைங்குருந்தம். (சஅ)

மூன்று புவனத் துங்கிடையா முதிர்ந்த காமர்ப் பொதுவியர்த
மான்று கிளரு நாசிகையி னணியைப் பெறுதல் வேண்டுமென
நான்று கொண்டு கூரூசிநுவட் சேக்கித் தவம் புரிவ [போது.
போன்று தோன்றும் பனைமுள்ளுட் பொதுள்பு துங்கு குமிழம்

முதிய செல்வப் பூதிக்கு மூலந் தரலாற் புருகூத
னெதிரில் விதிமா அருத்திரனே டேனைச் சுரரு முறுப்பகத்து
வதியநிற்கு மாட்சிமையால் வருதஞ் சீர்த்தி விரிந்தாங்குப்
புதிய கற்று நிரையெங்கும் பொழிந்த துத்தம் பரந்தலதே. (ருO)

வாசங் கமழ்ந்து நெறித்திருண்டு வார்ந்த கூந்தற் றெறுவியர்க
ணேசம் பொருந்தக் கறந்துமிடா நிறைபா றயிருள் விரவியநெய்
தேசங் குலவு பிறர்பாலுஞ் செய்ய மெய்யன் பினர்பாலு
மீசன் காந்தும் வெளிப்பட்டு மியைந்த வியல்பு தெரிவிக்கும். (ருக)



குதலைக் கிளவிக் கூர்ங்கணைக்கட் குவவுக் கொங்கைக் கோவியர்கை
சதபத் திரத்துக் கடைந்தெடுத்துத் தாழிக் கிடத்து நவநீதம் [ச்
முதமிக் களித்துத் தேய்வின்றி முசு மாசு கழிந்தவவர்
வதனச் செவ்வி கவர்செவ்வி மதித்தன் முழுத்தண் மதிதுணையும்.

திங்கள் குறித்த கைதவத்தைச் சிந்தை நுனித்துத் தேர்ந்துநனி
மங்க விதனைப் புரிதுமென வல்லை முயலா நின்றார்போ
லங்கண் வெண்ணெய் குழிசியிலிட் டழலிற் காய்ச்சி யுருக்குவராற்
சிங்கு மடுக்கு மிடைச்சியர்கள் செல்வ மடுக்கு மிடைச்சியர்கள். ()

பகையி னெச்சந் தீயெச்சப் பான்மைத் தாகிப் படர்ந்துதெறுந்
தகைய தறவே யொழித்திடுதல் சால்பிற் றென்ன முன்னினரிற்
றொகைய முதிரை அறுவரகஞ் சொன்றி யோடந் நறுவிதுநெய்
மிகைப டப்பெய் தாய்மகளிர் விருந்தோக் கலினால் மிசைவிப்பார்.

இராவி னிறுதி வைகறையி லெழுந்து பள்ளித் துயிலொரீஇப்
புராரி நாம கீர்த்தனத்தைப் புரிதல் வேண்டுந் தாளவகை
யிராவ வென்னுப் பல்காலும் விளம்பி யாங்குக் கான்கோழி
தராத லத்தார் தாங்கேட்பத் தவக்கூந் தழைத்த சிறைபுடைத்து.

வாகு லத்தின் புயத்தமா வருக்க மொருங்கு பொறுத்தசினை
யாகு லத்தை யாகுலத்தி னகல நாளு மோம்புதலாற்
கோகு லத்திற் குழலிசைக்குங் கோவ ரெல்லாத் தேவருமாம்
பாகு லக்கு மொழிவாமப் பரனை மகிழ்வித் தவரன்றே. (ருசு)

## மருதம்.

### வேறு.

அடல்கெ ழுந்தனி யாழிப் படைநடாஅ
யிடரி னின்று மிகப்பித்து வைகலும்
புடவி யாதிய போற்றிக்கு முன்னவன்
கடவு ளாகக் கவின்றது தண்பணை. (ருஎ)

தரள முந்தலைத் தாமிர பன்னியும்
வரத வேக வதிநதி வையையுங்
காவி லாதெண்ணில் காலின் விரைந்துபோய்ப்
புரவி ழைப்பப் பொலியும் வியல்வயல். (ருஅ)

வன்ற கைக்குண மன்னிய கேழலா
மன்ற லூறுசெய் தன்மிப் பயப்படா
வென்ற தோர்ந்தென வேர்கொடு கின்புவி
கன்ற லூன்றிக் களமரு ழுவரால். (௫௯)

மள்ள ருள்ளிய வாறு வசுந்தரை
பொள்ளெ னக்கொழுப் போழ்ந்திட்ட சீரொறு
முள்ளி டத்தி லொளித்துவைத் துள்ளன
கொள்ளை யம்பொற் குவால்பிறக் கின்றரோ. (௬௦)

மிடுக்கிற் சேர்த்த வினைஞர்கண் மேதினி
வடுக்கட் டீர மருந்து பிழீஇச்செப்ப
மடுக்கச் செய்குந ராமெனச் செய்யுணீர்
விடுத்துப் பின்னர் வியன்பரம் புந்துவார். (௬௧)

மலிப யன்கொளும் வண்ணம் விருந்துறை
வலிய ருக்கு வழங்குகின் றூர்பொரக்
கலிவ ளத்த கழனியுட் பின்னவர்
மெலிவு நீங்கநெல் வித்துற வித்துவார். (௬௨)

ஒல்லு மாற்று லுதவிய வுண்டியை
யல்லல் வெம்பசி தீர வயின்றகம்
புல்லு மோகையர் புன்னகை செய்தெனச்
சொல்லின் வெண்முளை தோற்றிற்றப் பண்ணையே. (௬௩)

நெகிழ்ச்சி மென்பனி நீர்தூய் நிரந்தர
முகப்பி னோடு முபசரிக் கப்படூஉ
மகிழ்ச்சி கூர்நர் மயிர்சிலிர்த் தாங்கறல்
புகப்பெய் தோம்பப் பொடித்தபைங் கூழரோ. (௬௪)

விருந்த ருத்திய மேதக வாளர்க்கு
வருந்து றேன்மின் வளர்தரு வாமென
வொருங்கு சூளுரைத் தொண்கை யுயர்த்தபோ
னெருங்கொ லிப்பயிர் நீட்டின வண்பணை. (௬௫)

அடுத்து ளார்கட் கவாய வரும்பொருள்
கொடுப்ப வஞ்சினங் கூறி யிசைந்துள
விடுப்ப ரும்பெரு மேதைக் குணக்கரைத்
தடுக்கின் றூரிற் றதைந்த மலர்க்களை. (௬௬)



மதுவுண் வண்டர் மருவல ரைக்கடை
விதுமு கத்தியர் வேரொடுங் கட்டன
ரிதுத காதெனன் றீதல் விலக்கினோர்
கதுமெனக் கெடல் கைகண்ட தொன்றன்றே. (௬௭)

உளத்த மூக்கற் றுதவி தகைந்தவர்
துளக்க முற்றுத் தொலைதலும் வள்ளியோர்
கிளைத்து பைம்பொற் கிழிகரங் கொண்டென
வளர்த்த சாலி வளர்கரு வாய்த்தன. (௬௮)

எதிரி லின்னமு தூட்டின ரின்புற
நிதிபொன் காசு நிரம்ப நிரைத்துள
பொதிய விழ்த்துப் பொழிகுநர் போற்பொதிக்
கதிர்வி ரித்துநெற் கான்றபைங் கூழ்வயல். (௬௯)

அளித்த பாணி யறுப்பற னன்றெனத்
தளிர்த்த நீள்பயிர் தாங்குறை யாதலா
னொளித்த னிப்பிறை யொத்த குயத்தினாற்
களிப்பின் மள்ளர் கதிர்க்குலை யீர்ந்தனர். (௭௦)

அனைய வாய வரதனஞ் சாலைவாய்
வினைபு ரிந்தொளி மேம்படு வித்தெனக்
கனைப கட்டின் கருங்குரத் தானவை
தனைய கற்றிக் குவித்தனர் சாலிநெல். (௭௧)

தறையிற் பெற்றுள தக்க பெரும்பொரு
ளிறைவ ருக்குரித் தென்றளித் தன்னவர்
முறையி னல்கிரு மூன்றிலொங் கூறுகொண்
டுறையு ளெய்திய வவ்வொருங் குப்பபரால். (௭௨)

புதிது பெற்ற பொருவி றிருவந்தா
முதியர்ப் பாத்தூண் முறையென முன்னினர்
பிதிரர் தெய்வம் பிறவருஞ் சுற்றத்தோ
டதிதி யர்க்கு மருத்தி யருந்துவார். (௭௩)

மொழியுங் காரான் முளிவெண் டயிர்செற்றி
யழிவின் றேங்கமு தன்னசெந் நெற்பதம்
பழியஞ் சிப்பகுத் துண்டலிற் பல்குபு
வழியெஞ் சாது வளர்ப வுழவரே. (௭௪)

நம்மை யொப்ப நடக்குமின் னார்பதந்
தம்மை யொப்ப விலையெனத் தாளினால்
வெம்மை மிக்கு மிதித்தென வோதிமஞ்
செம்மை யங்கயப் பங்கயத் தேத்துலாம். (எரு)

கோலி நீள்வஞ்சிக் கொம்பினர்த் தும்பிதீம்
பாலி னின்னிசை பாடிய நாரைதாம்
பீலி யூதப் பெருகக் கிணைபணை
வேலி யூர்கள் விழவு மலிந்துள. (எசு)

ஊட லென்று மொழுக்கந்தன் பாற்கொடு
கூட லார்வங் கொளுத்தி மகளிர்க்கு
மாட வர்க்கு மகப்பொரு ளாநந்த
நீட வேறுவாய் நிற்பவை திவளன்றே. (எஎ)

## நெய்தல்.

### வேறு.

நாற்றிணை யிரண்டுதிணை யாருயிர் நலக்க
வாற்றின முதித்தொழுகு மன்னவுயர் பாலே
மேற்றிசை யெனப்படு திசைக்குரிய வேந்தன்
போற்றியிட மல்கிவளர் பொற்பினது நெய்தல். (எஅ)

பெறற்கரிய தெங்கினிள நீரெளிது பெற்றும்
வறப்பிலுவர்க் கேணியறல் மாந்து நலமாக்க
ளிறப்பொடு பிறப்பொருவு சங்கர னிருப்ப
வுறச்சிறிய தெய்வத மடுக்குநரை யொத்தார். (எகூ)

நுண்ணிய பராகமலி தாங்கிமிசை நோக்கூஉ
வண்ணியமென் கைதைதமை யங்கணர்கொள் பாக்குப்
புண்ணியவென் னீறுபர சைவமணி பூணு
விண்ணியவுட் கண்ணுறுப்பு நோற்பன விழைந்த. (அ0)

முரிநெடு முட்கெழு முடக்சுறவு முந்நீர்
வாரியிடை வாழினும் விலங்கெனவு மன்னு
நேரிலுயிர் நித்தியசத் தாகியுள தேனுஞ்
சீரியர சத்தெனவு நின்றிடு திறம்போல். (அக)



கருங்கொடி களுங்கிளை கூரைந்து கரவாமே
யருந்துவ வுணக்குமயி லைத்திரளை யாலு
விருந்திருவ மெய்துபர தக்குலவ ரொக்கல்
விருந்தொடயில் வாரென விதத்தன்மிகை யன்றே. (அஉ)

பரப்பொளிய பைங்கனக நித்தில மருது
மரக்கலம் வழங்குவன யாமுமவை மானச்
சுரத்துமென வுன்னிமக ரந்தசுவ ணத்தாள்
வரத்தனி முகைத்தரள மாடுதரும் புன்னை. (அங)

பெண்ணையென வோதுதம பேர்ப்பகுதி யாய
பெண்ணையரன் மோலிகொளு மாலுமுறம் பேணும்
பெண்ணையென வெண்ணியிறு மாந்தனைய பெற்றிப்
பெண்ணைநிரை சாலவு நிவந்தன பிறங்கும். (அச)

எவ்வயினு நேடிய வொணுவிளரி யாழிற்
செவ்வழி யிசைக்குந ளத்தியர் திளைத்துத்
தெவ்வவருள் கின்றபரி சிற்பொருள் கடுப்பப்
பவ்வமணி செம்பவளம் வெண்பணிலம் வீசும். (அரு)

வானுயர் புகழ்ப்பெரிய வண்பதியை யாது
மீனமிலர் பட்டினி மெனப்பகரு மாற்று
லேனையொரு நால்வகை நிலத்து மிலிராச
தானிகம ரத்தனைய மித்தலை தழைக்கும். (அசு)

### வேறு.

திரைவளர் போந்து குத்த திஞ்சுவை நுங்கு குன்று
வரைவளர் கடுவ னாட்டி மந்தியைப் புலவி மாற்றும்
வரைவளர் சந்து வீழ்த்த மதுவிறல் பிழிந்த யிற்றித்
திரைவளர் பரத்தி மார்க்குச் செறிதுனி தீர்ப்பர் சேர்ப்பர். (அஎ)

பாலையங் குராப்பூ வீரைப் பரப்புகப் பாவை யென்று
மாலுமன் மழவு மின்னார் மடியிரீஇ யமுதன் பிக்க
வேலையுந் தியகூன் சங்கை வெஞ்சுரப் பேதை மாதர்
கோலிய கெடவ ரற்கட் குழிசியாக் கொண்டு வப்ப. (அஅ)

கானகன் விளங்கா யூழ்த்துக் கழிச்சிறு ழியா மைத்த
வானசிற் றிலேச்சி தைப்ப வார்கலி நாளி கேளப்
பானறும் பழஞ்சி தர்த்துப் பாடிப்பாற் குடந்த கர்க்கு
மேனைய ரின்ன செய்தார்க் கிடர்பெரி திழையார் கொல்லோ. ()

வயலையங் கொடிசெய் யிற்போய் மருவியர் நெய்தன் ஞாழல்
வியன்முக மலரு மங்ஙன் மென்றுகிர்க் கொடிதாய்ப் புல்ல
நயனுற்இப் பழனக் காஞ்சி நகுமெவர் மகிழ்ச்சி பூவார்
மயல்விளை கொங்கை வாய்ந்த வல்லிகள் வலிந்த ணைக்கின். (சுo)

மலைத்தவாச் செயலை வீயும் வனத்தள வலரும் பண்ணை
நிலைத்தவாந் தேமாம் பூவு நீரச மலரு முந்நீர்க்
குலைத்தவா நீலப் போதுங் குழீஇநிறை வன்பாற் கூவ
லலைத்தவாள் வென்றிக் காம னவநா ழிகையே போலும். (சுக)

அவாசிமா திரத்தின் கண்ண தழகிது தெங்கு மல்லற்
றுவாமதி மருமா னைய வுசிதனுக் குரிமைத் தென்னுந்
தவாதவிப் பொருள ளைத்துந் தகவொ ருநாமஞ் சான்றோர்
சிவாகர மாமி தற்குத் தென்னடென் றிட்டார் போலும். (சுஉ)

ஆகத்திருவிருத்தம். ககo.

நாட்டுப்படலம் முற்றிற்று.

---

## நகரப்படலம்.

பயன் செழித்துள பாண்டிநன் னாட்டனி
நயந்து தன்ன நவின்றன மின்னினி
வியன்கு லாந்திரு வெற்றி நகர்வளத்
தியன்ற வண்ண மிசைக்கப்புக் காஞ்சில. (க)

நிகழ்த்த நீடு நிகில வுலகத்தும்
புகழ்ச்சி பூண்டமர் பொற்பதி யாவையுந்
தகப்பு றக்கொடை சார்த்தமை பேரினுற்
றிகழ்த்து நீரது சீர்த்திரு வெற்றியூர். (உ)



சேண ளிப்பவ னின்னுதன் சேட்டெழில்
காண வோரிரு கண்ணமை யாவெனக்
கோண நீர்விழி யாயிரங் கொள்ளுமா
றியானர் கூர்வ திருந்திரு வெற்றியூர். (௩)

என்னி னத்தொரு வாசுகி யீங்குமுன்
னன்னர் பெற்றென நாளும் பெறுகெனப்
பன்ன சேசன் பரிந்து பரிப்பமீ
மன்னி நிற்பது வான்றிரு வெற்றியூர். (ச)

சூரி யன்புறஞ் சூழ்தமம் போக்குவோ
னேரி னேக நெடுஞ்சமழ்ப் பெய்துபு
பாரி சத்திற் படர வகவிருள்
வாரி வாய்ப்பெய் வதுதிரு வெற்றியூர். (ரு)

தூய்மை யெரப்பினுந் துன்னினர்க் கொல்லுந்தன்
றீமை யோர்ந்தங்கி தேவ னுடல்வெம்பத்
தாய்மை யுற்றடித் தார்தமை வாழ்விக்கும்
வாய்மை சான்றது மாந்திரு வெற்றியூர். (சு)

அமர ராரிப் பொய்யயிர் தந்தருங்
குமுத நண்பன் குறைந்து விளர்ப்பமெய்
விமல வாநந்த மெய்யுயிர் தம்மெளி
தெமரை யீவ திசைத்திரு வெற்றியூர். (எ)

கருத்தி னதுந் தனியென் றுங் கண்ணுறுங்
குருட்டி யற்கையைக் கோட்லி னோர்பெய
ரிருட்டு நேர்சம னந்த னெனப்பெற
வருட்பெ ருக்கிற் றணிக்திரு வெற்றியூர். (அ)

இனநி திப்பொலி வீண்டிதை நோக்குங்கா
லெனது வாழ்வெற் றெனும்பெரு நாணினுற்
றனதன் சேய்த்து வடதிசைந் தம்புகக்
க்னதை வாய்ந்தது காத்திரு வெற்றியூர். (கூ)

வறிஞர் வேட்ட வழங்குதற் கஞ்சலின்
வெறிய கற்ப விருக்க குலத்தினை
யறிவு மிக்கவ ரஞ்சுத ருவெனச்
செறிவன் மைக்குநக் தென்றிரு வெற்றியூர். (க0)

தெள்ளு நீர்கடற் றெவ்விச் சிலபகல்
பொள்ளெனப்பொழி யும்புய லேங்குறத்
தள்ள லின்றென் றுந் தம்பொருண் மாரிபெய்
வள்ளி யோர்த்து வனை திரு வெற்றியூர். (கக)

ஓதி யோதிய ரோர்வருஞ் சீர்வருஞ்
சோதி யிந்நகர் துன்னல் குறித்தன்றே
மோதி முத்தெறி மொய்திரை யாழிசூழ்
மேதி னிக்கண் மிதித்திலர் விண்ணவர். (கஉ)

பூவி ருக்கையிற் பொற்பொடு வைகனு
மேவி வாழ்கின்ற வெள்ளை நறுங்கம்பக்
காவின் மாந்தர் கங்கல்விகொள் பாக்கவர்
நாவின் வைகலி னுமக ளாயினள். (கங)

வார மல்கு குருவின் றலையின்
பூர மன்னு மொருபுத னாட்கிய
வார மல்கு குருமலர்த் தாவிலின்
பூர மன்னும் விபுத ருவண்பலர். (கச)

மான மில்பொது மாதர்த் தழால்சுரா
பான மாதிசெய் பண்ணவ ரேக்கற
வின மாக்க மிகந்துநல் லாற்றிடை
யூன நீப்ப வொழுகுவ ருங்குளார். (கரு)

வேக நஞ்சு மிடைமுள் ளெயிற்றுவாய்
நாகர் காம நுகர்ச்சி நயப்புடைத்
தாக லெங்கென் றமிர்த மயாநந்த
போக மார்வரிப் பூம்பதி மாக்களே. (கசு)

மிகுத்த மேன்மைத் திருவெற்றி யூர்வளந்
தொகுத்து ரைத்தனந் துன்னும் புறடையிடை
யிகுப்பி லாவக மென்னுறுப் பானகர்
வகுத்தி யாம்பகர் வர்மொரு வாறரோ. (கஎ)

## புடை நகர்.

கதலி நெட்டிலைக் கட்பொலி திங்கண்மீப்
பொதுளு சண்பகப் பூக்குலை மேல்வஞ்சி
மருவு கும்பலை வாசவற் குண்கலப்
பதமி சைச்செம் பருப்பினெய் வார்த்தென. (கஅ)



பூக மீதுந்திப் பொற்கனிப் பாங்கிள
நாக வல்லித் திரைய னகுவது
மேக வாகன் மிசைந்தபின் மென்றிடப்
பாக டைத்தொகை யேந்திய பான்மைத்தால். (ககூ)

சாந்து கொட்டி நறியமென் றண்புனல்
வேந்த னுகத்து வீசலின் மிக்குயர்
மாந்த ருப்பழச் சாறு வழங்கிய
தேந்து ளிக்குஞ் செறிமலர்க் காஞ்சியே. (உ0)

நீடி லாங்கலி கெற்றிவெண் பாளைகள்
மாட லங்கமைம் மாங்குயில் கூவல்வா
ணுட னுண்மகிழ் நண்ணக் கவரியங்
காடி ரட்டிக் கனிந்தபண் பாடல்போன்ம். (உக)

கொண்ட லூர்திமுற் கொள்பணை வாய்மையார்
றண்டை யார்ப்பெழத் தையல ராடலின்
மண்டி யோங்கு மருதிற படர்ந்துபல்
வண்டி ரைப்ப வயலை நுடங்குமால். (உஉ)

திரண்ட தெங்கிள நீர்க்குலை தீங்கரும்
பரம்பை யொண்கனித் தாறிவை யாதிய
நிரந்து சேணி னிலாவுங் கழனிதான்
புரந்த ரற்கிடுங் கையுறை போன்றரோ. (உங)

தக்க போகி முகமன் றழைப்பித்து
கெக்க பண்ணைக் குதவு நிதியத்தி
னுக்க பொறபி... து மகரந்தந்
தொக்கு திர்ந்து துறும்பொழிற் கீழெலாம். (உச)

சில்லி யொன்றுடைத் தேரவற் காலொன்றுப்
புல்லும் வைதிகப் பொற்சந்த னத்தும்பர்ச்
செல்ல வாய்த்த சிறப்புள்ளி யோங்கியாங்
கெல்லெல் றிக்கு மிரத நிமிர்வன. (உரு)

பரங்க ணொற்றைக்கும் பாகம் பிரிகலா
வரங்கி டைத்ததம் மன்மேக் காணிய
நிரம்பு காதலி னீள்வரை மொய்த்தெனச்
சுரந்த மும்மதத் தும்பி துதைந்தன. (உசு)

நனைத்த கற்பக நாடுபுக் கஃதில்வூஉம்
தனைத்தி னைத்தனை யானுந் தகைவின்மை
நினைத்த சிப்ப நிகர்ப்ப விசும்புதாய்க்
கனைக்குங் கந்துக மந்துர மோர்சிறை. (௨௭)

நகை வில்வல பற்குன னெய்திய
வினைதீர்ந்த விசயப் பெயருக்கு
வாகையில்லி யெனும் பொருண் மாட்டிறு
ரோகை வீரர்கல் லூரிக ளோர்புடை. (௨௮)

கனைத்த நெஞ்சு ணெடிது கருதுபு
சமைக்கும் வானவர் தச்சனச் சோவென
வமைத்த னைத்துக் கருவிபு மத்தத்தா
னிமைப்பி னீயும் பவன ரிடனேர்சார். (௨௯)

இடைநகர்.

அணிகொ ணீல மிருவகை யம்புயந்
தணிய பாசடை பாயதடந் தடந்
திணிபொ னிந்நகர்ச் செல்வி புனைந்தபன்
மணிகு யிற்று மதாணியை மானுமால். (௩௦)

அர்த னத்தினைத் தாக்குசெய் குன்றகம்
பரவு தொய்யி னகக்குழி பற்குழி
விரவு தம்முலை வீழ்தலிற் சிறியாங்
கரவ மேகலை யார்மிதித் தாடுப. (௩௧)

உச்சி நீல முறுத்த பளிக்கறை
பச்சிருங் கறை பாற்று முயற்சியா
னச்சி முற்றண்ட நீத்திவ ணண்ணிய
வெச்செனு முழு வெண்மதி யேய்ப்பன. (௩௨)

காமர் சாலிக் கடிநகர்க் கண்ணவாம்
பூம துப்பொழி நந்தனம் போறலிற்
றூம விந்திரன் றன்மலர்த் தோட்டக்கு
நாம மிட்டன னந்தன மென்றரோ. (௩௩)

மணங்கொள் பூந்துகள் போர்ப்ப மணியயில்
புணர்ந்த சென்னிப் புளின நகுயினர்
சுணங்கு லாந்துணைச் சூசுகக் கொங்கையி
னிணங்கு சாருப் பியந்தவத் தேன்றென. (௩௪)



வாசச் சுண்ண மகளி ரவைப்புழி
வீசப்பட்ட வுலக்கை விதிர்துகள்
மூசப் பெற்றுவின் மொய்தருப் பொன்மலர்
மாசற் றென்று மணங்கமழ் கிற்குமே. (௩௫)

கந்து கம்பயில் கன்னியர் கைத்தப
வுந்தெ ழிற்கச்சி னூடு புகுந்தவென்
றந்தில் வாரவிழ்த் தாய்ந்திவை பந்திலை
நந்த னம்மெனத் தேர்ந்தனர் நாணுவார். (௩௬)

செங்க ழுத்துச் சிவணலிற் கந்தியின்
பைங்க ழுத்திற் சுருக்கிடும் பான்மைபோ
லுங்கண் யாத்த மணிவடத் தூசன்மேற்
றொங்க லோதியர் தூற்றசைந் தாடியார். (௩௭)

கொங்கை யாய குமிழிக் கவின்வெள்ள
மங்கை மார்கையின் வாவுமுத் தம்மனை
பொங்கு நீத்தத்துப் பூத்தசெந் தாமரைத்
தங்கி மேலெழு மோதிமத் தன்மைய. (௩௮)

தென்னு மாதர் சினையினின் றெட்டொணு
வள்ளி னார்ப்பறித் தீமென வவ்வுரை
கிள்ளை பூவை கிளப்பவென் றுடவ
ருள்ளி வாளா வுறைதல்கண் டுநர். (௩௯)

வாவி யாட்டயர் மங்கைய ரானனம்
பூவி னூறப் புனலிற் காத்தலும்
மாவின் மைந்தர் மனையை முகமெனக்
கூவி முத்தங் கொளநகைப் பாரவர். (௪௦)

அகநகர்.

வேறு.

தலைவ கன்றுசூழ்ந் தாழ்ந்தபே ரகழிகார் தடிந்து
கவர்பு பெய்தன்றிப் பயப்படாத் தன்பழி கவற்றிக்
குவல யத்துயிர் பருகுமா றுநவுதல் குவியூஉ
வுவரி சோற்றுநன் னீர்பெறீஇச் சுலவிய தொக்கும். (௪௧)

தெவ்வி வாவுவெண் டிரைநுரை செறிதடங் கிடங்கு
நவ்வி நோக்கியோர் கூறுடை நம்பற்கு மேனாள்
வெவ்வி டந்தரு பவந்தெற விழைந்தவ னருளுஞ்
செவ்வி யோர்க்குகாத் திருக்கின்ற பாற்கடல் சிவனும். (௪௨)

வரிவில் வாங்கிமுப் புரம்பொடி படுத்தவன் மாட்டுப்
பிரிவில் பேற்றினை மாற்றவ ளிவ்வயிற் பெற்று
எரிய நோன்புழந் தியாமுமத் தடைதுமென் றணுகிப்
பெரிய கங்கைசூழ் கிடந்தெனப் பாம்புரி பிறங்கும். (௪௩)

அன்ன கங்கைமா நங்கைமு வுலகினு மகலா
மன்னு தன்றிற மிம்பரார் தெளிதர வயக்கி
யென்ன நீடகழ் கிழ்ப்புன லாற்பில னிசைந்து
பொன்ன கர்க்குய ரலைக்கொழுந் தோச்சுபு பொலியும். (௪௪)

கதிர வன்மணி யிரதமிம் மதில்வழிக் கலவி
மதிமு டிப்பிரான் றிருத்தளி வலங்கொள்வ துணரார்
முதிய மேருவை நபத்துலாய்ச் சூழ்மென மொழிப
பதியும் வாயின்றி யுருளுரு ளாதிலை பயனும். (௪௫)

ஈசற் கென்னினத் தொன்றுபெண் கொடுத்ததொன் றென்றும்
வாசத் தானமாய் மரீஇயதொன் றுடுசிலை வாய்க்கு
நேசத் தியானுமன் னோன்பதி யரனென நிற்கென்
றேசற் றன்மிய திகிரியங் கிரிபொரு மிஞ்சி. (௪௬)

பரந்து பாரற விசும்புற நிமிர்தப் பாத்தான்
கரந்து தப்பருஞ் சருவசங் காரகா லத்தில்
வரம்பில் பல்லுயி ருலகெலா மொடுக்குபு வைப்ப
வரன்ப டைத்ததோ ரரும்பெருங் கூடுபோன் றன்றே. (௪௭)

மருவு காளொடு கோளுமிவ் வோங்கெயில் வட்டத்
திருவு கேதனத் தியாப்புண்டு வழங்கல்கண் டிருந்துந்
துருவ சக்கர வட்டம்பிணித் தியப்பதாச் சொலலென்
சுருதி யாதியாற் றுணிவது காட்சியில் வழியே. (௪௮)

நல்ல றம்பொரு ளின்பம்வீ டெனப்படு நான்கு
மல்ல லம்புரு டார்த்தமுந் தனித்தனி மகிழ்ந்துட்
செல்ல வெண்கணு னியற்றிய நெறிகளிற் சேர்க்கும்
வல்ல பல்பொறி கொச்சியி னாற்றிசை வாயில். (௪௯)



குருவிற் கான்றுய ரேழ்நிலைக் கோபுர நான்கு
மிருபத் தெண்சிவா கமத்திறு லிலங்கியின் னுயிர்க்குப்
பருகப் பேரின்பம் பயப்பதாற் பாதமென் றுலகு
தெருளத் தற்பர னிறுவுநீள் குயியெனத் திகழும். (௫௦)

நாம முப்புரத் தவரின்மிக் கினிப்பலர் நண்ணிற்
காம மேருவோ வைந்திரு காந்தும் போர்புரியக்
தாம வில்லினும் வேண்டுமென் றிறைசமைத் திருவு
மேம வெற்புநான் கெனவுமச் சிகரிக ளிலங்கும். (௫௧)

பரத்தையர் வீதி.

சாதி யாதிமேம் பாடுநோக் காதன்பு தந்தார்க்
காதி நாயக னின்பளிக் குமெலன வம்பொன்
போத கல்குமெய்ப் புல்லர்க்கும் போகத்தை யுதவி
யாத ரித்துவாழ் கணிகையர் சேரியாங் கரந்தம். (௫௨)

துறவர் யோகியர் கற்றவர் நெஞ்சமுஞ் சுழன்று
மறுகு தற்குறி யித்தமாய் நிற்றலான் மறுகென்
றுறுக வின்பரத் தையர்தெரு வாகுபே ருற்ற
பிறபல் வீதிக்கு மினம்பற்றிச் சென்றதப் பெயரே. (௫௩)

புணர்ந்த நேகருண் டெச்சிலாம் பொதுமினார் மெய்ம்மை
யுணர்ந்தும் வைதிக பூசர ரங்கலா ருடம்பை
மணந்து துய்ப்பர்தீ மடுத்தலுன் மடுத்தவான் சுராக
ளிணங்கி லாரிழி பென்றுதாத் துணிந்தன ரேயோ. (௫௪)

தலைவி தந்தைதாய் தமரெலா நோதகத் தணந்து
கலையு ணர்ச்சியோ டெல்வலி கைப்பொரு டொலைத்து
விலைம டந்தையர் முயக்கவாம் வியனில மாறு
துலைவி லாதவீட் டின்பமே யன்றெனப் தெவரே. (௫௫)

எவர்க ளுந்தமைக் காமுற வெட்டுணை யேனு
மவர்கண் வேட்கையின் றுடையர்போ னடிக்கின்ற வாற்றல்
சிவனு கின்றவெங் கவர்மனப் பரத்தையர் சிறப்புக்
கவர்கொ ணுவுடைச் சேடனே வல்லுவன் கழற. (௫௬)

பூரி யோரையு மிருநிதி கொடுத்தனள் புல்லும்
வேரி வாரிச வெறிமலர்ப் பொறிமகள் வெள்கச்
சிரி யோர்வயி னும்பொருள் கொண்டவர்த் திளைக்கு
நாரி மாரியல் சேரியி னலனெவர் நவில்வார். (௫௭)

உரிய மர்த்தனு லிங்கன சும்பனத் தோடு
கரிக ரங்கர ணாதிகள் கணிகையர் மனைப்பாற்
றெரியு மாறெழு தோவமு மைந்தரைத் திணிமால்
புரியு மேலனை யார்மயல் புணர்ப்பது வியப்போ. (௫௮)

பாய நீளிடைப் பண்டங்க ளறுதியிற் பகர்ந்திட்
டாய வற்றினுக்கு விலைகொளும் வணிகரேக் கறுத்தம்
மேய வங்கத்தை யரிதினிற் றெடுவித்து விலைகொள்
மாய மங்கையர் தெருக்கடந் தாமொரு வழியால். (௫௯)

## கடை வீதி.

நெருங்கு வண்டிரை மாலையா லஞ்சன நிறைவால்
விரும்பு மாண்சுகப் புளினத்தாற் பன்னுரை மிடைவா
லிரும் பயந்தழீஇக் கோடலாற் கடல்பொரு மிறவா
மருந்து வேண்டினும் வாய்க்கும்பே ராவண மன்றே. (௬௦)

மருமலர்க்குழன் மகளிரங் காடியுண் மருவி
யொருபொ லங்குடை விலைவினு வுறுதலும் விற்பே
ரிருபொ லங்குடை மேந்தினி ரெற்றுக்கி தென்னப்
பெருகு நாணினுன் முறுவலித் தயல்வயிற் பெயர்ப. (௬௧)

குன்று குன்றுகின் கொங்கையர் கடையிடைக் குறுகி
யின்ற ருங்கனி யெடுத்தலும் பகர்நர் மென்றிரத
மொன்று நம்மித முறநிலா டொப்புநோக் குதற்கோ
வென்ற னார்புரி யிளநகை யேற்றுநல் கிடுவார். (௬௨)

உருண்ட வெண்டர ளத்தொடை சில்பொரு ளுதவூஉத்
திருந்து பூண்மினார் வாங்குபு செங்கையிற் சேர்த்தி
யரும்பெ றற்றனி மாணிக்கக் கோவையிஃ தச்சோ
மருண்டு வாணிகர் வழங்கின ரெனத்துணை இப் படர்மார். (௬௩)

வெச்சில் கோங்கரும் பொருவனீ கெனலும்பூ விற்பாள்
பிச்சி யுண்டவை யிலையெனப் பிச்சியே முன்னம்
வைச்சி ருக்குமிவ் வென்னென்றுன் வளர்முலைச் சுட்டி
யச்சின் மென்மொழி யணிநகைத் தளவல ரளித்தாள். (௬௪)

விரிம லர்த்திரள் பகர்மினு ருயிர்ப்பொடு விரவிப்
பெரிது நாறுபொற் குமிழ்முகை யெண்மையிற் பெற்றுத்
தெரிவை மார்மடத் தாற்கொடுத் தனர்சிறு விலைக்கிவ்
வரிய சம்பகப் போதென மைந்தர்கொண் டகல்வார். (௬௫)



உதிர்ப ராகவி மாறுவாள் வாய்நகைஇ யொருவன்
மதிம லர்ந்தசே தாம்பனீர் தருகென மன்றல்
விதியின் மேயினும் பிக்கலா லணைய்து வேற்றுப்
பதிக வண்டார்க்குப் பயப்படா தென்னலும் பரிந்தான். (௬௬)

பொன்னம் பாவையை மாதென விளித்தயற் பொலியு
நன்னர் நங்கையைப் பாவையாக் குறித்தொரு நம்பி
யின்ன தன்விலை யாதென்றுங் கவளசிந் திடலு
மென்ன விம்மித மெனையிது சிரிப்பதென் றிகந்தான். (௬௭)

தூம்ப னிப்புனல் சந்தனம் புழுகுகத் தூரி
பூம்ப சுங்கருப் பூரங்கோ ரோசனை யாதி
தாம்ப கர்ந்துளார் சார்நர்முன் மோப்பமெய்த் தடவு
மேம்ப டன்னவை காதமா நுங்கடி வீசும். (௬௮)

அலைக்கும் போர்வயி னிந்நகர் வயவர்மார் பகங்கை
மலைக்கொம் பூன்றுதோ றழுங்கரை வளர்வது தேறிற்
சிலைக்கும் பல்சனக் கூலத்துச் செறிந்திள மடவார்
முலைத்திண் கோட்டிடை முட்டிண்ட பயிற்சியிற் போலும். (௬௯)

ஒருக வுத்துவா பரணம்பி தாம்பர மொன்றே
மருவு கண்ணனில் வாழ்வுறு மிந்நிரை வரம்பில்
குரும ணிக்கல னளப்பரும் பொற்கலை குழுமிப்
பெருகு பூவணக் காவணத் தாவணம் பிறிமோ. (௭௦)

### வேறு.

கொத்தினீ லுபரி கைப்பாற் குறுகுங்காற் குயின்க றுத்தும்
பத்திமா ணிக்க மாடப் பாங்குசெல் பொழ்து சேந்து
நித்தில மாளி கைச்சார் நிகழ்வுழி விளர்த்துந் தோன்று
மித்திற முணரா ரேனைக் காரண மிசைப்ப ரம்மா. (௭௧)

போதநீண் மேனி லைக்கட் பொற்றைறயீ மருங்கு போகை
காதலா றுடு வரைக் கடவுளா யுன்னுற் றின்ன
மாதர்தம் வடிவி யற்கை வனப்பினை மறைத்துப் பூணுற்
பேதையர் மடவா ரென்னும் பெயர்ப்பொரு டிகழ்ந்தா ரென்ப. ()

வணக்குநந் தருவ ரன்னத் தரமிய மருங்கு லாவுங்
கணங்குழைக் கன்னி மாரைக் காண்டொறுங் கரைந்து தங்கட்
கிணக்கமா நெறிக்கெய் தாமை யிரக்கதா சுரபை சாச
மணத்தினு லேனுந் தோய்ந்து நலனுண வலிப்பர் மாதோ. (௭௩)

சரசசல் லாப மன்ம தனையவன் றேவி நோக்கிச்
சுரதநான் முறைவ ழாதித் தோல்பதி மாறு ரோடு
வரமுயல் வண்ண மைந்தர் மாஇப்புரி யிரதி மான
விரதிசெய் யெனப்பல் காற்றொழ் விரதிப்பேர் படைத்தாளன்னாள்.

மானமும் பொறபுங் கற்பும் வாரமும் விரகு மொன்றி
யானவிம் மின்னார்முன்ன ரரம்பையர் நான்மீ தூர்ந்து
கூனிய மேனி கொண்டு குரங்கெனத் தோன்று நீரால்
வானர மகளி ரென்று வழங்கிடப் பட்டார் போலும். (௭௫)

மேக்குயர் மாடத் தும்பர் விழைதகு கொண்கர் தூய்ப்பச்
சேக்குமென் னனிய வாயிற் றிருசுவை யழிந்த வெள்ளம்
வாக்கிழுற் றெள்ளிகூர் கல்லார் மறுவறு முகத்தை யொவ்வா
வேக்கமிக் கன்றோ சோம னிருக்கைய ரோக முற்றான். (௭௬)

பொருவரு நிலாமுற் றத்திற் புறக்கடிப் பூவை மார்தம்
வருமுலைக் கச்சி யாப்பை மணாளர்சற் றவிழ்ப்ப வெள்ளிக்
குருமணி வேட்ட விந்துக் கொடியவன் கரந்தீண் டற்கு
வெருவினர் போன்ற கத்தூள் விரைந்துபுக் கொளிப்பர் மன்னோ.

எழில்வடி வினிது கண்டு மின்னிசை கேட்டுங் கொங்கை
தழீஇயு மதர முண்ணுந் தாளத்தா ரமுதந் துய்த்துங்
குழன்முதல் வெறியு யிர்த்துங் கொழுமலர்க் கொம்ப னார்சார்
நுழைமதித் தினிதோண் மஞ்சர் நுகர்வரைம் புலனொ ருங்கே. ()

எளியர்கைத் தலத்துச் செல்வ ரிருநிதி யொடுபெய் நீராற்
களிபடு தெருவிற் செல்லிற் கால்கழீஇ மனையுட் சார்வார்
விளிவிலிவ் வூர ரின்ன வினைமைகண் டெவரு மாரும்
வெளிபுகூஉ வரிற்றாண் மணல் விதியென வாச ரித்தார். (௭௯)

பூங்கொடி காலி னல்ல போன்மினார் புரியுங் கூத்து
மாங்குயில் வாய்வின் டன்ன பாடலு மதுவார்ந் தாங்குத்
தேங்கிய நரம்பின் வீணை கானமுந் தினைத்த மன்ற
மாங்குபற் றின்மை யால்வீழ்ந் தவிர்தரு கதன்மை யேய்க்கும். ()

வாரண வரம்பை பூக மலர்ப்பந்தர் மணிவி தானம்
பூரண கும்ப மேமுற் பொலிவுகித் தியமென் றோரார்
காரணம் புனைதற் கென்றோ கணைமெனும் பிறசேதத் தாரைத்
தோரணத் தாளக் கோவைச் சுடரினும் சிரிக்கும் வீதி. (௮௧)



வெங்களிற் றெருத்த மீது வின்முழு தாளி பொத்தும்
புங்கவன் சிவிகை யுள்ளாற் புலோமசை போன்றும் பல்லோர்
திங்கள்வெண் கவிகை நீழற் றிப்பியப் பவனி போது
மங்கல வியமுழக்கே மலிந்துள ளெள்ள ரேறும். (௮௨)

அறநெறித் தொன்று தொட்டீண் டமரனு லோம ரோடு
பிறநகர் நின்றும் போந்த பிரதிலோ மாதி யேனை
ருறவுயர் நான்கு சாதி யொழுக்கிழுக் காது செல்லத்
திறன்மலி யேது வாகிச் செருக்கிவா ழிருக்கை பல்ல. (௮௩)

மன்னர்நூன் முறைச்செங் கோலு மறையவர் வரைப்பைங் கோலுந்
தென்னிளங் கோக்கள் கோடாச் சீர்த்துலைக் கோலுங் கொள்ள
நன்னரேர்ப் பகடு கைக்கு நலத்தகோல் கரத்துக் கொள்ளும்
பின்னவர் பீட்டின் வைகப் பெறுவன மறுக நந்தம். (௮௪)

உழுதுண்டு வாழ்கின் றாரே வாழ்நர்மற் றொழிந்தா ரெல்லாந்
தொழுதுண்டு பின்செல் வாரென் றுன்றவர் சொற்ற வாற்றாற்
பழுதென்றுங் கெழுமாச் செல்வப் பகீரதி குலத்தார் மேன்மை
முழுதுங்கட் டுரைப்பான் வல்லான் முதுக்குறை யனந்தன்றானும்.

பெருங்கலம் பாண்டிற் பாண்டில் பிறவுய்த்துச் சேணமத் தேய்த்த
வரும்பொருள் வருவித் தியாரு மவற்றினை விலைந யப்போ
டிருந்துழி யிருந்தே கொண்மா ரெண்ணமயி னுகர வன்பிற்
றருந்திரு வாளர் மன்னுந் தடந்தெரு மிடைந்திலங்கும். (௮௬)

காரியல் வலிய பாசக் கட்டினு லரகா மத்தெம்
மாரியன் மேனுங் கீழு மாவியை யியக்கு மாபோற்
சீரிய படங் கார்ப்பாரச் சிமிழ்ப்பினால் வாலுப்த் திம்பர்ச்
சேரிய வீர்த்து நாய்கச் சிறார்வினை யாடு கிற்ப. (௮௭)

தணியவி மாலை நாலத் தமனியங் கொடுகு யிற்றி
வணிகர்பொன் மேனி லைப்பான் மகாரினம் விடுத்த வானி
மணிமயத் திலங்கை யெய்த மகேந்திர வரையிற் றூய
வுணிகிளர் நெடிய கூலத் தஞ்சனை சிங்க மன்ன. (௮௮)

தூயதண் பளிங்க டிப்பிற் றுகிர்க்கொடி விறகு சேர்த்திப்
பாயபொற் றகம்பு மேலாற் பசிஇப்பனி நீரு லைப்பெய்
தாயமுத் தரிசி போகட் டவிருஞ்செம் மணித்தீ யூதி
வாயமை நாய்கப் பேதை மார்சிறு சோறட் டார்வார். (௮௯)

கற்றவொல் கேள்வி யொட்பாங் கரிசில்பல் செல்வம் வண்மை
முற்றிசை சைவ சாரா முதலிய வுயர்ச்சி யெல்லாந்
தெற்றென வுடைமை பற்றிச் சிரேட்டிக ளென்னு நாமம்
பெற்றுளார் பெருமை யெம்மாற் பேசலாம் படித்தொன் றன்றே.

பரந்தபார் நாற்றுப் பத்துப் பைத்தலைப் பரிப்போ ருணர்த்
திரண்டொன்னீ டறப்புணைத்துத் திண்மையுங் கவினும் வாய்ந்த
விரண்டு தோள்வலியான் ஞால மெனைத்தையு மெளிது தாங்கித்
தாந்தா ரெனும்பேர் வாய்ந்தோர் துறுமிய வீதி பல்ல. (௯௧)

முனிவொடு போர்மேற் கொண்டு முரணுப் தமைப்ப கைத்த
மனிதரைத் தேவ ராக்கி வான்வயின் வரம்பில் போக
மினிமையிற் றுய்ப்ப வுய்ப்ப விந்நகர் வேந்த ரென்று
வனிசமு மடுத்தார்க் கன்று மாற்றுசீ ரறைதற் பாற்றே. (௯௨)

உளமுயன் றரிதிற் றூண்பெற் றுளதி லோர்க்கமைப் போநுங்கை
வள்ளைகண் ணூற்று வெஃகி மான்றதன் புன்மை யுன்னி
முளரிவாழ் புத்தே ளூனு முகத்தனுயச் சமழ்ப்புக் கூரப்
பளகிலா வொழுக்கங் குன்றாப் பாப்பனச் சேரி பல்கும். (௯௩)

ஆகவ னீய மாதி யக்கினி தனிவ ளர்ப்பார்
தாகநீ டிதி யாயோர் தம்வயிற் றழல விப்பா
ருகநா வாறு தோந்தெவ் வுயிர்க்குந் தண் ணளிநல் கேவா
ரேகநா யகன்பா லென்று மின்னரு ளேறபா ரன்னோர். (௯௪)

எனைவர்க்குந் தம்மை யேய்ப யியற்கையிற் கிடந்த தொன்று
வனைவர்க்கு முய்தி செய்தி யரியவற் றரிதென் றோர்ந்து
நனைவார்க்கத் தீச பூசை நம்பொருட் டியற்றி வெய்ய
வினைவர்க்க நீத்த வாதி சைவர்வாழ் வீதி பல்ல. (௯௫)

சேதன பதார்த்த முற்றுஞ் சிவபிராற் கடிமை யென்றும்
போதமில் சடமெ லாமப் புண்ணிய துடைமை யென்றுந்
தீதற வுணர்ந்து தேறித் திருவருள் வழிச்சென் றொன்றி
நாதமே லின்பந் துய்க்கு ஞானியர் மடமு முண்டால். (௯௬)

பைவகைப் பாப்புக் காப்புப் பரம்பரன் றளிமஞ் சூழ்ந்த
மைவகை தவழும் பஞ்சா வரணமா மதில் கம்புக்
குவகை வழிபட் டேத்தி யுள்ளநெக் குருகு வாரை
யிவகைப் பாசஞ் சாரா தமைத்துள தடையே யன்ன. (௯௭)



இருவினை பொருவி யோங்கி யெண்மைதீ ரிஞ்சி யும்பர்த்
தருமவெள் விடையு ருக்க டயங்குபு புலப்ப டுத்தும்
பொருவிகந் துயர்ந்த சைவ புண்ணியப் பகுப்பி யார்க்கு
மருமைய கிட்டக் கிட்டி னளிக்குவீட் டுலக மன்றே. (௯௮)

மேவிய விதிவ ழாமே விருப்பினர் தன்பாற் றோய்ந்தோர்
தீவினை யுடைந்திவ் வாறு சிதறுமென் றெவருந் தெள்ள
வோவியப் பத்திப் பித்தி யுழிமணி யணித்த ரங்கம்
வாவிமன் பொருது சிந்து வாசுகி வாவி மன்னும். (௯௯)

தொடங்குறு ஞான்று சாலத் துன்பமாய் முடிவி லின்பாய்
மடந்தபப் புரியுங் கல்வி மாணவாய்ப் பெய்யுங் காலைத்
திடம்படக் கைத்துப் பின்னர்த் தித்தித்துப் பன்றோ யோடு
விடந்தெறும் பாச டைத்து வேம்பொன்று நிழற்று மாங்கண். ()

பொன்னணி மாட கத்திற் பொலிதிவ வியாழோ டாங்குக்
கன்னவி யுருக்குந் தீங்கா யகரிசைப் பக் கேட்டுக்
கின்னர கானமென்ன வியந்தனர் கிளந்த தீராக்
கின்னர நாமம் பெற்றுக் கிளர்ந்தன ரொருசார் வானோர். (௱௧)

மாநகை பெருக வங்கண் வஞ்சியர் புரிந டத்தைத்
தூநகை யரம்பை மாருட் கிருகு லொருத்தி நோக்கிக்
கோநகை மணிப்பூ ணின்னோர் குழாத்தெதிர் பிறந டிப்பின்
மேநகை யென்ற வாற்றுன் மேநகைப் பெயர ளானள். (௱௨)

சிவாகமத் தொகுதி யார்ப்புத் திப்பிய மறைமு ழக்குந்
தவாதவி ரைம்பு ராணத் தழக்கமு முலக முய்வா
னவாய்நம குரவர் சொற்ற வருட்டிரு முறையி சைப்பு
முவாமதி யுதயங் கண்ட வுவரிநா னெனவுங் கோங்கும். (௱௩)

வாதியாச் செந்தீ வண்ண வன்மீக வரதன் வாழ்க்கைச்
சாதிமா ணிக்கஞ் செற்றித் தயங்குபொன் விமானக் கோயில்
பாதிமா துடனின் றூடல் பயிலுமப் பரமன் றன்னைச்
சோதியுட் சோதி யென்னுந் தொன்மறைப் பொருள்வி ளக்கும்.

வயங்கொளி பரப்பு மின்ன மந்திரத் தியாரு நான்மைப்
பயன்பெற வருளின் வைகும் பழம்புற்று நாதன் பல்சீர்
முயங்கிய வமிர்த மன்ன முதிர்நறுஞ் சுவைய காதை
யியம்புமா தொடக்கஞ் செய்தே னினிப்பொழிந் தொடக்கஞ்
செய்தேன். (௱௫)

ஆகத்திருவிருத்தம். உகரு.

நகரப்படலம் முற்றிற்று.

# நைமிசப்படலம்.

மேன்முக விண்ணவர் வெஃகிய பார்க்குத்
தான்முக மாகி நிலாவுபு தங்கு
நான்முக மாதவர் கோன்பிணி தாற்ற
நான்முக னல்கிய நைமிச விபினம். (௧)

மைமய குயிற்குரன் மல்க மரன்க
ளையரை வெய்யி லடாது நிழற்றிச்
செய்ய நறுந்துணர் தீங்கனி வீசா
வைய மொழிப்பது நைமிச வடவி. (௨)

தொண்டையர் மங்கையர் துன்புறு மாறு
மிடைவொடு விபுதர் விலங்கலர் வைக
விடையற வின்றிக வீட்டுமெய் ஞான்று
நடைபெறு கிறப்பது நைமிச முளரி. (௩)

அந்தணர் தம்மை யருந்தகி யுய்ப்பான்
வந்துள செம்மணி மானவி னம்போற்
பந்தியின் வெட்சி பரப்ப மலர்ந்து
நந்து வளத்தது நைமிச ககனம். (௪)

கொன்றை யலர்க்குலை கொட்டுக லமர
வென்று மெமக்கனி யீவதி தென்னைப்
பொன்றலில் பொன்மழை பொழிவது போலு
நன்று கெழீஇயது நைமிச கானம். (௫)

வெம்மை யகன்ற தளங்கொடு வில்வ
மிம்மையு மறுமையும் வீடுமெனத் தான்
மும்மை யளிப்பதொர் முறைமை யுணர்த்தா
நம்மைய தீர்ப்பது நைமிச தாவம். (௬)

வீற்று வியன்சினை தூங்கு விளங்காய்
தோற்றுறை வார்தமை நோய்செய லாற்றார்
தோற்றமி லார்திரள் கொங்கை தணித்து
நாற்றிய வொப்பது நைமிச முதையல். (௭)



வேறு.

மாறு பாடின்றி வைகுசிங் கத்தையு
மேறெ ருதன மிட்டிருந் தேமுழு
நீறு பூசி நியமஞ்செய் வோரையும்
வேறு காண்டல் விபுதர்க்கு மொண்ணுமே. (௮)

நீங்க ளின்மலன் சாரூப் பியநிலை
யோங்கு ஞான்றெம் முரிகொண்மி னென்பபோல்
வேங்கை யீட்டம் விழைந்து படிமத்தர்
பாங்கர் மொய்த்துப் பரம்பி முழங்குவ. (௯)

அவிய மைந்திற் றவம்புரி வாரயற்
செவியெ றிந்து செழுங்கரி நிற்பன
நவில வர்க்குமெய் வேர்வை நதுக்குவான்
சிவிறி கொண்டு விதிர்ப்ப சிவணவே. (௧0)

அருந்த போதனர்ச் சூழ்ந்த வழலெதிர்
குரும்பி வாய்ப்பக் குடாவடி புற்றின்கீழ்
விரும்பிக் கீடல் விகிர்தன் கழல்பண்டு
துரும்பன் றிச்செயல் தோன்றுவிக் கின்றதால். (௧௧)

வடிவ முற்றும் வடிக்கணை யேறுண்டுங்
கடியு போரிழைப் பாரிற் கதிர்வன
வொடிவு றூஉதெழு மூடலி னலடார்
கொடிய வாற்றன் முளவின் குலமரோ. (௧௨)

முல்லைத் தாபத பன்னியர் முன்னர்ப்பைம்
புல்லைக் கவ்விக் குதட்டும் புல்வாயெமக்
கொல்லைத் தம்மி னுமாறுமென் றேக்கெனப்
பல்லைக் காட்டி யிரந்தன்ன பான்மைய. (௧௩)

தேன விண்கனி செங்கனிர் காய்கிழங்
கான வுண்டி யனைத்து முறுவர்க்கு
வான ரங்கொடு வந்து திருமுனுய்த்
தேன வுங்குவிப் பாலியற் றுநிற்கும். (௧௪)

இன்ன பல்ல வளஞ்செறிந் தீயிலா
நன்னர் மல்கிய நைமிசக் காட்டிடைத்
தன்னை மானுஞ் சவுநக னாதியோர்
மன்னி யுள்ளார் வரம்பி லிருடியர். (௧௫)

அனையா யாரு மவனுயிர் வர்க்கத்தை
வினையி னீக்குபு வீட்டி னிறுவுவான
றனைய ருட்சிவ சோதியை முன்னினர்
நினைவ ரும்பெரு மேத நிகழ்த்துழி. (௧௬)

வந்தி வேலி மவ்விவை நீறெனுஞ்
சாந்த ணிந்தரன் கண்மணித் தார்புனை இப்
பூந்தண் வற்கலை பொற்பத் தவமெனும்
வேந்து மேதினி மீதினிற் சார்ந்தென. (௧௭)

ஆண்ட டைந்தன னைந்தொழி லாநந்த
தாண்ட வம்புரி சங்கரன் றுளலால்
வேண்ட மற்றுவி யர்த வியாதன்பால்
நீண்ட கேள்வியி னுனிறை சூதனே. (௧௮)

சிவாக மோப நிடத்தலைச் செம்பொரு
டவாது ணர்ந்தவச் சைவ முனிவனை
யவாவின் மாதவர் சேட்கண் டடுத்தெதிர்
சுவாக தங்கில வென்னத் தொழுதுபின். (௧௯)

குன்று றுக்குணக் குன்றின தும்பரின்
மன்ற நின்றரி வரத புராணிக
வின்று சாலப் பலித்த வெமதுநோன்
பென்று வாழ்த்திக் கொடுபுக் கிருக்கையுள். (௨௦)

இருத்தி மிக்க வெழிற்றவி சின்மிசை
யருக்கி யாதி முகம னளித்தவன்
மருப்பொ லிந்த மலர்முக நோக்குபு
விருப்பி னோடு விளம்புதன் மேயினர். (௨௧)

கண்ணி யன்ற நுதற்கறைக் கண்டநுப்
புண்ணி யன்றன் புராணநீ பன்முறை
நண்ணி யன்றெமக் காபி னவின்றும்யாம்
திண்ணி யம்புல னுற்றெளிந் தேமிலை. (௨௨)

இம்மை யந்தில் மறுமைநல் வீடெனு
மும்மை யின்பு மெளிதருண் மூர்த்தியுஞ்
செம்மை நீடிய தீர்த்தமுஞ் சீர்த்தகா
யெம்மைத் தேற்றுதி யீண்டிசைத் தோர்தலம். (௨௩)



எனவி ரந்த விருடியர்க் கையர்கா
ளனக மேந்து படிமுழு தய்யமீர்
வினவி யுள்ளது நன்று விழுமிதென்
றனக நெஞ்சிற் சிறிதுபோழ் தாய்ந்தரோ. (௨௪)

பொருவில் சைவ புராணம் புகல்வது
கருநெ டுந்தடங் கண்ணுமை யாள்பிரி
வருமை நாதனை யர்ச்சித்துப் பெற்றது
திருவ மான்முத லோர்க்கருள் செய்தது. (௨௫)

முச்சி றப்பு முதிர்ந்தது கற்றவர்
நச்சு பாண்டி நன்னாட்டகத் தண்மிய
தெச்ச கத்துமொப் பில்லதொன் றுண்டதன்
பெச்சு நாந்திரு வெற்றியூ ரென்பவே. (௨௬)

என்ன வன்னத மேன்றற் தொகையின்றச்
சொன்ன தொன்னெறித் தோன்றலை நோன்றவர்
மன்ன வின்னும் வகுத்துப் புலப்படப்
பன்னல் வேண்டுது மென்று பராவலும். (௨௭)

ஆயு நண்மை யறிவின னுவிரண்
டாயி ரத்த னனந்த னனந்தனீத்
தாயுள் காறறைந் தானுமச் சீரு
தாயி னும்பகர் கேன்ற வளவெனு. (௨௮)

காதற் கோர்கரை யின்றிக் கவுரிகோன்
பாதப் போது பதித்து மதித்திசைச்
சூதப் பேர்புனை தூயவ னைமிச
மேதக் கார்க்கு விரித்தனன் கூறுமால். (௨௯)

ஆகத்திருவிருத்தம். ௨௯.

நைமிசப்படலம் முற்றிற்று.

---

# திருக்கைலாயப் படலம்.

மணங்கு லாவிய தென்றலம் பொதியமும் வடபா
லிணங்கு பொன்னெடு மேருவு மால்வரை யிறையும்
வணங்கொண் மந்தர சைலமு மெனவியன் மலையின்
கணஞ்சு லாய்ப்பணிந் திடநடு நிமிர்வது கைலை. (௧)

பனற்க ரும்பெருந் தகைமைசால் வலிமலி பறம்பி
னினத்தை வைரவாள் கொடுகொடு நீள்சிறை யீர்ந்தோற்
சினத்து வென்றபோர் மீளியை மகப்பெறு தீரன்
கனத்த தோளிரு பதுமிற வமிழ்த்தது கைலை. (௨)

அரங்க வோர்கிரி குடைகொண்டோர் குன்றுபா லாழி
யிரங்கு மாறுநட் டலைப்பில பருப்பத மெடுத்துத்
தரங்க மிக்கெறி யுவரியின் மிதப்பித்த தக்கோன்
கரங்கு வித்தனன் வழிபடப் படுவது கைலை. (௩)

கொடியி டைப்பரை தந்தையை நோக்கிய குமிக்கி
னெடிது சேணிடை நிலையுத றகாதென நினையாப்
பொடிபு னைந்தவ னவற்கணித் திரீஇயது போலக்
கடியு லாம்பனி மால்வரைப் பானகுங் கைலை. (௪)

முனமொர் காலிகன் முடியடி யுணர்கென மொழிந்து
வனச மீக்கிளர் தாதையுந் தாதையும் வயிரா
வனமு மேனமு மாகிவின் மண்புகுந் தவியாக்
கனலி யோங்கலைத் தாங்குறுந் திறலது கைலை. (௫)

புவியின் மாமன்வில் வடிவினை பொருப்பெனப் படைத்தா
னவிலி ஞயக னகநகை யாளனென் றவனை
யவிரு நல்லறஞ் சிலம்புரு வாய்ப் பரித்தாங்குக்
கவினு கின்றது வெள்ளிய வொள்ளிய கைலை. (௬)

இடப மர்ச்சுமந் திறையைமா லெய்திய செல்வத்
திடனின் மிக்கது பெறுகெனச் சலிப்பறத் தினமும்
விடலி லாற்றலாற் கலைமகள் வெற்புரு மேயக்
கடவு ளைப்பொறுத் தோங்கியாங் கிலங்குமொன் கைலை. (௭)

வெந்த நீறுவா னதிமதி வேய்மழ விடையோ
னுந்த வெண்பொருள் விருப்பினன் போலுமென் றுலக
முந்த வந்தவன் றவளமெய் கெழுமியம் முதல்வற்
கந்த ரித்துமேக் கெழுந்தென நிவந்தது கைலை. (௮)

தாணு நம்பிரான் சங்கரன் பசுபதி தாணுட்
பூணு மாரரு ளெக்கின்றிப் புனிதமாய்ப் போற்றிப்
பேண நீடிய தகைத்தென வெளிப்படப் பெரும்பார்
காண நாட்டிய குயிபொர மிளிர்வது கைலை. (௯)



கோட்ட மோவுசத் தவகுணங் குழீஇத்திரண் டாவி
யாட்டு மெந்தைபை மேற்படுத் தனையன்கி டங்கி
வாட்ட நீவுமப் பரன்குண நிதனும் வாய்மை
காட்டி னுமெனத் திகழ்வது வாலிய கைலை. (௧௦)

மதித்த மூவகை முதநியந் தானமாய் மருட்சி
யுதிர்த்த தொண்டருக் குபாபர போகமீந் தூல்லை
முதிர்த்த லால்வரு சித்திதன் மேனியை மொய்த்துக்
கதித்த சீர்மையிற் பானிறங் கஞன்றது கைலை. (௧௧)

உஞ்சு போக்கடி யவர்க்குத வுடையவ னேறு
கொஞ்சி யாட்டயர்ந் தியங்குழிப் பச்சிளங் குமரி
பஞ்சின் மெல்லடி பரிந்திடா வண்ணம் வெண்பட்டுக்
கஞ்சு கந்தரித் தெனவிளர்த் தவிர்வது கைலை. (௧௨)

சிறந்த வெற்பர சின்மறனத் தேவியை யீனும்
திறங்கு றீஇமுழு நீறணிந் திருங்கலா ந்தநி
யுறந்த நோன்புழந் தாங்குவெள் ளொளியிடைந் தருவி
தறங்க வீழ்த்துப் பெயாவின்றி நிற்பது கைலை. (௧௩)

அருகு சாரர மகளிரை வாணிநே ராக்கித்
திருவ மார்சுர குலம்பல ராமணிற் செய்து
பொருவில் பானுமுற் கோளெலாம் புகரெனப் புரியுங்
கருதொ ணாதவிம் மிதத்தது வாலொளிக் கைலை. (௧௪)

இழிவு தீர்பொரு ளவற்றினுந் தவப்பெரி தேனும்
விழிகண் மூன்றுடைக் கருணையுங் கடலொடு மேவி
யழிபு நெக்குருக னூக்களி னுழைமனத் தடங்குங்
கழிசி றப்பியல் சித்தியும் படைத்தது கைலை. (௧௫)

துலமி கந்தவைங் கையுவாத் துணைப்பதச் சுவடு
மிலகு மூவிரு முகத்தினன் வேற்றடிச் சுவடு
நலக டக்கொழு புலிப்பறழ் நயியகாற் சுவடுங்
கலவி யெங்கணுங் காண்டகக் கதிர்வது கைலை. (௧௬)

ஒளிறு தானைமே லொந்ததன் மகத்தவிழ் வுறழ
வெளிறு கேழ்த்துநீள் புற்பல்கோட் டதுமத வெள்ளப்
பிளிறு பேரரு வித்தயி ராவணப் பெயர்த்தோர்
களிறு மீவினை யாடிய கவின்றது கைலை. (௧௭)

நேசங் கூர்ந்தருட் சைவமெய்ந் நெறிபுகு பசுக்க
ளீசன் பல்கணத் தெண்ணப்பட் டறவிறு மாந்து
பேசுந் தேசொடு பெருமித நடைபெறல் பிறக்கிக்
காசின் றேறென்று மதர்த்துலாய்ப் பயில்வது கைலை. (௧௮)

தாணு வைத்தழீஇ யுவர்க்கடல் பவக்கடல் தாண்டூஉ
வாணவந் தவிர் பரமுத்தி யடைந்த நாவரசு
மேனுடைத் திருமேனி புண்படப் புரண் டியங்காக்
காண வெஃகிய மான்மியஞ் சான்றது கைலை. (௧௯)

குனிந்த திங்களங் கண்ணியான் றுயிலாக் குறையை
யனுங்க நீக்குவோ னென்ன முன்னம்மையே யென்னப்
புனைந் தழைத்திடப் புண்ணியம் புரிந்துள புனிதை
கனிந் தனித்தலை யாற்படர் தலையது கைலை. (௨௦)

மண்ண கத்ததென் றளப்பரு மானிடர் வழுத்த
வெண்ண கற்றிய நாகர்பா தலத்ததென் றிசைப்ப
விண்ண கப்பொலி விபுதர்மீ மிசைத்தென மிக்க
கண்ணகற்சியோ டாழ்ந் தெழுந் தொளிர்வது கைலை. (௨௧)

ஆசி னித்திசைத் துருவசக் கரப்பிணி யறுமா
வீசி யேகுவான் கோளொடு நாளெலாம் விழைபூஉ
வேசி லாத்தவம் வெள்ளிடைப் புரிதிற னேய்ப்பக்
காசி னங்கிடந் திடந்தொறுந் திகழ்வது கைலை. (௨௨)

குளிற மாமுழ வின்னியங் கலிப்புறக் குழூமி
யளி நறுங்குழ லரம்பைய ராடலே யன்றி
நளி முகிற்குலங் குமுற வாலருவிக ணரலக்
களிகொண் மஞ்ஞைநின் றாடலும் பொலிவது கைலை. (௨௩)

விலகு சேய்மையிற் கேட்குநர் மிடற்றிசை யெனவுஞ்
சிலவர் வீணையி னரப்பிசை யென்னவுஞ் செப்பக்
குலவு விஞ்சையர் மாதர்யாழ்க் குரலுந்தங் குரலுங்
கலவு மாசெயுங் கானத்தின் மலிந்தது கைலை. (௨௪)

புறத்து றுப்பெழில் பயப்படா தகத்தரன் பொற்றாட்
கறத்த ழைத்தவன் பேசிறப் பருளுவ தெனுநாற்
றிறத்தை யென்னருந் தெளியுமா பத்திமை சிவணிக்
கறக்கி யின்னியங் குறள்குலாய்க் குனிப்பது கைலை. (௨௫)



இன்ன வெள்ளியம் பருப்பதத் துச்சியி னிடத்து
நன்னர் விச்சுவ கன்மனே நல்குநான் முகனை
முன்ன ளித்தமா யனைத்தரு முழுமுத றனக்கு
மன்ன வாக்கிய சீருடைச் சிவபுரம் வயங்கும். (௨௬)

ஆனைய மாநகர் நனந்தலை நனந்தலை யமர்ந்த
வனைக முற்கமல் வருங்கமல் வரதனை நிமுற்றி
வினை தமிப்பவின் மீனெலா மிடைந்தென வில்வாள்
புனைம ணிக்குலம் பொதுளிய திருத்தளி பொலியும். (௨௭)

நவின்ற நீடறக் கேதன நிகேதன நாப்பட்
கவின்ற சுத்தமா யாமயக் கதிர்செய்மண் டபத்து
ளவிர்ந்த தத்துவங் கடந்தபே ரருளுரு வாகித்
தவிர்ந்த சேயொளி மடங்கலா மடங்கலா தனத்தே. (௨௮)

தன்ன ருக்கலை முழுமதி சிறுவிதி சாய
முன்னி லாயவென் றன்பொடு மொருங்குநிர்த் தளித்த
வண்ண லார்க்கியா வீழல்செய் கெனவ்வத் தாங்கு
வெண்ணி லாவுமிழ் நித்திலக் கவிகைமேல் விளங்க. (௨௯)

இவறி மாற்றவ னெம்பிரா னொருபுறத் தியைந்தா
ளவளை நானுவித் தவளிரு புறத்துலா யமர்கென்
றுவகையிற் கெழீஇ வானதி யாறுவ தொத்துக்
கவரி யந்திர னிடம்வலந் துளளுபு கலவ. (௩௦)

நிலம்ப மிப்பொரீஇத் தம்மின நிலவமெய் யணிந்த
விலங்கல் வில்லியார் சந்நிதி விராய்ப்படம் விரித்து
மலர்ந்த வோகையா ளுகர்மொய்த் தாடுதன் மான
வலங்க ரித்தசாந் தாற்றிக ளலங்கலோ டலங்க. (௩௧)

பெண்ட கைப்பரை யிமாசலத் தெம்வயிற் பிறந்தாள்
கொண்ட னோர்களன் வார்குழை யாவெமக் கொண்டா
னெண்டரும் பெரும் பேறிவை யார்க்குறு மென்றுங்
கண்டம் விண்டிடப் பொலம்புரி வலம்புரி யலம்ப. (௩௨)

அன்பு முற்றுபு நாரையின் றேடுநே ரண்மி
முன்பு கூடலி லெங்குலத் தோன்றலை முத்தி
யின்ப ளித்தனை யெந்தைநீ யெமையுமாட் கோடி
யென்ப பொலமிக் கோலிடாப் பீலிக ளேங்க. (௩௩)

முடிப டும்பிறைக் கண்ணியாற் கெதிருறீஇ முழவம்
படிப டும்பல ரிழிஞரால் யாமிரு பாலு
மடிப டுந்துய ரகற்றுதல் வேண்டுமென் றங்கண்
வெடிப டுங்குர லான்முறை யிட்டென விம்ம. (௩௪)

தோன்ற லொன்றினுஞ் செய்தறி யாதவோர் தோன்ற
லான்ற முத்தெனத் தன்வயி னுதித்ததற் கன்பா
லேன்ற தாயகைம் மாறென்று புரிவதே யெய்ப்பச்
சூன்ற வேய்ங்குழல் தோற்றிசை நாற்றிசை சுலவ. (௩௫)

இனிய வேழிசை யாயிசைப் பயனுமா யிலங்குந்
தனிமு தற்குமுன் பிசைப்பதெவ் வாறெனச் சமழ்த்துக்
குனிவ போன்றுபின் கோடிய முகத்தச கோடப்
புனித வீணைசங் கீதமா மதுமழை பொழிய. (௩௬)

தங்கள் கொங்கையைச் சிவணலின் முனிந்தெனத் தாளங்
கொங்கு வார்குழ லரம்பையர் தாக்கொலி குலவ
வங்கண் விஞ்சையர் மகளிர் பண்டயின்ற வாரமிர்தம்
பொங்கி மேல்வழிந் தாலெனப் பாடுபண் பொலிய. (௩௭)

நீடு காலினு விருந்துழிப் பெயர்தம நிலைமை
நாடி வண்மலர்க் கொம்பருங் கொடிகளு நாணி
வீட மெல்லிய வுருத்திர கணிகையர் விதியா
லாடு நாடகம் யாரையு மகம்புறங் குளிப்ப. (௩௮)

கொம்மை வெம்முலை யுமையொரு பான்மகிழ் கூர
வம்மை யப்பனு யுலகெலா மீன்றுகாத் தருளிச்
செம்மை வேணியிற் கங்கையுந் திங்களுஞ் சேர்த்தி
யெம்மை யாளுடை மணிகண்ட னினிதுவீற் றிருந்தான். (௩௯)

விநாய கப்பிரான் வீரபத் திரப்பெயர் மேலான்
பிநாக பாணியை நிகர்த்துள வைரவப் பெருமான்
சநாத னத்தனிச் சேய்பெருஞ் சாத்தனென் றின்ன
மநாதி யாலளப் பரும்புகழ் மைந்தர்கள் சூழ்ந்தார். (௪௦)

மணிநி ரம்பிய வாரிச மலர்மிசை வதிவோன்
பணவ ராவணைப் பரனென விவரிவர் பதத்தை
யுணவும் வேண்டிடி னமிழவும் வல்லுந ருலப்பில்
கணவர் பார்ப்பதி கணவர்தம் பாங்கெலாங் கலுன்றார். (௪௧)



உட்பெ ருந்தடை யொண்மணிக் கோபுரத் துறையுந்
திட்பெ ருந்தகை நந்திக ளனுஞ்ஞையிற் சென்று
கட்பெ ரும்புனல் காலவீழ்ந் தெழுந்து கைகூப்பி
விட்பெ ருஞ்சுரர் வேதன்மான் முதலியோர் மிடைந்தார். (௪௨)

சிலர்க்கு நீண்முடிச் சேகரந் துளக்கினன் சிலர்க்கு
நலத்த புன்னகை நல்கினன் சிலர்க்களி நளின
மலர்க்க டைக்கண்மென் னோக்கினை வழங்கினன் மாபாற்
கலக்கம் வேய்யனேற் காங்கிய விரங்கிய கடவுள். (௪௩)

நிறைத ருந்தன தாணையைத் தாங்கினர் நின்று
துறைவி சும்புபா தல்மெனு மிவற்றினைத் தவாமன்
முறைசெ யிந்திரன் முதுவிதி முகுந்தனை முன்னோர்
குறைவி னைமுடித் தனைவர்க்குங் கொடுத்தனன் விடையே. (௪௪)

திவப்பொ டோங்குமத் தாணியி லோலக்க நீங்கிக்
குவட்டு நித்தலைக் கோகிலந் தொடரவெவ் கோமா
னுவப்பி னைம்பொழி நகர்பொருண் முழுவது மொருங்கித்
தவச்சி றந்தொளி திவளக வுளகஞ் சார்ந்தான். (௪௫)

வேறு.

வாம்பரி யிரதத் தென்றாழ் மண்டல மானத் தேசு
தூம்பரி யுங்கத் தும்பர்த் தாலஞ்செம் பஞ்சி பூனை
தாம்பரி யனிச்ச மன்னத் தூவியிஃ தலவப் பெய்து
பூம்பரி வட்டப் பட்டுப் போர்த்தமெல் லமளி புக்கான். (௪௬)

வெம்மைதீர் மழலை யின்சொல் விழுமிய வமுதத் தோடு
மும்மைகொ ளுலகத் தில்லா முதிர்சுவை நறும ணத்துச்
செம்மைநால் வகைச்சிற் றுண்டித் தெள்ளமு தத்தை யன்பா
லம்மைகைக் களினத் தூட்ட வங்காந்து மகிழ்வி னார்ந்தான். (௪௭)

மாதுளங் கனிவித் தேய்ப்ப வாணகை மைவா சத்தம்
மாதுளங் கனிந்தி தப்பொன் வனத்தகாய்த் திரையுன மொன்று
மாதுளங் கனிக ருந்தன் வார்கருங் கூந்தற் கௌரி
மாதுளங் கனிந்து தந்த நம்பல்வாய் வாங்கி யுண்டான். (௪௮)

இருதிறத் தவருந் தங்க ளிதயத்திற் காம லங்கி
பெருகிய பெற்றி நோக்கிப் பெட்டவை வியப்பார் போன்று
மருவுயிர்த் தறக்கு ளிர்ந்த வண்டலக் கலவை வாரி
யொருவர்மே லொருவர் தைவந் துவந்தன ருவருஞ் சப்பால். (௪௯)

புவனமன் பதைய வைத்தும் புணர்ச்சியிற் போகந் துய்ப்பான்
சுவணவெற் புச்சி நீலஞ் சுடருமா ணிக்க மாக்கித்
தவர்தா ளம்பு ரிந்து துணைசெய்தல் கழுநீர் செய்து
சிவனுமை வல்லி புல்லிச் சிலம்புபுள் ளொலிவி ளைத்தான். (௫0)

பலப்பல கரண பேதம் பயின்றுமிக் குவகை பொங்க
மலர்த்தரு சீயன மன்னி வதிந்தன ருக வீந்
நலத்ததோர் செவ்வி யுன்று நங்கைய ரிலக்க ணங்கட்
கிலக்கிய மனைய வெம்மோ யெந்தையை யிரந்து கூறும். (௫௧)

நைதர வேழை யேழை நம்பிநீ தணந்து கூடற்
கைதவன் தக்க நாமக் கைதவன் கடலிற் சேர்ப்பன்
மைதவழ் குடுமிக் குன்றின் மன்னனென் றின்னோர் மாட்டுப்
பைதீர் மகளாய்த் தோன்றப் பணித்தனை பல்காற் பண்டு. (௫௨)

ஒருபொழு தானு நின்னை யொரீஇயினி யாற்ற கில்லேன்
பெருமவுன் மேனிப் பாகம் பிரிகலா தெற்றை ஞான்றும்
மருவியா னென்றி வாழ வரந்தரல் வேண்டு மென்ற
வருநறை குமுதம் வார்த்தான் மானவாய் மலர்ந்து சொற்றாள். ()

கருணையே வடிவ மான கவுரியாற் கழறப் பட்ட
பொருளமு தினிதி மாந்திப் புந்தியிற் களிகூர்ந் தன்று
ளிருவிழிச் சுரும்பு லாவு மின்முக கமல நோக்கிப்
பெருகொளி முறுவல் பூத்துப் பிஞ்ஞக னருளி நின்றான். (௫௪)

ஒருமலை யத்துத் தோன்றி யுயரிரு மலையைத் தாங்கிப்
பொருமலை மருங்கு ருது பூண்பிடித் தாங்கி லங்கச்
செருமலை காகின் கோவை செற்றுபொற் கலாபம் வேய்ந்த
திருமலை நின்கு றிப்பு நிரம்பவு மழகி தாமால். (௫௫)

தேவரு மனித்தர் தாமுஞ் சேண்முனி வரரு மற்றை
யாவருஞ் சிறந்த தானத் தெமைவழி பட்டு வேட்ட
மேவரு கிற்ப தான்ற விதியென வுணர்வான் காட்ட
லுவருங் கடனு னக்குச் சராசர முழுது மீன்றாய். (௫௬)

ஆகலாற் பரண்டி நாட்டி லாடானை நகர்க்குத் தென்பாற்
காதமோர் முக்கால் பெளவக் கரைக்குமேற் கதனிற் பாதி
மாதர்கூ ருப்பூர்க் கீழ்சார் வடாதிரு குரோச மாதர்
தேநீள் கானப் பேர்க்குக் கிழக்கியோ சனையி ரண்டால். (௫௭)



எஃகுலா மெல்லை யின்க ணினியதண் ணிழல்ப ரப்பி
மன்னிய வளஞ்சேர் நிம்ப வனவயின் வன்மீ கத்தூட்
டுன்னுறங் குறிக்குப் பூசை யாற்றுதி யணைவிற் போகிக்
கன்னலும் பாலுந் தேனுங் கைப்பித்த தீஞ்சொற் பாவாய். ()

அங்கள விலக்க ணத்தோ டணிவிடை யூர்ந்து சார்ந்து
பிங்கள நிறத்துச் சோதிப் பிழம்பென மிளிரு நம்மெய்ப்
பங்கள வளாவி யென்றும் பகாதனை யொன்றச் செய்தும்
மங்கள நிறைந்த திங்கள் வதனப்பைந் தோகா யென்றான். (௫௯)

அத்திரு வார்த்தை கேட்ட வம்பிகை யகில லோக
கத்திரு நேர்வி னவுங் கனகவெற் புலாவுமிக்கு
வொத்திரு மருங்குஞ் சங்க வொண்குழை வருடுந் தோளாய்
முத்திருள் சீக்கு மிக்க மொய்ம்புடைக் கயிலை யாதி. (௬0)

மேம்படல் கெழீஇய வெண்ணில் வியன்பதி நிலத்தி ருப்ப
வேம்படர் விபினத் தென்னை மேயருச் சித்தி யென்னத்
தேம்படர் மலர்வாய் விண்ட திறனெவன் செப்பு கென்றாட்
கோம்படர் பொருளா யுள்ளா னுதனுபர் புரைக்க லுற்றான். (௬௧)

ஆகத் திருவிருத்தம், ௬0௫.

திருக்கைலாயப் படலம் முற்றிற்று.

---

## தலவிசேடப் படலம்.

பொன்ற யங்கிய பூண்மு லாய்சகத்
தொன்று மேனைய லூர னைத்தையும்
வென்ற வேதவின் வெற்றி யூரொன்
றின்ற தாற்குளிர் நிம்ப கானனம். (௧)

திருக்கல் யாணஞ் செய்து தென்னை
வருத்த போதநா ருதவு நீர்மையா
லெருக்கு வேய்சடை யெமக்கு மாதராய்
விருப்ப மிக்கது வேப்பங் காடரோ. (௨)

மலிந்த மல்லலம் மாவ ணத்துழி
மெலிந்து வல்வினை விளிய மாந்தர்க்குப்
பொலிந்த நீள்பழம் புற்ற கத்துகம்
மிலிந்த மொண்டெழீஇ யிலங்கு கிற்குமே. (௩)

தரும் தாதியுந் தமுங்கள் கைமுத்த
பெருகு மான்பிய நதியும் பிசோல்
குரும ணித்தனுக் கோடி யும்பொரா
வொருபெ ருந்தட முங்கள் மன்னுமால். (௪)

கானு வாருவங் கவரு மத்தகு
பானு லர்வுபைம் பழுவச் சூழலை
மானு காதெலாம் வனையும் வாணிகோ
ஞனு மாமியா நகர மாக்கினும். (௫)

அத்த லத்தினை யனைய கோர்தலம்
வைத்த நாகர்வாழ் பாத லத்தொடு
மித்த ராதல மிருவி சும்பெனு
முத்த லத்தனு மின்று மொய்குமால். (௬)

ஒழுக்க மேர்ப்பினு ராஜு மொண்டோம
விழுப்ப மேந்திரு வெற்றி யூரென
வழுத்தல் வல்லுந ராயின் மற்றவர்
முழுத்த பாதக முற்றும் வற்றுமன். (௭)

பொன்ன ணிக்குவால் பூத்த வல்லிகே
ளென்ன காரணத் தேனு மென்றுநா
ளன்ன தொன்னக ரடைந்தி கப்புறத்
துன்னி வைகுநர் துறக்கம் வைகுவார். (௮)

அனைய வைப்பிடை யன்பி யாங்குள
புனைத டம்படிஇப் போற்றி நங்குழி
யினைவி லாதுவேப் பிலைப யின்றவர்க்
கெனைய நோய்களு மிரிய மேந்திழாய். (௯)

வேறு கேத்திரம் விரவு மாருயிர்த்
தாறு போகியா னத்த லத்தினை
மாறு நீர்தர வலம்வைத் தேகுமே
லாறு வன்பவ நாறு மென்மொழி. (௧௰)

குயமு கிழ்த்தனை யரும்பு கொம்பனாய்
செயபு ரிக்கியான் செல்வ லின்றெனக்
கூய வனோர்மகன் கழறு மாயினும்
பயன்மி கப்பெறும் பைபுள் பார்மியே. (௧௧)



வாளி குஞ்சசி வதன வஞ்சசி
தோளி னன்னலர் தூய்க்கும் விண்முழு
தாளி தன்னினு மாவ யிற்சிறு
ஞாளி சீரிது நடிய கூந்தலாய். (௧௨)

நிறந்து றுந்தளிர் கிகர்ந்த மெல்லிய
லறந்த ழைத்தொளி ராங்கி யற்கையிற்
பிறந்த சான்றவர் பின்ன மேய்முல
திறந்தி டாதுவாழ்ந் திருப்பர் சந்ததம். (௧௩)

வானு லாம்விழி மங்கை யன்னுழி
மூனு மன்பினன் முறைவ புரவகை
நாளு நன்னியார் நமக்க னுக்காய்
மீளு ருக்கதி விரவு வாரரோ. (௧௪)

காண்டரிற் பெருங் களிசெய் தேறலே
யாண்டு நீதிநா லாற்றி யங்குபு
மாண்ட மாண்டவர் வடிவெ மைப்பொரப்
பூண்டு நித்தியப் பொலிவின் மன்னுவார். (௧௫)

இவ்வி டைப்பரா யிடைய ருதவட்
புல்லி நம்மையே புந்தி நாடுநர்
மெல்ல வெம்மொடும் வேறறக் கலந்
தெல்லை யற்றபே ரின்ப மார்பவே. (௧௬)

வேறு.

அத்தகு திருப்பதி யகத்தொரு வருக்கு
மெத்திய சுவைத்திறனில் வெற்றடிசி லிட்டோர்
புத்தமுத மொத்தவுண வைப்புற நகர்க்கண்
வித்தகர் பலர்க்குதவு மெய்ப்பய னடுப்பார். (௧௭)

தாதுலர்க லாதபுயல் தாங்கியவிர் மின்னே
போதுலவு பூம்பொழில் சுலாஞ்சய புரிப்பா
லாதுல ருவக்கும்வகை பொய்ப்பொரு ளளித்தோர்
மீதுலகின் மெய்ப்பொருளை மேவிமகிழ் கிற்பார். (௧௮)

அன்னதல ஞாங்கர்கெழி யந்தணர் தமக்கு
நன்னருறு மன்னகர நல்கிய திறத்தோர்
பொன்னகர மத்தனைய மெய்துபு புரப்பார்
கன்னல்கனி கண்டினை கலந்தனைய சொல்லீ. (௧௯)

சாலுமறை யாளுெழுகு சைவமறை யோர்க்கு
வரலிய பயத்தபசு வர்க்கமவ ணிந்தோர்
மாலயன் வழுத்துபதி வர்க்கமென வாழ்வார்
வேலைசுவை தெவ்விடம் விராயவுறழ் கண்ணுய். (உ0)

கழிமகிழ்வொ ரைம்பெரழி கொளத்தகு கரும்பே
மொழிதருமவ் வூர்வயின் முதிர்ந்தநம தன்பாற்
கழியுமியற் ருயசிறு வீடுதவு மர்ன்றே
ரொழிவறு நலத்தபெரு வீடடைத லுண்மை. (உக)

புண்ணிய மனைத்தையும் வளர்த்திலகு பூவா
யண்ணிய பசும்பொலொரு கோவுள வளித்தோ
ரெண்ணிய வொளுதபல கோக்களடி யேத்த
மண்ணியல் பின்றிறக வழக்கியர சாள்வார். (உஉ)

மலைக்கிறை தவத்தின மகப்பெறு மடந்தாய்
வலைப்படு வினைத்திற னறுத்திடுமெ வைப்பில்
விலைப்பொருள் கொடுத்தளகை வாங்கியுய விட்டோர்
நிலைத்தளகை நீங்கலர் நிதிக்கிழவ னென்ன. (உந)

முருந்துறழ் செறிந்தநகை மொய்குழலி நோயால்
வருந்துநர ருக்கவண் மருந்துசிறி தானு
மருந்திய வழங்குந ரரும்பெறல சாவா
மருந்துநனி யுண்டுசுர ராகிவதி வாரால். (உச)

பந்தினைழ தனத்தெரிவை நாகமுதல் பாரு
அந்தினறு நீருதவு பந்தாமைழ வித்தோர்
கந்தமலி புங்கனக கற்பக மலர்ப்பூம்
பந்தருமைழ ளவுகுபு யரிப்பர்வின் ளெருங்கே. (உரு)

பத்தியின் மலிந்தொகை பதித்தசைபன் மகா
யத்தனி நகர்த்தலைய மாதடி யவர்க்கு
நத்தியொரு வத்திர மளித்தவர்க ளன்கு
வத்திர மிலயர்துயிர மன்பத மிருப்பார். (உசா)

அரவமணி மேகலை யவட்டிரம சாரி
மரபினரெனா கன்னியை மணக்கிய புரிந்தோர்
தரணிமகள் செங்கமலை யென்றிருவர் தம்மை
விரவிநனி யின்புறுவர் விண்டெபத மேலரால். (உஎ)



வனத்தொடை வனைந்தமுகில் பின்னர்வரு மின்னே
யனத்தமிரி யப்புரியு மப்புரி யகத்துப்
புனற்பொலி குளத்தினை யகழ்ந்தபுலை மிக்கோர்
கனற்பொலி குளம்பெறுப வில்வளை கலந்து. (உஅ)

சாமிபுகன் மென்மதலை கேட்டெருகு ளதயா
லேமநகர் வெள்கவொளி நந்தக ரிடத்துத்
தாமமலர் நீழன்மலி யோர்பொழில் சமைத்தோர்
பூமிமுத லாநிலவு மேம்பொழில் புரப்ப. (உகூ)

உருமுழுது மாரமு அறத்தறுமு பாவா
யொருவருட மாங்களிய மத்தொடு முறைந்தோ
ரிவருட மாதியன பல்வருட மாளாப்
பொருவொருவு நம்முலகு புக்கினி திருப்பார். (ந0)

அன்னநகர் மான்மிய மனப்பரிய கால
முன்னுப நிகழ்த்தினு முலப்பநிலை யம்பு
வின்னியல்கொள் சொன்னமயி லின்னினி யிசைப்பாந்
தன்னனைய தீர்த்தநனி தன்னிலொரு தன்மை. (நக)

ஆகத்திருவிருத்தம். நகஎ.

தலவிசேடப் படலம் முற்றிற்று.

---

## தீர்த்தவிசேடப் படலம்.

செப்பிய தாய் சிறந்த பதிக்க
ணைப்பிய லாதர முத்தம லிங்க
திப்பிய சந்நிதி முன்னதொர் தீர்த்த
மிப்பிய நித்தில மேய்க்கு மெரிற்றாய். (க)

குரவ மணங்கமழ் பூங்குழல் பாம்பன்
டரவ நலம்புனை ரைடல் குழிந்தா
பரசுமன் னூன்றிய பாதல கங்கை
விரவலு மோர்தட மாக விறந்தாம். (உ)

வாரண மாமுலை வண்டிமிலு குங்கை
சிரண வும்பர சாயுத தீர்த்தம்
பூரண நீர்ச்சிவ புட்கர மென்னக்
காரண நாம்பல மேயது கண்டாய். (ந)

பேசு கிளிப்பெடை நாசிகை பெட்குந்
தேசுகிர் கொண்ட செழுங்கொடி பின்னர்க்
காசு கிடந்தொளி ரன்ன கயந்தான்
வாசுகி வாவி யெனப்படு மாதோ. (௪)

மனநட னீங்க வசிக்கு மடந்தாய்
நினநட வாள்விழி நேர வகன்ற
வனதட மூழ்குந ராங்கயி ராணி
தனதட மூழ்குவ ரின்பு ததும்ப. (௫)

வேண்டன் முகிழ்த்து மெய்யன்பு மலர்ந்து
மாண்டரு மின்ப மதுப்பொழி கொம்பக்
காண்டரு நீரின்முக் காலமிழ் கிற்போ
ராண்டொரு காலு மளற்றமி ழாரால். (௬)

தாள வடத்தரு வித்தன சைலீ
மரபுளி நூனெறி சற்றும் வழாமே
வரமலி கின்றவவ் வாரி படிந்தோர்
பரசுக வாரி படிந்திரு மாப்பார். (௭)

வாட்கட கக்கை வயங்கு கரும்பாய்
வேட்கட னல்கு விநோதை யதனக
ணாட்கடன் முற்று நிரப்பு நலத்தோர்
கோட்கடன் முற்றும் வறந்து குறைந்து. (௮)

எண்பயன் யாவையு மீந்து களிக்குங்
கண்பய மோது கனங்குழை யஃதிற்
றண்பய மாந்துநர் தாயர்கள் கொங்கை
வண்பய மாந்தலர் மற்று முநித்து. (௯)

காவி சவட்டு கருங்கணி யந்த
வாவியில் யாக்கை யழுக்கினை மாற்ற
மேவி யறற்குடை வார்க்கு விடாத
வாவி யழுக்கு மகன்றிடு மன்றே. (௧௦)

மாங்குயி லேங்க வயங்குசொன் மங்கா
யாங்கு நவின்ற விலஞ்சி யடுத்துத்
தாங்குண்ட வராதி பாதக சால
மோங்கு தழற்படு துய்த்திர ளொக்கும். (௧௧)



நித்திய கன்னியர் நீர்நிலை சித்த
சுத்தி யளிப்பது தோமற நம்பாற்
பத்தி யளிப்பது பன்னு துரீய
முத்தி யளிப்பது மூழ்குற வோர்க்கு. (௧௨)

வண்டு சுழன்று மகிழ்ந்து முரன்று
கிண்டு கருங்குழல் கேண்மதி மேல்யாம்
விண்டுள தீர்த்த விசேடம் விளங்கப்
பண்டு நிகழ்ந்தவோர் காதை பணிப்பாம். (௧௩)

வேறு.

முழங்குதமிழ்த் தென்னாட்டு முன்னாட்டு நேவையெனும்
பழம்பதியின் மகபதியும் பார்த்துநாறு முறப்பெய்தப்
பிழம்பியபல் வளம்படைத்துப் பிறங்குதன வணிகர்குலத்து
வழங்குபெருங் குடிப்பிறந்து வளர்ந்தனனோ லொருமைந்தன். ()

அவன்ஞான சீலனென வபிதானஞ் சமந்துள்ளா
னெவரேனுந் தாமாக வெதிர்கண்டா ரிணைவிழியைக்
கவர்யாண ருருவுடையான் கருத்துருக்குங் கனிமொழியா
னுவமான மொரீஇக்கலைக ளொருங்குணர்நுண் மதியாளன். (௧௫)

ஊரேறு போற்செருக்கி யுலாவுவான் பிறர்க்குரிய
வாரேறு வனமுலையார் வலிந்தணைப்ப நலனுகர்ந்துங்
காரேறு கடுங்காமங் கன்றியிளங் கன்னியரை
நாரேறு மாவசித்து நயந்துதழு வியுங்களிப்பான். (௧௬)

கரவடத்தாற் சூழ்வடமாந் தண்மணியுந் திருநீறும்
விரவியமெய்ப் புனைந்தெம்து மெய்யன்பர் தகநடித்து
வரமலிகற் பரிவையர்க்கு மருள்கொளுத்தி யுபதேசக்
குரவுதரித் துடலாதி யனையர்தரக் கொண்டப்பால். (௧௭)

நிருவாண தீக்கையிதென் றவர்துகிலை நெகிழ்த்துப்பின்
வெருவாதி ரினிப்பரிச தீக்கைவிதி விளைத்துமென்க்
திருநேரங் கலருறப்புந் தன்னுறுப்புஞ் செறிவித்து
மருவாநின் றின்புண்டு வரம்பில்லை நிறைதவிர்த்தான். (௧௮)

சோதரியை மூத்தவர்தந் துணைவியரை மருகியரைப்
பேதமக னறிமறையோர் பெண்டிரைச்சை வாசிரியர்
மாதரைச்சங் கரசாதி மடவாரைக் கைம்மையரை
யாதரவிற் புணர்ந்தழன்று னறவினைபொன் றறியாதான். (௧௯)

மிக்கினிது மெய்க்கிதென விளம்புபுதை யலர்க்குத்தன்
சுக்கிலநன் றாட்டியவர் சோணிதத்தைத் தான்மடுப்பான்
புக்கிறமி மானுரைப் புலிபோற்பாய்ந் தீர்த்தாலை
யிக்கினெறித் தணைந்தொழிவா னென்செய்வா ரேழையரே. (௨௰)

ஓவச்ச மனக்கொடிய வுவனந்தோ மதவெறியாற்
கோவச்ச மூதல்விலங்கின் குழுவலறத் தழுவினூறீஇப்
பாவச்ச ரக்கேற்றிப் படர்கலமாய்ப் பல்பிணிப்பார்
நீவச்சங் கடமெய்திப் பக்குவிடா நிலைதளர்ந்தான். (௨௧)

துறவரையுஞ் சுரரையுந் தொண்டரையு மவதித்துப்
பிறருரிமைப் பொருள்கரவாற் பெட்டுமுறை பிறழ்ந்தீட்டி
மறமலியுங் கொலைபுலைபொய் மதுநுகர்ச்சி யாதியவா
மிறலரிய பாதகங்க ளெனைப்பலவும் பெரிதிழைத்தான். (௨௨)

இவ்வண்ண முழிதருவாற் கிருங்கல்வி யுணர்வுதிப்ப
வெவ்வண்ணக் கூற்றியற்றும் விழுமவினைந் தினியவிியே
னெவ்வண்ண முய்வலென விதயத்தின் வெருவந்தெஞ்
செவ்வண்ணச் சரண்சரணாந் திறந்தெளிந்தான் றிருவருளால். ()

நாமகிழ்வின் வீற்றிருக்கு நலத்ததலம் பலபுக்குப்
பூம்ருவு கங்கைமுதற் புனிதநீர் படிந்தாடி
யேமணவு மிலிங்காதி யெண்ணிறந்த மூர்த்திகளோந்
தோமகலச் சூழ்ந்திறைஞ்சித் துதித்துருகித் தொழுதனனால். ()

வாசமலர் நந்தவனம் வளங்குலவும் படியிருவி
யேசறுபூங் கோயில்களி வியன்றதிருப் பணியியற்றிப்
பேசவரும் பெருஞ்சாந்தி பிறழாமை யினிதுஞற்றித்
தேசமகிழ் கொளப்புரிந்தான் சிறந்தபிற புண்ணியமும். (௨௫)

மழைபொருவு கொடைபொறைமுன் மாண்குணமுற் றொருங்க
பழையதொரு வாதனையாற் பழிபாவம் பகையச்சந் [மைந்தும்
தழையகனி துறத்துபர தாரகம ஞதிபவம் [றுன்.
விழைவொழியான் மந்தணத்தின மென்மேலச்செய் தொழுகும்

அகந்தூய்மை யெனக்கின்னு மறுகிலதென் னன்னேவென்
றகந்தோங்கு துயருழந்துள் ளுடைந்தயர்வா னொருவைகல்
சகந்தாஞ்சி ராடானைத் தலம்போற்றப் படர்கின்றோ
னிகந்தாறு திரிந்தொழுங்கி வெற்றிநக ரிடைப்புக்கான். (௨௭)



மின்னருபொன் மணிக்கோயில் விமானத்தை யெதிர்நோக்கி
யின்னாமெம் பெருமானு ரின்னருளா மெனத்தொழுது
மன்னமலர் கொடிநுவன்மிசை சித்திரகம் பலம்விரித்தா
லன்னவெழி லன்னமலி யன்னநடைத் தானமுதனும். (௨௮)

பெரும்பாரச் சாகாட்டுப் பிணிப்பொருவு பெற்றமெனக்
கரும்பாவக் கட்டவிழ்ந்து களிதுளும்பி யிதுகாறு
மரும்பாத வாநந்த மளியெய்து கின்றீண்ட
வரும்பான்மை யெவனென்று விழைபுதூ மனங்கொண்டான். ()

பின்பந்த விரிநீரிற் பிறங்கியநால் விதிவழுவா
தன்பந்த மின்றியெழ வமிழ்ந்தாடி வாதனையாம்
வன்பந்த நீங்கியவா வாய்ந்தீர்ந்த மதிமான
வின்பந்த வாளுத்தா னிலங்கினன்மெய் யொளிகெழுமி. (௩௰)

பூதியொடு சாதனமும் புறம்வனைந்தஞ் செழுந்தோடு
நீதிநெறி யகம்புனைந்து நிரம்பியர்காட் கடன்கழிப்பிச்
சோதிவளர் நங்குழியைத் துன்னிவழி பாடாற்றி
வீதிதொறு மணிகிடந்தொளிர் கனதூர் மீண்டடைந்தான். (௩௧).

உரியமகப் பேறுமுத லுயர்செல்வ முறப்படைந்துத்
துரிசிலறம் பலபுரிந்து தொன்னிலத்துப் புகழ்பரப்பிச்
சரியைகிரி யாயோக சன்மார்க்க முறைமெய்திச்
தெரிவரிய சித்தாந்தத் திறஞ்சார்ந்தார்க் கதிஞற்றநு. (௩௨)

நாறுண்டு கருவிகளி னனமொரிஇப் போகபுல்
வேறுண்டு விண்ணாரின் மிகநுகர்ந்து புற்றற்று
மாறுண்டு புவிமுழுதும் வழுத்தவிளங் கினனவனீண்
டேறுண்டு நடவுமெம திணையடிக்கீழ் வாழ்கின்றான். (௩௩)

அனையசிவ தீர்த்தத்தின் மான்மியமுற் றளவிட்டுப்
புனையவெனி னெடுங்காலம் போகாதா லினிக்கவண்டார்
வினையிருமர் தரச்சவட்டி வீறுகட லிலிங்கநலந்
தனையினிது தவச்சுருக்கிச் சாற்றுதுமுன் கோற்றொடியே. (௩௪)

ஆகத்திருவிருத்தம். ௩௭௦.

தீர்த்தவிசேடப் படலம் முற்றிற்று.

---

# மூர்த்தி விசேடப் படலம்.

பாமம் புராசிசூழ் பார்மிசை யாவும்
வாமம் புடன்வரும் வார்குழலி யங்க
ணேமமே புகுந்தவ ரெய்தவுறை மூர்த்தி
நாமம் புராதன வன்மீக நாதன். (௧)

பானேர் நறுஞ்சுவை பல்குமொழி நல்லா
யானே றுகைக்குர மாரருளி னீஞ்சு
வானே மனேமுதல் வந்தணையு முந்தத்
தானே முளைத்தவட் டங்கியதை யன்றே. (௨)

தீங்கரிய வண்பசுந் தேனுவுட லெங்குந்
தேங்கினு முலைத்தலைச் செற்றிவெளிப் பட்டாங்
கியாங்கணு நிரந்தரம் யாம்வதிது மேனு
மாங்குறு குறிக்கணே தோன்றுவ மணங்கே. (௩)

எண்ணிலுயிர் மாட்டுநம் மின்னருளுண் டேனுந்
தண்ணளி தொழும்பர்பாற் சாலுமது மான
வண்ணமை யெவற்றுளு முங்கதி லெமக்காம்
வெண்ணகைய செந்துவர் வாய்ப்பசிய மின்னே. (௪)

எக்குறி யிடத்தும்யாம் பால்விரவு செய்யிற்
புக்குமறை வாகியே பொற்பவிருக் கின்று
மக்குறி வயிற்றயிர் செய்யென வமர்ந்தா
நக்குலவு நித்திலக் காமமுலை நங்காய். (௫)

வேறு.

அதனை யன்பி னவிர் குணதிசை
யுதய காலத் தொருமுறை நோக்கினோர்
சதத மெம்பெருஞ் சாலோக் கியத்தனிப்
பதவி யெய்துவர் பண்கனி மென்சொலாய். (௬)

உச்சிப் போழ்தத் ததனை யுருகுபு
நச்சிப் போற்றிய நானில மானவர்
சச்சித் தாயநஞ் சாமீப்பி யப்பதத்
திச்சித் துள்ளவுண் டேமாப்ப ரேந்திழாய். (௭)



தீய நீர்க்குமத் திப்பிய லிங்கத்தைச்
சாய நேரத்துச் சந்தித்து வந்தித்தோர்
தாயி னல்லவெஞ் சாரூப் பியநிலை
மேயி ருப்பர் மிளிர்தளிர் மேனியாய். (௮)

கொத்து வார்கருங் கூந்தலங் நீள்குறி
யத்த யாமத்தி லார்வத் திறைஞ்சினோர்
தத்து வாதீத சாயுச்சி யம்பெறீஇச்
சுத்த வாநந்தத் துய்ப்பர் சதமே. (௯)

புற்றி டங்கொள் புனிதவெம் மூர்த்திக்குத்
துற்ற கோயில் விமானம் பொற்றாவிகை
சுற்று மண்டபஞ் சூழ்மதில் கோபுர
மற்று மப்பும் வகுத்திடும் புண்ணியர். (௧௦)

வாச நந்தனம் வைத்து வளர்த்துளார்
காசில் போது கஞலத் தொடுக்குநர்
தேசு லாவத் திருவிளக் கிட்டவ
ராசை யால்விரைத் தூப மளிப்பவர். (௧௧)

நாவி பானிதஞ் சந்தன நல்குவோர்
ஆவி னெய்யமு துத்தமுன் னார்த்துவார்
தேரவி துள்ளகங் கூவல் புறப்புறன்
வாவி யாதிய தொட்டு வனைபவர். (௧௨)

அலர்த்தொ ளிக்கல ணைநி வேதன
நலத்த பூசைக்கு நண்ணிய வேண்டிய
கலப்பை யுள்ளக் களிப்பி னளிக்குநர்
விலக்கொ ணாத விழாச்சிறப் பாற்றுவோர். (௧௩)

என்றி யம்பு மினைய விருவினை
நின்று நீங்கி நிலைஞெருங் காண்டுபின்
மன்ற நம்பக்கல் வந்தனர் வைகலும்
பொன்று றுப்பர போக நுகர்வரால். (௧௪)

கேழி ளந்தளிர் வீழக் கிளரியால்
வாழி யக்குறி மன்னிய வாலயச்
சூழல் சூழ்வரச் சூழ்நகரச் சூழ்வன
பாழி நல்லறப் பால முழுதுமே. (௧௫)

மணிக்கு நெய்த்தற மைத்து நெறிப்புரீஇப்
புணர்ந்து வார்ந்து புரித்தமெல் லோதியா
யிணங்கு மன்பினச் சோதி யிலிங்கநேர்
வணங்கு வாரை வணங்குவர் வானவர். (கசு)

போது மீது பொலியட் வார்பணி
காது சீது கருந்தடங் கட்பாய்
பாது காக்கும் பழம்புற்று நாதனென்
றோது வார்பெய ரோதுப மாலயன். (கஎ)

காரொத் தான்கல் வத்துகிர் வல்லிசேர்
சீரத் தன்கடற் சீர்கொள் விலோசனி
லாரத் தாற்பண்டை வன்மிக லிங்கமென்
பேரைக் கேட்டனம் பேர்பல கேட்டல்போன். (கஅ)

எத்த லத்துச் சிவனி ருப்பினு
நித்த னுந்நுயி ளிப்புழி யன்னாந்
சுத்த மேனி தொழாநின் றெழுபவர்
முத்தர் முத்தன முத்தன மூரலாய். (ககூ)

வள்ளப் பொய்மல் வன்முலை மாதரா
யள்ளத் தக்க வழகிற்றம் மூர்த்தியை
யுள்ளத் துள்ளுற வுள்ளிய வொள்ளியர்
வெள்ளப் பேரின்ப வெள்ளத் தழுந்துவார். (உ0)

வெம்மை நெஞ்சின் பிடைந்தடைந் தார்க்கெலா
மம்மை யின்பய ளுர்த்துவ மற்றைய
செம்மை மல்குபு சித்தவம் மூர்த்திதா
னிம்மை யேதரு மெவ்வகைச் செல்வமும். (உக)

காவி நேர்விழிக் காரிகைக் காரிகை
தாவி லாதவத் தானுள்வப் பேறுவார்க்
காவ யிற்றொல் லறம்பொரு ளின்பமென்
மூவ கைப்பயன் முற்றுமன் முற்றுமன். (உஉ)

நந்து வார்க்கது நன்னிதி யாக்கமுஞ்
சந்து ருக்கள் சமழ்ப்புற வென்றியும்
பொந்து நோயின்றிப் பூரண வாயுள்கூர்
புத்தி ரப்பெரும் பேறும் புகுத்துமே. (உங)



சீர்த்தி யும்மணி மாதியென் சித்தியும்
பூர்த்தி சாலம் பொழியி னுகர்ச்சியு
மார்த்தி தீர்நிறை கல்வியு மத்தகு
மூர்த்தி நல்கு முகமலர்ப் பொற்கொடீ. (உச)

அத்தி ருக்குறி தன்னை யனுதினம்
பத்தி யோடு வழிபடும் பான்மையர்
கொத்தி ரும்பவக் கூட்டர வோட்டர
முத்தி சார்தன் மொழியவும் வேண்டுமோ. (உரு)

அன்ன தாய விலிங்கத் தகன்சிறப்
பின்னு மென்னருங் கால மெடுத்தியாம்
பன்னு கிற்பினுஞ் சற்றும் பறைவதின்
றென்ன வாய்வின் டிறுத்தன னெம்பிரான். (உசு)

உயிர னைத்து மயர்வின் றுயிர்த்தருள்
மயிலி யற்பிடி கேட்டு மகிழ்ச்சிபூத்
தயினு திப்படைச் சூற்கரத் தன்னலைப்
பயினு மன்பிற் பணிந்து பணிக்கின்றாள். (உஎ)

கரிய சுந்தர கந்தர கந்தர
பிரிவ தற்கும் பிழைத்த லெனையர்க்கு
மரிய நின்விரை யாக்கலி யெள்ளற்கும்
பெரிது நெஞ்சு வெரீஇயினன் பேதையேன். (உஅ)

அருள்வ ழிப்படார்ந் தவ்வழி நோற்புழிப்
பருவ ராதியான் பாணித்த வின்றிநீ
வருதல் வேண்டுமென் றன்மி ஞுவனு
மருமலர்க் கழல் வந்தித்து நிற்றலும். (உகூ)

செல்வ ணங்கெழு மேனிச் சிவனவட்
கவ்வ ணம்புரி வாமென் றபயமீந்
திவ்வ ணங்குட னேகென வேவினன்
றெவ்வ ணங்கு திருநந்தி தேவுக்கூடய். (ங0)

மால்வ ரைக்குல மன்பெறு பைங்கொடி
நீல்வி டக்களச் செஞ்சடை நின்மலப்
பால்வி டைப்பரன் பால்விடை பெற்றனம்
போல்வ ழிக்கொண்டோர் மண்டபம் புக்கனள். (ஙக)

சோதி மாமணித் தோடொளிர் வார்செவிக்
காதி மீன்கட் கமலினி யென்பவ
ளாதி யாய வணுக்கத் தொழின்மையர்
காதிமார் கடல் சூழ்தர வைகினள். (௫௨)

அங்க ணப்பனை யம்மை யருச்சிப்பப்
பொங்கு காதலிற் பூமலி வெற்றியூர்க்
கிங்க ணின்று மெழுந்தரு ளும்பெரு
மங்க லத்திறங் கேட்டு மகிழ்ச்சியால். (௫௩)

இந்தி ராணியு மிந்திரை வாணியு
முந்தி டாகினி யோகினி காளியும்
பந்தி யாத்தவப் பார்ப்பனி மார்களு
மந்தில் வானர மாதரொ டண்மினார். (௫௪)

உரிமை சான்ற வுமைக்கரன் மூர்த்தியீர்
தெரிவு றுத்த திறனிது சங்கரப்
பிரியை பாகம் பிரியா வரம்பெற்ற
சரித மின்னினிச் சாற்றுதுங் கேண்மினோ. (௫௫)

ஆகத் திருவிருத்தம். ௪௦௫.

மூர்த்திவிசேடப்படலம் முற்றிற்று.

---

# பார்வதி பாகம்பிரியா வரம்பெற்ற படலம்.

சார தந்*திரங் கைமுகன் றலைச்சமர் வேத
சார தந்திரந் தேர்ந்தவ னுணையாற் றளிக்கோர்
சார தந்திரஞ் சிருட்டியென் றிவைசெயுந் தக்க
சார தந்திரன் டுறப்பலர் கணநிபர் நறைநந்தார். (௧)

படிய ளந்தவன் செய்யருட் போதிமப் பறவைக்
கொடியு யர்த்திமயான் வச்சிரப் படையுடைக் குரிசில்
கடியு லாவிய கற்பகக் கன்னியர் கதிர்க்கு
முடிகொண் முப்பதின் மூவரு மரவயின் மொய்த்தார். (௨)

*சாரசம் சாரதமென் றாயிற்று, ஆதனம்போல.



கருடர் பாதல வாசிக ளிருடியுங் கவர்கந்
தருவர் சித்தரி யக்கர்கின் னரர்விச்சா தரர்கிம்
புருடர் போகமா பூமியர் பூதர்பை சாசர்
நிருதர் தைத்திய ராதியர் குழீஇயினர் நிரைந்தார். (௩)

அன்னு காலையி லகிலமு மளித்தவ டிருமுன்
மன்னி நந்திகள் வாய்ப்புதைத் தனிமுடி வணக்கிப்
பொன்னின் வெண்மணி யிக்கரு சிவிகையிற் பொற்ப
வென்னை யாளுடை நாயகி யிவர்ந்தரு ளெனலும். (௪)

என்று காப்பவ ளம்மணி யானமேற் கொண்டு
மூன்று வேதமு முபநிடத் தொகுதியு முழங்கச்
சான்ற வந்தியர் சூதர்நின் றேத்தொலி தழைப்ப
வான்ற கற்பக நறியபொன் னலர்மழை பொழிய. (௫)

முரசு பேரிகை குடமுழா மோந்தைகள் முருடு
சரள மத்தளந் தகுணிச்சந் தக்கையுந் தழங்க
வரவு நீர்வளை வயிர்குழல் காகள முலம்ப
விரக வின்மது வார்த்தெனச் சகோடயா ழிசைப்ப. (௬)

கவிகை யுந்தழைப் பிச்சமுஞ் சாமரைக் காடுஞ்
சிவிறி யோடொசாக் தாற்றியுங் கேதனத் திரளு
மவிரு நித்திலப் பந்தருந் தோரண வடுக்குஞ்
செவிய ஞாயிறு போயிறு மாநிழல் செய்ய. (௭)

தரும நல்லுருத் தண்டிகைத் தண்டினைக் காவிப்
பரும வல்குலா ருருத்திர மடந்தையர் படர
விரும ருங்கினு மிருநிறத் தாமரை யிருக்கை
மருவு மாதரார் வழியுழி வளனுரைத் தேக. (௮)

சுகந்த மெல்லிலைச் சுருள்சசி துணைக்கரத் தாய்ப்ப
விகந்த வொப்புடை யுருப்பசி படியக மேந்த
வகந்த குந்தனத் தரம்பைபாங் கடைப்பைகொண் டணையத்
திகந்த நாறுபூங் கோடிகந் திலோத்தமை பரிப்ப. (௯)

சவிய வஞ்சலி தொழற்குறி முழுமுதற் றலைவ
னவிய மேந்தியென் றுணர்த்தியாங் கவற்குமுன் னல்கிப்
புவியில் வந்தொரு மின்கொடி புடைபெயர்ந் தென்ன
வவிந யத்தொடு மேனகை நாட்டிய மயர. (௧௰)

நத்தி ராங்கர் கதுப்பினர் விஞ்சையர் நல்லார்
பத்தி ரசகதா னங்களின் விதிவழார் பாட
வொத்தி ராதமு ழ்முற்றுகற் பருந்ததி யுலோபா
முத்தி ராதியர் சூழ்ந்துபல் லாண்டிசை மொழிய. (௧௧)

கங்கை காளிந்தி யிருவருங் கவரிகள் புரட்டத்
துங்க பத்திரை கோதமை பனிப்புன றுளிப்பப்
பொங்கு தாமிர பன்னியும் பொன்னியும் புன்கா
லங்கு மெல்லென வுலாவுமா விருந்தகே ரசைப்ப. (௧௨)

பீத வம்பர வகைபல வடுக்கிய பேழை
யாத ரம்பெரு காதன வணிகலப் பரணி
சீத ளப்பரி மளத்தளக் கலவையஞ் செப்பென்
றோத நின்றவின் னோரன்ன கொடுசில ரொதுங்க. (௧௩)

பூவின் மென்சிறைச் செய்யவாய்ப் பைங்கிளி பூவை
தாவி மேவிய வோவியப் பஞ்சரந் தாங்கி
யாவி யொண்பெடை யோடவைக் காரமு தருத்தி
யோவி றன்பெயர் பயிற்றின ரொருசிலர் செல்ல. (௧௪)

சுருள்ப டிம்பினர்க் கோட்டிளந் தாத்தகர் யூகந்
திரிம ருப்பின வெள்ளிய புள்ளிய சிறப்பின்
மருளு நோக்கத்த கவர்த்தடர் குரத்தன மானென்
றெரிபொன் னீடொடர் யாத்தனர் சிலர்பிடித் தியங்க. (௧௫)

மிடற்ற னிச்சயை விசயையை முதலிய மின்னு
ருடற்று வெஞ்சமர் வென்றிய ராணுடை யுடுத்துத்
தடற்றி னீங்கிய நாந்தகந் தடக்கையிற் பற்றுக்
கடற்று மங்கையர் குழாத்தினைச் சுலவினர் காப்ப. (௧௬)

அணிவ குத்தனர் சாரத ரண்மையர் தொடரப்
பணிலம் வாள்கதை சார்ங்கம்விட் பரிதிநேர் பரிதி
திணிபு யத்திடைச் சேக்கியோன் றேமலர்ச் செம்மல்
கணித மில்சுர ரேற்றன பவிபுரீ இக் கலவ. (௧௭)

இரத பந்திகண் மரக்கல மிபத்தொகை மகரம்
புரவி வாந்திரை பல்லியந் துவைப்பொலி பூசல்
பிரச வார்குழ லார்துகிற் கொடியெனப் பெற்றும்
பரவு தானைவே றொருபெரும் புணரியிற் படர. (௧௮)



பிரம்பி னந்தியம் பிரான்சனம் பிரித்துமுன் போத
விரண்டு மூன்றுநான் கைந்தெனு முலகினு ளின்ன
வுரந்த ரித்தபூ மண்டல மொன்றுமே யுகப்பப்
பரந்த வொன்பதி னவாசிமா திரம்வாம் படைப்ப. (௧௯)

ஆங்கு நான்முகத் தண்ணலை யாக்குவாள் வந்தாள்
காக்கு மாதிறக் கடவுளைக் காப்பவள் வந்தாள்
வீக்கு நாதனை யுயிர்த்துணை மெல்லியள் வந்தாள்
கோக்கு மாரிவந் தாளெனத் திருச்சின்னங் குளிற. (௨௦)

கொழுந்த ரும்புபோ தலர்துறு குளிர்பொழி லூடு
மழுங்க லாவெழிற் சாயல்கூர் மயிலினஞ் சூழ
வொழுங்கு தாவிய வாசவன் னத்தினை யூர்ந்து
செழுங்கு யிற்பெடை செல்வது சிவணிய சென்றாள். (௨௧)

இந்த வாறெழுந் தருளுகின் றழிவிலா வேனில்
வந்த தாகமங் கலமெனப் பொலிய மாது
கந்த சாமியைப் பயந்தவக் கவுரியைக் காட்டி
முந்த நீடகர் மல்லல்கண் மொழிதர லுற்றாள். (௨௨)

உந்த நான்முகில் சூடியி னீபுயர் புணர்த்தக்
கொந்த ளிப்புயற் குழூஉப்புனைந் தாய்கொளிர் கோதாய்
சந்த னூதிய கருவிடை யிடறுபு தளர்ந்து
மந்த முற்றெனத் தென்றலப் பயத்தவழ் வதுபார். (௨௩)

ஈரத் தோர்கலை மிலைச்சியின் மிக்கனை யெனயாந்
தேரப் பான்மதி தரித்தெனத் திகழ்குளச் செல்வி
யாரத் தோடகில் வாசநின் னியன்மணத் தடங்கிச்
சீரற் கத்துவி தத்திறந் தெளிப்பது நோக்காய். (௨௪)

பெரும்பி றைகபா ளியிற்சிறந் தாயெனல் பிறக்கக்
கருந்த லுத்துணை யணிந்தெனக் கவினுதற் கன்னி
யிருங்கு யிஞ்சிகின் படைக்குவெப் பறக்குடை யெடுத்தாங்
கொருங்கு மீயலர் கோங்குக ளோங்குவ காண்டி. (௨௫)

மானென் றேர்தியிற் சீர்த்தனை யென்பது வயக்கக்
கானென் றேர்மயி ரெண்டணிந் தெனமிளிர் கண்ணாய்
வானென் றுன்வர வேர்த்துபொன் மாரிபெய் தாங்குத்
தேனென் றெண்மலர் செழுங்கனி சிதர்ப்பன தெரிதி. (௨௬)

உலகெ லாமுணர் வரும்பிரா னுள்ளமு முயிருங்
குலவி யாடுவான் குயிற்றிய வூசல்போல் குழையா
யலகி லாதநின் பரிசனக் கடிகளோ வாமை
யிலகு பூந்தளிர் செயலையூழ்த் திசைப்பன பாராய். (உஎ)

ஆல முண்டவ னுனைத்துறப் பழகையு நோக்குங்
கோல மல்கொளிக் குருப்பண மிதனம்வீழ் கொடிநற்று
யேல வெற்புனை நடைபெற விரந்துகை விரிப்ப
போல வாயவிழ் தோன்றிகள் பொலிவன காணாய். (உஅ)

உறந்த சாதியம் போதுசம் பகமண முயிர்ப்பச்
சிறந்த வேதுவெ னென்றரன் கருதுகா சிகையா
யறங்கொ ணின்னரு ளொழுக்கினைச் சமழ்க்கழிந் தாங்குக்
கறங்கு வெள்ளருவித் திரள் கருங்குவ காணாய். (உகூ)

சாதிச் செந்துவி ரமிழ்துகா றன்மையா தென்றே
வாதிக் கோன்சுவைத் தற்புத மனைவிக முமலா
யோதித் தன்புரைத் துன்முனே விட்டென வொகாநு
சோதித் தோகையை யொடுக்கிமிக் கேங்குவ சுலாய்க்காண். (௩0)

ஓங்கு தாடிமக் கனிவிதை தாளமென் றுவற்றைத்
தாங்கி யற்கையிற் செயற்கையின் வென்றதந் தத்தா
வீங்கு நீபடர் வுணர்த்துசே யிட்டகா வண்ணம்போற்
பாங்கு மாதவி படர்ந்துமேற் செற்றிய பாராய். (௩௧)

சொல்லு ஞான்றுசே றன்மையைத் துற்றாக் காம்ப
லல்லி நாமுற வணிகிளர் செய்யவா யணங்கே
பல்ல ரம்பையி னெட்டிலை துவக்குமேல் பந்தர்ப்
புல்லி நாட்டுபைந் துகிற்கொடி புரைவன நோக்காய். (௩௨)

உறுப்ப னைத்துளும் பொறியமு தவட்டெடுக் கொழுகிப்
புறத்து வாய்வழிப் பொங்கியாங் கிளநகை புரிவாய்
சிறுத்த புன்மைதா மகற்றநிற் பணிவன சிவணக்
கறுத்து மென்றினை முதிர்கதிர் கவிழ்வன காணாய். (௩௩)

கண்டு கன்முதற் கலப்புறுங் கோதளாங் கரும்பு
மண்டு பால்பரி வமிக்குமென் றெள்ளுசொன் மடவாய்
வண்டு பொன்னலர் மதுநுகர் வரத்தினை யின்பால்
விண்டி ரப்பபோற் குழீஇச்சிப்பன் மிழற்றுவ நோக்காய். (௩௪)



சீர்க்கு நம்பிரா னுனைச் செங்கதிர் செல்வே
பார்க்கி னன்றலர் வாசரோ ருகமுகப் பாவாய்
தேக்கில் வார்கழிக் கொடிவழி முகக்கலை சென்று
மீக்கு லாய்க்கழைக் கூத்தரின் மிளிர்வன பாராய். (௩௫)

ஒருபு றத்தொலி வழங்குகோ டிகழ்தர வென்றி
மருவு காலையெண் வகையொலி தருகள வனித
யுருவ வாவித்தம் மினங்கொலி அனைவியென் றுன்னை
வெருவி யாங்கரி கரியிரி விம்மிதங் காணாய். (௩௬)

பணைகண் ணீர்முத்த முகுப்பவென் றறக்கடல் பரிவா
லணைபு துஞ்சநீ டணைக்க லங்கலந் தோளா
யிணையி னின்வர வளக்கர்மாற் கியப்பவோட் டருவ
துணைய வல்விரை இக் கழுமிசெம் மேற்றமும் பாராய். (௩எ)

திவவி யாழ்சமழ்த் தெனமுகங் கோடு திருமந்
தவவி ளங்குகங் கணகண கூர்ப்பரத் தையா
லுவமை நீர்கினை மகிழ்ந்தெதிர் கொள்ளுமின் னொப்ப
விலறு பூந்துணர்ப் பூவைகே லிலங்கெழில் பாராய். (௩அ)

கோட லெத்தறைக்குரு சிவணல கொடுத்தமேல் பயில்வ
வாட கக்கொடி தளிர்த்தன வகங்கைபெ மைம்மே
யிட ரங்குனை யரிபணிந் தேர்ந்தெனக் காவைசு
காட லர்ந்துமென் காவிறை றழுந்தெழல் காணாய். (௩௯)

அடன்ம தற்றெறு கடவுளு பானுவின் னழகாங்
கடல கத்துகள் கெளிறுறு முங்குவிக் குன்னி
வடிவி னுக்குடை யரம்பைய ரெயிற்றினம் வெள்ளிக்
குடவி மார்செயிக் தாங்கொளிர் குருந்தரும் பெதிராய். (௪0)

தந்தை யிற்பதின் மடங்குயர்த் தனையென நகவர்
பந்து முக்கனிக் தாங்கவிர் தையுகிர்ப் பாவாய்
நத்தி நிற்கண்டு புறவமா நங்கைபுன் னகைசெய்
தொத்து மாலதி முகிழ்ப்பந்த யுவப்பொடு நோக்காய். (௪௧)

ஒருங்க டுங்கடு வுண்டவற் குப்பாயா னாட்டு
மருந்து தேங்கிய மணிக்கலை வள்ளநேர் முலையா
யிருந்தின் வேந்தினைப் புணர்குறும் பெணமயி லெய்ப்புத்
தெருண்டு கோழிபுன் சிறைவிரித் தாலுவ தெரிதி. (௪௨)

தழைத்த வந்தியஞ் சுழிபெயீஇத் தவிமுகி ழிரண்டை
யுழைக்கொள் வாரிச நாளமென் மயிரொழுங் குடையாய்
மழைக் கலிபசு பதிதுலை யாதலின் மகிழ்கூர்ந்
தழைப்ப போலவும் மாவெனும் பசுவனி நோக்காய். (௪௩)

நராய னென்றனைப் பரிந்தவர் பச்சிலை நாணச்
சராச ரக்குழு வனைத்தையுந் தரிக்குமு தரத்தாய்
வராக மோடுவெ நின்முனிற் பஞ்சபு லையத்
தராய தீவினை யிரிவன வுறழ்வன பாராய். (௪௪)

முன்பு ரைத்தவா வயின்வயின் முவுல கடங்கிற்
றென்ப தற்கறி குறிவைத்தாங் கொளிர்மடிப் பெம்மோ
யின்ப வள்ளிலை யினைபசெய்க் கிந்தசம் பந்தத்
தன்பி னிற்றொடர்ந் தாங்குமா ளிலைவன காணாய். (௪௫)

ஒண்ட லைப்படங் கிழுற வுடலமேக் குயர்த்த
குண்ட லித்திறங் குயிப்பிக்குங் குப்பறன் னிடையாய்
பண்ட ரன்கணு ஙுயரி னுன்னுழைப் பத்தி
கொண்டு ளாரெனக் குழலிசை கோவரை நோக்காய். (௪௬)

மரங்கொன் மால்கரிப் புழைக்கையுள் ளிடியின்றி வணங்கத்
திரண்டு மெத்தென் வழுவழுத் தொளிர்கவான் றெரிவாய்
நிரந்த பாசடை நின்மலை ரோடைக ளின்பால்
வரங்கிடக்குமெய்க் கன்னினர் மானுவ பாராய். (௪௭)

உளங்க லங்குபு றெண்டுசேற் றனைபுகுந் தொளிப்ப
வளங்கு லாவிய மாமைசால் சானுவின் மங்காய்
துளங்கு கோடைவான் மழையெனத் துறுகுள நிறைய
விளந்தின் மீன்பொர வெருமைபால் சொரிவன வெதிராய். (௪௮)

ஆவ னாழிகை முன்னிலைப் படுவதற் கஞ்சிக்
காவ லாளர்பின் மறைதரத் திகழ்கணைக் காலாய்
மேவ லிப்பனை மகளுனை வாழ்த்திவர்ய் விண்டாங்
கோவ லாதளி முரல்சரோ ருகமலர் வுனர்தி. (௪௯)

பராவுற் றீண்டொர் நால்வகைப் பக்குவ நிறுக்குந்
தராசுத் தட்டெனத் தயங்கிய பாடுடைத் தையால்
விராவப் பொற்சிலம் போசைசீ நடக்கென மெல்ல
மராளம் புள்ளின் மிழற்றுபு வழங்குமா காணாய். (௫0)



...ண்மைமீ தாக்குத வினித்தவிர் பாக்கு
...பந்துமின் பற்றியாங் கவிர்குதி யம்மே
...ன்னைவான் மகளிர்தாழ்ந் தெனவஞ்சிக் கொம்பர்
...ர்மலர்க் கனத்திறு லொசிவன காணாய். (௫௧)

...மம் புத்தக வடிவினை மேய்நின்
...டந் தெனக்கிளர் புறவடிப் பாவாய்
...வினீ நனிபசப் பான்றுணர் நல்கச்
...ந்தபோற் றளிர்ப்பன விழிக்கனை தாண்டாய். (௫௨)

...ஞுடிய நிறைஞ்சுஞான் றிழையுழை யுக்க
...ரித்துகிர் நிரைபுரை கால்விரற் கன்னீ
...யித்த நீவரு தண்ணடை வசந்தன்
...ய்தெனப் பூத்துறு பொழிலெழி னோக்காய். (௫௩)

...டித்து மதிதம குறைபொழிப் பானின்
...நின்முன் னிரைந்துதாழ்ந் தெனநகு நகத்தாய்
...ளக்குயில் பொலியுமிவ் விருதுவெப் போழ்து
...ரு ளென்பபோற் கூவுவ நோந்தி. (௫௪)

...றுனிறைற் பஞ்சியும் வெட்டுண்டு பறந்தே
...ன்னமைவாய்ந் தினிதுசேர் திலங்ககந் தாளாய்
...னின்னெதிர் கையுறை சொரிந்தென வாரி
...ந்துதுப் பலைக்கரத் திறைத்தல்கண் சாந்தாய். (௫௫)

...வந்தினைப் பயம்பினுள் விழக்துபு பிடிக்கிரத்
...வன்றொடர் புனைஇர்சினந் தணிநடை யணங்கே
...லானெமை முடித்திட முடித்திமென் றுன்னைக்
...கைதைகை குவிப்பபோன் முகிழ்ப்பன காணாய். (௫௬)

...நம்பொ னைச்சயங் கொண்டுதி வாய்மடுத் தடித்துக்
...ங்கன் மீதுட னரிநுவிக் கொளிர்சிறக் கவுரி
...ந்த போரு வயினுரு வருமெனல் விளக்கப்
...ந்த வப்பிடை யுப்பெழீஇக் குலவுவ பாராய். (௫௭)

...டையிற் காரல சவியுறு தெனமயி லசித்துக்
...டபட் டன்றென வமிழ்திகழ் சாயலங் கரும்பே
...டபெற் றேகச்செல் வழியிதென் றுரைப்பபோன் ஞாழற்
...டயிற் செவ்வழி முரன்றுலாம் பொழிவரி நோக்காய். (௫௮)

என்று மங்கலை யினியன வளனெடுத் தியம்ப
நன்று நாடுபு நாயினே னடிமையு நயக்காள்
குன்று முற்கடந் தேகுகா னம்பதைக் குலத்தை
யன்று மாமுது வேனில் புக்கிறுத்ததை யன்றே. (ருகூ)

வேறு.

விருத்த வேனிலாம் வெய்ய தீத்தலை
யிருத்தி மன்னுயி ரெனுமு லோகத்தை
யுருக்க மேற்றிசைக் கொல்ல னூதுவான்
றிருத்திக் காற்றெனக் கோடை யுற்றதால். (சா0)

இறுதி தங்களுக் கேய்ந்த வெல்லையு
முறுதி தாங்கினார்க் குனுற்று நீர்போ
லறுதி முற்றிய வடைம ராடியிற்
குறுகி வீழ்மவை கொழுமை யின்புற.

பற்று நீங்குபு பட்ட கோடரம்
வற்றன் மாமரன் மற்றைப் பாதவ
முற்றும் வேற்றுமை மூன்னெ றுவகை
நிற்றன் மேயின நீடு ருப்பினால். (சாஉ)

அறல்வ றத்தலி னறல்பு லப்படத்
தாறும வார்நதித் தோற்றங் கூர்மொழி
றெறமெ லித்துபார்த் தெரிவை யோதியைப்
புறன் விரித்தனள் கிடத்தல் போன்றதே. (சாங)

ஊன்று மன்னுயிர்த் தொகுதி யாக்கையி
னின்று வார்தரும் வியர்வு நீருமான்
கன்று சென்றலை கான னீருமே
யின்றி யேனைநீ ரில்லை யாண்டரும். (சாச)

கதிர வன்பெறுங் காவிக் நிப்பெயர்
நதியு மந்தனுங் கடுவ னுந்தவ
விதிரொ ளிர்தம மெய்க ரிக்கனர்
முதிய வேனிலின் மூளிந்து போதுமால். (சாரு)

உழல்வெ யிற்பிழம் புருப்ப மாற்றலா
தழலும் வெவ்விய வழலு மட்டிவ்வாய்
நிழலும் வேள்வியந் சாலை நிழலும்
கழல்வொ ரீஇப்புகூஉக் கலந்துய்த் தன்றரோ. (சாசா)



கொடிய தாபவெங் கொதிப்பி னைப்பயங்
கொடிவி கந்தகன் றூதுய ராகியிப்
படியி னின்றமிழ்ப் பாத வத்திடைக்
கடிது சென்றுருக் கரந்து வைகின்றே. (சாஎ)

நளிப்பி லத்துழை நணிய பாணியை
விளிப்ப ருஞ்சுடர் வெம்மை விள்கமர்
வெளிக்கு ளேகுபு மிசைக்க னற்றிற்று
லொளித்துக் கொள்ளிறு மூழ்வி டுங்கொலோ. (சாஅ)

தெய்ய வித்தகு வேனி லாற்றவத்
தெய்ய மெய்யுயிர் தேம்பிச் சாம்பியே
யைய வேகுறும் பரிச னங்களைத்
தைய லுயகி தயாவி னோக்கினள். (சாகூ)

இரங்கி நோக்கலு மெரியும் பாலையாப்
பரந்த பாரெலாம் பண்ணை யாயது
கரந்து வேனிறன் காரிற் சீர்த்தது
நிரந்த தானையை நீடிற் றின்பமே. (எ0)

புத்தி முத்தியும் புறக வர்க்கருள்
சத்தி யாற்றிற்று வியக்கத் தக்கதோ
வித்தி றத்தன வெளிது செய்மவள்
பத்தி யாளர்தம் பாத தூளியே. (எக)

சேரலிற் கோட்படாக் குறைந்த மாமதி
மீளுற் றுலென வேனில் வாயொரீஇ
வாளுற் றொடும் வழிக்கொள் கின்றவள்
வேளுக் காற்றலை விளைத்த மானினி. (எஉ)

இலகு நித்தில யானு நின்றிழீஇச்
சலன மோப்புகே தாரக் காசிபற்
பலர்தொ ழும்பருப் பதஞ்சி தம்பரங்
கலவு மான்மியக் கமலை யாவொய். (எங)

திவப்பி ஞெடுநேர் நீத்த வின்னன
சிவத்த லங்களைச் செய்ய சேறடி
கவற்சி யெய்தப்போய்க் கருத்திற் போன்பு
முவப்பு நீடநின் றுருகிப் போற்றுபு. (எச)

பிழிம லர்ப்பதம் பெயர்த்து மென்மெலக்
கழிசி றப்புடைக் கடகத் திங்களில்
வழுவில் சுக்கிர வார வைகறை
யெழில்கொள் வெற்றியூ ரெல்லை நண்ணினாள். (எரு)

உலந்தி டாதகே ரோடும் வீதியை
வலஞ்செய் தெந்தையார் மான கோபனீஇ
யலங்கொ ளித்தளி யண்க டந்துளாற்
பொலங்கொ டிக்கடிப் புனிதை புக்கனள். (எசு)

நிம்ப நீழல்வாய் நெடிது போழ்துறீஇக்
கம்ப மற்றபல் கணத்தர் பாங்கெலாம்
பம்ப வாறுசெல் பரிவு யிர்த்தபின்
வம்ப ருப்புனல் வாவி நோக்கினாள். (எஎ)

கோடை யுண்டநீர்க் குறைத பத்தறு
காடல் வாள்விழி யருளி னுணிறைத்
தாடு தான்படிந் துறைத்த தீர்த்தத்தைத்
தேடு மல்கிய தீர்த்த மாக்கினாள். (எஅ)

புறத்தி லீரமன் புலர்த்தி வற்கலை
சிறக்கு மாறுடீஇத் திருவெண் ணீறணீஇ
யறப்பெ ருங்கட லக்க மாமணி
விறப்ப மெய்யெலா மிலைச்சி னளரோ. (எகூ)

அஞ்செ ழுத்தினை யன்பு வட்டெழு
நெஞ்ச முக்குபு நீடு காதலாற்
பஞ்சி மெல்லடிப் பாவை பைப்பயச்
செஞ்ச டைப்பிரான் றிருமு னெய்தினாள். (அ0)

புராத னத்தனிப் புற்றி லேவத
விராவு நாதனை வீழ்ந்து தாழ்ந்தெழீஇப்
பராய்வ லங்கொடு பயிற வக்கிடர்
வாரா து காக்கென மனத்துள் வேண்டினாள். (அக)

எண்ணி லாகம மியம்பி னார்மகி
முண்மை யாவது பூசை யென்றுணர்ந்
தண்ண லாரையர்ச் சனைபு ரிந்திடப்
பெண்ணி னல்லவள் பெட்பு மிக்கனள். (அ௨)



உலப்பி னந்திதோர்ந் துதுகு யிப்பினாற்
புலத்தி னுடொறும் பூச னைக்குரிக்
கலப்பை யென்னவுங் கதுமெ னத்தர
விலக்கர் பூதரை யாங்கு முய்த்தனன். (அந)

தாம தேனினங் கறப கக்குல
சேம நன்னிதி யீட்டஞ் செய்யசிந்
தாம ணிந்தொகை தக்க வேனைய
கோம ளத்தவுங் கொணர்ந்திட் டார்கணர். (அச)

தருவி னூற்றரப் பட்ட தார்வகை
மருவு யிர்க்கும்வார் மதும லர்க்குவால்
குருவி ளங்குபொற் கோசி கங்களென்
திருவி னுமொரார்சா ரேழை மார்சிலர். (அரு)

சுரபி நல்கிய துவைம ணத்தகுய்
கருணை யாதிய கறிசிற் றுண்டிதே
மருவு பாளித மறுக மின்னசேர்
தரவைத் தாரொர்சார் தைய லார்சிலர். (அசு)

இருத யத்திடை பெண்ணிற் றுங்கருள்
வரசிந் தாமணி மகிழ்ந்து வீசிய
அரத னப்பல்வே றணிக லத்திர
ணிரைவித் தாரொர்சார் நிழன்மின் னார்சிலர். (அஎ)

சங்க வொண்ணிறி தளித்த வீர்ம்புனல்
பங்க யத்தினிற் படர்வி ரைப்பொரு
ளிங்கண் வேண்டுப கரண மேனவுந்
தங்கு மாரொரு சார்வைத் தார்சிலர். (அஅ)

பவாத்தி நீந்திய பகவ னந்திசென்
றுவாத்திங் கண்முகத் துமைமு னம்மனைய்
சிவார்ச்ச னைக்கு [illegible] ரிவி யம்மெலாந்
தவாத்தி றத்திவட் ச[illegible] வென்றனன். (அகூ)

என்ற வார்த்தைகேட் டிமையப் பைம்பிடி
கன்று னென்னவீன் கறவை நேர்ந்தெனப்
பொன்று ருப்பழம் புற்று நாதனை
ரொன்றிப் பூசனை யுஞற்ற லுற்றனள். (கூ0)

திருமடந்தையுஞ் செய்யுட் செல்வியுந்
தருமவாரிதி சபரி யைப்பொரு
ளருமருந்தெனக் கான வம்மைதன்
னிருமருங்குநின் றெடுத்து நீட்டிய. (கூக)

கந்த தைலம்வெண் கனியின் சாறுதேன்
சந்த மைந்தமு தானெய்ப் பாறயிர்
நிந்தை தீரிள நீர்ப ளிப்புன
லந்தி வின்னன வடைவி னூட்டியே. (கூஉ)

எல்லிட் டோங்கிய விலிங்க மூர்த்திக்கு
மெல்லொற் றூடையை மெல்லச் சாத்துபு
சொல்லற் கொப்பருந் தூய பட்டரை
புல்லச் சூழ்த்துமுப் புரிப்பொன் னூல்புனைஇ (கூங)

முண்ட நெற்றிமேன் மூந்த ணிந்துகான்
மண்ட மேனியிற் களப மட்டியா
விண்டை யாதியர் விணைத்த மாலைகள்
கொண்டு முற்றவுங் கோடித் திட்டரோ. (கூச)

விலைவ ரம்பிலா வியன்ம ணித்தொகை
நிலைபெ றுத்திய வெயின்மின் னீழல்செய்
பலதி றத்தவர் பரணம் வேய்ந்திறை
யிலகொ ளிப்பிழம் பெனமெ றித்தென. (கூரு)

அறுவ கைச்சுவை யமன்ற றொன்றிகண்
மறுவி னீங்கிய வபூப வர்க்கந்தேந்
துறுமு பானியஞ் சுகந்தப் பாகடை
குறுக வைத்தறல் கோட்டி யார்வித்து. (கூசா)

பரிம ளந்தரு பங்கொ டுத்தக
லெரிசெ மூஞ்சுட ரெதிர்வ யக்குபு
கரிசி கந்தறக் கடிக மழ்ந்தொளி
ரரிய காஞ்சனத் தலரி னர்ச்சியா. (கூஎ)

அளவி றந்துகண் ணருவி பாய்தரப்
புளக மேனியிற் போர்ப்ப விம்முறக்
களமு டிக்குநீ கரங்க ளேறநெஞ்
சிளகி யீசனை யேத்தன் மேயினள். (கூஅ)



வேறு.

பூவகந்தேர் வாசிமறை பூவுலவு கோவலவன்
மூவகன்ற மேருவரை சாபநெடு மால்கணையாப்
பாவகத்தாற் கொண்டெடும் பரனீ புரஞ்செற்ற
சேகவத்தைக் கூறிற் சிரிப்பாய் முடியுமே. (கூகூ)

கட்புலவர் வேந்தன் விரிஞ்சியரி யென்றின்னோ
ருட்புலனா லாய்த்தறிய வொண்ணா தொளித்திருந்து
நட்புலவர் நாடவெதிர் நாதவுனக் கோர்சிறிதுங்
கட்புலனா காமதனைக் காய்ந்தனைநீ யென்பதென்னே. (க00)

முடிக்கமலந் தாங்கு முழுமுதனான் முன்னீ
குடிக்கமலஞ் சார்ந்த குலமாலி தன்னை
நொடிக்கமலங் காவெழுந்த வோன்கூற்றன் சென்னிக்
கடிக்கமலஞ் சூட்டிற் றலதுவயங் கொண்டதுண்டே. (க0க)

கரும்பொன்று கார்முகத்துக் காமனொடு சாமற்
றரும்பொன்றுஞ் சாகத் தலைவனய னாதி
யரும்பொன்று துன்பெய்த வன்னரிறு மாப்பைத்
துரும்பொன்று தீர்த்ததலாற் சூழ்ந்தெவனீ செய்தனையே. (க0உ)

அலங்கரிக்கும் வாண்மணிப்பை யாடரப்பூண் மார்பா
சலந்தராச்செற் றண்டர் தமைப்புரந்தா யென்ப
பலம்படைத்த வன்னானைப் பார்த்த வளவி
னிலங்கிளைத்து நின்றதன்றி நீபுரிந்த தொன்றின்றே. (க0ங)

என்றிறைவி யேத்திசைப்ப வீசனிலிங் கத்தி
னின்று வெளிப்பட்டு நிகழ்த்துவா னேரிழையா
யொன்றுமன னஞ்சே லுரைத்தவா நீகோற்ற
பின்றை யுனைப்பாகம் பிரியாமை மெய்வைத்தும். (க0ச)

என்னா வுரைஇக் குழிபுக் கெய்திக் கரத்தலமம்
பொன்னாக வில்லாற் புறவிடையே கொண்டொழிந்து
தென்னார் செழுந்துணைக்கைச் செந்தாமரை முகிழ்ப்ப
மின்னா ரிடைநுடங்க மென்சிற் றடிகன்ற. (க0ரு)

ஆலயந்தீர்ந் தாய்மயிலி னம்பிகைதன் னிம்பநிழற்
பாலணைந்து பைந்தாட் பதுமா தனத்திருந்து
கோலமொன்று முற்றுறுப்புங் கோடாது நேர்நிறீஇச்
சேலடர்ந்து வான்றிருண்டு சேர்ந்ததடங் கண்ணிமையா. (க0சா)

செய்ய கரவிரலிற் சின்முத் திரைசேர்த்திப்
பொய்யகன்ற வானந்த போதவுரு வாய்நிறைந்த
மெய்யன் வியாபகத்துள் வேறறுமா றாரடங்கித்
தெய்ய வரியதவஞ் செய்தனளா லோரயனம். (௧௦௭)

அம்மையொடு பெற்றபிரி வாற்றுமை பற்றியோ
கொம்மைமுலை யன்னாள் குயின்றவிர தங்குறித்தோ
வெம்மையெலா மெய்விக்க வெண்ணியோ யாமறியோ
மும்மைவிழி மூர்த்தியவண் முன்னின்று னேமேறறி. (௧௦௮)

முன்னின்ற நாயகனைக் காண்டலுங்கண் முத்திறைப்பப்
பொன்னின்ற மேனி புளகரும்ப வஞ்சமலர
வன்னின்ற கூந்த லவிழ்ந்து விரையுயிர்ப்ப
வன்னின்ற கொங்கை மலைவல்லி தாழ்ந்தெழுந்தாள். (௧௦௯)

தாழ்ந்தெழுந்த தேவி தனைவாண் முகநோக்கிச்
சூழ்ந்துணரா நின்றவிரு கட்டுணர்வுக் கெட்டாமே
யாழ்ந்தகன்ற நுண்ணியவெம் மையன்மனி வாக்கானீ
வீழ்ந்தவர மென்னை விளம்புதியால் வல்லையென. (௧௧௦)

கேட்ட கவுரி கிளர்ச்சிதமும் புள்ளத்தா
வீட்டமிளிர் செஞ்சடையா யெற்குநீ காட்சிதரு
கோட்டமிலித் தைவெள்ளி யிங்குன் குறிதொழுவோர்
வேட்டவெலா மேவியிட வேண்டு மதாஅன்று. (௧௧௧)

இக்கடிதொண் மாநகர்க்கியா னெய்து கடகமதிச்
சுக்கிரவா ரத்திடைநின் சோதி மயவிலிங்க
மிக்கபெருங் காதல் விரவ வழிபடுவோர்
தக்கவகை நற்பயனுந் தாம்பெறுதல் வேண்டுமால். (௧௧௨)

வானிதய மெக்க வுழுவலன்ப ரெண்ணிலர்க்குந்
தானிமிரும் பூந்தாட் சலப்பருளா நின்றவள்ளால்
யானினது பாகம் பிரியாமை யென்றொன்று
மேனியுட னென்றியுறல் வேண்டு மெனவிரந்தாள். (௧௧௩)

ஏகன் கவுமாரி யேற்றவெலா மீந்துரைப்பான்
பூகம் பொருகளத்துப் பூவாய் வடிவுகொடு
பாகம் பிரியா ளெனும்பேர் பரித்திங்க
ணாகம் பிலம்பார் நயந்த முழுதருளி. (௧௧௪)



மன்னிப் பொலிதியென வாய்மலர்ந் திதம் மாதரசை
மின்னிற் றிகழும் வியன்மேனி வாமத்துப்
பின்னிப் புணர்வித்துப் பேணிநந்தி யாதியர்க
டுன்னிப் புடைசூழத் தொல்கைலை சென்றணைந்தான். (௧௧௫)

இப்பா லுருவோ டிறையிசைந்த பேர்தாங்கித்
துப்பாய வூட்டியெமைத் தன்பொழிக்கு மம்பிகையாங்
கெப்பா லவருநசை இ யெண்பொருளை யெண்பொருளாத்
தப்பாது நல்கித் தழைக்கின்றாள் சந்ததமும். (௧௧௬)

பெருமாட்டி பாகம் பிரியாமை காம
வுருமாட்டி பாற்பெற்ற வொண்சரிதம் விண்டாந்
திருமாட்டி காவிருப்பன் றேவனைநீ ரும்பூ
வருமாட்டி யர்ச்சித்து வாழ்வடுத்த வாறுரைத்தும். (௧௧௭)

ஆகத்திருவிருத்தம். ௬௨௨.

பார்வதிபாகம்பிரியாவரம்பெற்றபடலம் முற்றிற்று.

---

## திருமால் வழிபடு படலம்.

காசிபக் குரிசிலைக் காதலிற் குலவினு
ளேசிலா வதிதிசா மேய்ந்தமா நின்றவான்
றேசினுர் தீம்மொடுந் திதிமகார் பன்மொடோர்தாண்
மூசிகீள் வெம்பகை மூண்டமர் செய்வுழி. (௧)

தீயவல் லசுரரைத் தேவர்வெந் கிட்டனர்
தூயதன் பாற்கடற் சூழலிற் குட்டராப்
பாயலிற் பள்ளிகொள் பங்கயச் செங்கணன்
மாயவன் றன்வயின் வல்விரைந் தணமினர். (௨)

கடைக்கணிப் பளவினிற் கரையில்பல் செல்வமும்
படைப்பவள் கொண்கனைப் பரிதிசேர் பாணியாய்
தடைப்படா துலகெலாந் தாங்கியோங் கெம்பிரா
னடைக்கலம் புக்குளே மஞ்சலென் றருள்கவே. (௩)

என்றசொற் செவியினு டேற்றுணர்ந் தாங்கெழீஇப்
பொன்றயங் கருளிலைப் பூந்துகில் வேய்ந்தகோ
னென்றுநீர் வெருவன்மின் னேறுநாம் வரவென
வன்றினு ரார்த்தலுள் பமராகு யிடுந்துய். (௪)

கருடன்வன் பியன்மிசைக் கண்ணனு ரோகணித்
தொருவலா தியவுளா ருடன்வரத் தானவர்
மருவுசெங் களனகன் வந்துவிற் கால்வளை இ
யுருமினே றென்னநா ணொலிபடுத் தானரோ. (௫)

அணிவருத் தேற்றுநின் றசுரரா யினரெலாங்
கணிதமில் கணைவளைக் கான்மிசைத் தாவினுர்
மணிநெடுங் குன்றின்மேல் வாரிதம் பலகுழீஇத்
தணிவறப் பெருமழைத் தாரைகான் றெனெ. (௬)

ஊறுபா டொன்றுமின் றவணலூர் திப்பிரான்
மாறுபா டுற்றதா னவரைநீ மாய்த்தியென்
றீறிலா வாணைதந் தெஃகிலங் காழியாம்
வீறுசேர் திம்படை விட்டனன் விடுதலும். (௭)

மண்டுவெஞ் சிகையழல் வாயுமிழ்ந் ததுவரக்
கண்டுகா ரவுணமாக் கடலுடைந் திரியல்போய்த்
தண்டரும் பிருகுமா தவனிலைச் சாலையுட்
கெண்டையுண் கண்ணினள் கியாதியைக் குறுகுபு. (௮)

பஞ்சரக் கிளிமொழிப் பஞ்சரக் கோடிக்
கஞ்சமொத் தவிர்முகக் கற்பினுக் காசியே
தஞ்சம்வே றிலைநினைச் சரணடைந் தாமென
வஞ்சமிலன் றன்னமின் னபயநல் கினளரோ. (௯)

தனுமகார் யாரையுந் தன்வயிற் றுன்னவைத்
தினிதிருந் தனளனு னிறையெனும் மெரிசுட
முனிவொரீஇ மீண்டுசூ ராழிதா மோதரன்
றனதுழிச் சாரவத் தண்டுழாய் மாயவன். (௧௦)

திருகுவெஞ் சினமிகச் சென்றனன் றுபதப்
பிருகுவாச் சிரமமெய்ப் பிள்ளையைப் பெற்றசீர்
மருவெழிற் கியாதியின் வதனநேர் நோக்கினுன்
பொருவருஞ் சில்லசொற் புகலுவா ளீதியால். (௧௧)

வேறு.

ஆன்ற செய்தி யயர்த லயர்வித்த
லேன்று டன்பட லாய விவற்றினைச்
சான்ற வேதந் தருபுண் ணியமெனுந்
தேன்ற வாது செயிரறும் பூங்குழால். (௧௨)



இழிந்த கன்ம மிழைத்த விழைப்பித்தன்
மொழிந்த தற்கனு மோதமிம் மூன்றையு
மழிந்தி டாமறை பாவமென் றூர்க்குமாற்
பொழிந்த தண்கதிர்ப் பான்மதி போனுதால். (௧௩)

உயர்ந்த நல்வினை யாவ துயிர்களுக்
கியன்ற வாழித் மேய்ப்ப தவற்றினைத்
தியங்கு மாறகி தஞ்செய தீவினை
யயங்கு வில்லுறழ் வார்புரு வக்கொடீ. (௧௪)

ஒருவ னுலோர் குடும்ப முறுகண்மன்
மருவு மேலவன் றன்னுயிர் வவ்வுதல்
பொருவி லாவற மென்று புகலுநால்
மருணெ டுங்கண் பொரவலை வார்குழாய். (௧௫)

குடும்ப மொன்றிற் கொடுந்துய ரோர்குலங்
கடும்பி னேடுற்றக் காலக் குடும்பத்தை
யொடுங்கு மாறட றன்மமென் றோதுப
விடுங்க ணைக்கயில் வேள்கொள் கவுள்வநா. (௧௬)

ஓர்கு லத்தினை ரூரவ ரூங்கருர்
சார்கு வாரெனிற் சாற்றிய வக்குல
வேர்கு மைந்திட வீப்பது மிக்கறஞ்
சீர்கு லாங்குமிழ் செற்றுளிர் நாசியாய். (௧௭)

மாடொன் றோர்நகர் வைகிய மாக்களா
னுடொன் றக்கிடர் நண்ணினவ் வூர்முற்றுங்
கேடொன் றத்தெறு கிற்பது புண்ணிய
மேடொன் றூண்முருக் கென்று மிதழியே. (௧௮)

ஆத லாற்பற்ப லண்டர்க் கயர்வயா
யாது தானரைக் கோற விளிதரோ
நீதி நீத்தவர் நீசர்க் கிடங்கொடேல்
கோத கன்ற குமுதச்செவ் வாயினுய். (௧௯)

என்ன வின்ன வியம்பது மென்னடை
யன்ன மன்னவன் றுளிது கூறுவாள்
பொன்ன னாய புணர்முலைப் பூமகள்
மன்னு மார்பத்து மாலவ னேன்மியா. (௨௦)

எதிலார்க்கிடும் திசையு முலகினை
யாதி மத்திய மந்தஞ்செய் மூவருட்
டீதி லாவொரு தேவெனு நீபக்க
பாதி யாதல் பரக்கழி விற்றரோ. (௨௧)

பொருவி னேடு புரைதபு புண்ணியர்
வெருவ ரக்கரு வெவ்வினை யாளரென்
றிருதி றத்தவர் மாட்டு மிரங்குபு
கருணை தூண்டல் கடவுட் கடனன்றே. (௨௨)

ஆக்கு வானதி காரமயன் பெறச்
சீக்கு மாறு சிவன்கொள வாருயிர்
காக்கு மாட்சி கடைப்பிடித் திட்டநீ
வீக்கு கிற்ப விழைதன் முறைமையோ. (௨௩)

கொத்தி யன்ற குணத்திர யத்தினுட்
சத்து வத்தைத் தரித்தனை யென்றுமின்
பொத்த னுக்கு புராணம் புகல்வது
மித்தை யோவன்றி வெற்றுப சாரமோ. (௨௪)

என்று ரைத்த வினியன கூற்றினை
நன்று தன்செவி சார்த்தி நவில்கின்று
ஞென்று தீஞ்சுவைப் பாற்கட லாடின்பர்
துன்று யோகத் துயில்பயில் புங்கவன். (௨௫)

உம்ப ராரி லுருத்திர னந்தணன்
வெம்ப கைப்புலன் வென்றடு வேந்தன்யான்
கொம்பர் வாணி கொழுநன் வணிகனும்
பம்ப முத்தம் பதித்தன வாணகாய். (௨௬)

சிட்ட ரைப்பரி பாலனஞ் செய்வது
துட்டர் தம்மைத் துமித்துக் குலத்தொடு
மட்ட லென்றிவ் வரசர்க் குரித்தொழின்
மட்ட லர்த்தலை வார்வுநற் தேமொழீ. (௨௭)

மனுசர் மாதவர் வானவ ராமிவர்க்
கனிசம் வன்றுய ராற்றி யிடுங்கொடுந்
தனுச ரைத்தெற றக்கன் றெனக்கெழிற்
புனித பூகம் புரையு மிடற்றினாய். (௨௮)



எனவி ளம்பலு மேந்திழை யோதுவாள்
வனமி லைச்சிய மார்ப பல்லூழிபன்
டினைவு ரூனிற் பண்ணவ ரெய்துழித்
துணைய வன்றாற் றுலைத்திலை யென்கொலோ. (௨௯)

தயமு கத்துக் கடிய னலியமுன்
னியவு ளார்குழு வெண்ணவெவன் றூதரா
னயர்வு றப்பவு மாழிக் கரத்தநீ
மயர்வு மல்க மடித்திலை யென்கொலோ. (௩0)

திரிபு ரத்திடைச் செற்றிய தீயரால்
விரியு நீர்நிலம் விண்முதல் யாவையும்
பெரிது மாழாந்து பேதுற்ற வற்றைஞான்
றெரிசி னத்தி னிறுத்திலை யென்கொலோ. (௩௧)

என்ற வார்த்தை யினவின மேற்குமா
மன்ற வேமறு மாற்றம் வகுப்பனென்
பின்ற யங்கு வியன்மணி சேர்மறுப்
பொன்ற வாது பொலியு முரத்தினன். (௩௨)

அறைந்த மூவகை யாரும் பிராற்பராய்
நிறைந்த பல்வர சேர்ந்தனை ராகலான்
மறைந்து நின்றெனும் மாயப்பல் லேவலென்
குறைந்தி டக்கழை கொட்டுமென் றுளியே. (௩௩)

அன்ன ரண்டர்க் களப்பருங் காலமிக்
கின்ன லேய்ப்பவு மீசன்வா ளாவுற்ற
தென்னை யென்னி னியம்புவல் கேளிக்
நன்னர் யாழ்நனி நாண்கொளு முன்னக்கயாய். (௩௪)

என்னை யாதிய வின்னுயிர் வர்க்கத்திற்
கன்னை யப்ப னருந்துணை நாயக
னென்ன நின்றரு ளியும் பசுபதி
தன்னை யெள்ளுபு தக்கன் மகஞ்செய. (௩௫)

விழைவி னங்கன் விபுதரெல் லோரும்போய்ப்
பழைய வல்வினை பாற்ற மதிமருண்
டுழையி ருந்தவி யுண்ணப்புக் கேமையப்
பிழைத புத்தனன் பின்றுகன் வீரனால். (௩௬)

அட்ட மூர்த்தி தனையா மவமதித்
திட்ட பாவத்தி னெச்சப் பயன்றுய்த்துச்
சிட்ட ராதலைச் சிந்தித்து வைகினான்
மட்டில் பல்பகல் வன்கணன் மானவே. (௩௭)

அவிச்சை யாற்பரம் யாமென் றுரோவழி
நவிற்றி னேமையந் நன்றியில் வன்பவந்
தவிர்க்கு மாறு கருதியுஞ் சாலநாட்
கவிழ்த்த வுள்ளக் கருணையன் போன்றனன். (௩௮)

மங்கை பங்கன் வயின்வரம் பெற்றவர்
தங்க ளாருயிர் வௌவுந் தகைமையவ்
வங்க ணற்கு மரிதரி தென்பராற்
பங்க மேப்பி முழுதுணர் பான்மையர். (௩௯)

தேவ ரேந்துயர் தீர்தரு செவ்வியிற்
றுவ ருஞ்சிவன் சத்தியைச் சேயெனா
வேவி யெண்டகு சூரபன் மாவினா
தாவி கோடலின் றங்க ணடக்கினான். (௪0)

சாணுற் றேமுயத் தன்னரு ளாகியே
பிரண வத்தினைத் தோன்றிய பிள்ளைக்கு
முரணும் வேழ முகத்தனை யூர்தியின்
விரவு வித்து விமல னொடுக்கினான். (௪௧)

மடிய முப்புர வாணரை யெம்பிரான்
பொடிசெய்ஞ் ஞான்றுந்தன் பூங்கழல் போற்றிய
முடிகொண் மூவருய்ந் தாரெனி னன்னவ
னடியர் மேன்மையை யார்சொல வல்லுநர். (௪௨)

மஞ்சி னேறேழ் வண்ணனிலை தோர்தலும்
பஞ்சி மெல்லடிப் பாவை பகருவாள்
வெஞ்சி லைக்கர வீரர்க் கமரகத்
தஞ்சி யோடுநேர்க் கோற லறங்கொலோ. (௪௩)

தெரிந்து செவ்வன் புகறியென் றுளக்குக்
கரிந்த வுள்ளத்துக் கைதவக் கள்வர்யாண்
டிரிந்தொ ளிப்பினு மீர்த்தட லாமெனா
விரிந்த சீர்த்தியன் விண்டுவின் டானரோ. (௪௪)



நெய்வி ழைந்தொளிர் நேமிசொற் கேட்டவ
ளுய்வி யென்றிங் கபயம்புக் கோர்தமை
மெய்வி ராமுயிர் விட வரினும்யான்
கைவி டேனெனக் கட்டுரைத் தாளன்றே. (௪௫)

மாது ரைக்கு மறுத்துரை யின்மையா
னாது கொல்லலை யச்சிலை போல்விழி
மீத முற்கொழுந் தோங்கி வெளிப்பட
வேந்த னத்தன் வெகுண்டன னென்பவே. (௪௬)

திருகு சிந்தையன் செங்கைச் சுரிகையாற்
பிருகு தேவி சியாதிப் பெயரினா
ளுருவு நேர்வகிர்ந் தாவி யொழித்தனன்
குருதி யெங்கணுந் கொப்புளித் தோட்டர. (௪௭)

பின்ன ராங்கவ டன்வயிற் பேணிய
துன்ன லாரை பொருங்கு தொலைத்தன
னன்ன காலை யருந்தவன் போந்துதன்
பன்னி மேனியைப் பார்த்துப் பொருமுபு. (௪௮)

கண்ணின் வாரி கலுழியின் வார்ந்துக
வுண்ணி லாய வுணர்வு புணர்வற
மண்ணில் வீழ்வுற்று வாய்புலர்ந் தாங்குயிர்த்
தெண்ணி வாழ்க்கைத் துணையை யிரங்குவான். (௪௯)

வேறு.

என்னுரையை யெனாறுணு மெட்டுணையு மெள்ளாது
சொன்னபரி செல்லாந் துணைவின் மகிழ்ந்தியற்றித்
தன்னமுகஞ் சாம்பியிடக் கண்டாற் றவப்புலர்வோ
யின்னுயிரே யின்னனையா யான்றமிப்பச் சென்றியென்னே. (௫0)

நோய்க்கு விலக்காகி நூலின் விதித்தனவாய்
வாய்க்கு முடற்கு மனக்கு மினியவுணா
வாக்கி யெனைவிருந்தோ டார்வித்த விற்குரிய
பாக்கியமே நின்னிழந்த பாவியெங்ங னுய்வேனே. (௫௧)

கற்றுவைப் போலக் கசிந்துருகு பேரன்பு
வற்றுமே யோர்படித்தாய் வைகலுமென் மாட்டுடைய
முற்றுத கோங்க முகைநேர் முலையாய்நீ
யிற்று யென்றோர்ந்து மிருந்தேன்கன் னெஞ்சேனே. (௫௨)

புன்னவன்கை யானீ பரப்பியபூஞ் சேக்கையில்யான்
றன்னுதலும் பாதத் துணைவருடிப் பின்னுறங்கி
முன்னெழூஉம் பேதாய் முடிந்தா யினியந்தோ
வென்ன விருக்கின்று மீராத்துயில மாட்டாவே. (ருங)

தோன்புக் கிலையவு குழிப்பா லணிந்தமைத்திட்
டேன்புக்க மெய்ந்நிழலி னேவுர் தெனைத்தொடர்ந்து
நான்புக்க முன்மு னிலைநிறுத்த நல்லாய்நீ
வான்புக்கா யார்துணையா மாநிலத்து வாழ்வேனே. (ருச)

அன்னை பிதாவிலுடை னாரி யல்தெய்வம்
பின்னையிவ் வேறுமென் றுள்ளத்துப் பேறணைம
யென்னையே யெல்லாமாக் கொண்டு தொழுதெழுவா
புன்னை யிகந்தேற் கொருயகலப் பாழிமைத்தே. (ருரு)

நாணமட மச்சம் பயிர்ப்பென்று நாற்குணமுங்
கோணகலு மேனைக் குணமு நிறையுமொன் றிக்
காணவருந் தாங்குக் காட்சி தருபுனிதாய்
சேணமின்னாய் பெண்மை தெரிப்பதற்கோ சென்றாயே. (ருசு)

அயர்தார் தேறக் கருமருங்கன் றோர்குறைய
மேவாது சான்ற வெழிலார் பதுமைக்குத்
தாயாய கட்டழகி நின்போற் றமியேற்கு
மாயா வரையென்று வன்றுயர மாறுதே. (ருஎ)

வன்பு தனத்தின்றி மனத்தில்லா மாதாநீ
யன்புகெழீஇ யான்செய் தவத்திற்குச் சாதனமா
யின்புதவி நின்றாளநீ யின்றென்னைக் கைவிட்டுத்
துன்புமிடைக் கிம்பர்த் துறந்தா யிதுதகுமோ. (ருஅ)

கண்ணுக் கணிகலமே கற்புக் கணிகலமே
பெண்ணுக் கணிகலமே பெட்புக் கணிகலமே
மண்ணுக் கணிகலமே மாமைக் கணிகலமே
விண்ணுக் கணிகலமாய் மேவினையென் றீவினையால். (ருகூ)

என்றிரங்கி மெல்ல வொருவா றிடர்க்கட்டு
ணின்றெழுந்து தேர்ந்தந் நிகழ்ச்சி முழுதுளத்தி
னன்றுணர்ந்தான் ஞாங்கர் நடுங்கிமா ழாந்துவெரூஉம்
பொன்றயங்கு மார்பனை நோக்கிப் புகல்கின்றான். (சுo)



அச்சத்தாற் காவென் றடைக்கலம்புக் காரைவயின்
வைச்சுப் புரந்த வளர்கருணைப் பைம்பிடியை
நச்சித் தகாதனவுந் தக்கனவு நாடாதென்
னிச்சைப் படியே யியங்கியபெண் ணாரமுதை. (சுக)

நீஇ சிறிது நினையாய் புவனங்கட்
காதி நடுவீறில் வாக்கு மமலசிவ
சோதி யடியேன் றுணையென்று சூழ்கலா
யேதிகொணர்ந் தாயுனையன் றியார்மாலோ யிதிழைப்பார். (சுஉ)

மைமாறு வார்கூந்தன் மாமதிநேர் வாண்முகத்து
வைமாறு வேற்கண் மலர்ச்சேக்கைச் செல்வியைப்பெற்
றைமாறுய்க் கென்பன்னி யன்றளித்த நன்றிக்குக்
கைமாறுப் போலுமவ ளாவி கவர்ந்தனைநீ. (சுங)

செம்பொருள வாகிமச் சென்னிபுகூஉ வாகமமுஞ்
சம்புவே யார்க்குந் தலைவனெனல் மெய்யாயிற்
பம்பெழிலி வண்ணத்தாய் பத்துப் பவமெய்தி
யிம்ப ருழறியென விட்டா னெழுச்சாபம். (சுச)

ஊங்கமுங்க வைததற்பி னேங்குதத நீங்கியரன்
றேங்கிளர்ந்த பூங்கழலே சேர்ந்துளனே லென்பன்னி
யீங்குணர்ந்து முன்வருக வென்னவவ டெஞ்சிவிழித்
தாங்கெழுந்தா டபதனு மாரஞரி னின்றெழுந்தான். (சுரு)

அல்லாடு கண்ட னடியார் குழிப்பளவின்
மல்லார் தசைகெடத்தோர் வார்கரம்பெண் றிம்முதல
வில்லாத வெண்பு மினிதாவி யெய்துமெனி
னெல்லா நிறைந்தவுட லீதாயிர்த்த தற்புதமோ. (சுசு)

மாதவன்வாய்ச் சாபமரீஇ மாதவன்கைச் சாபமொரீஇ
யாதவ னோராழி நழுவ வடியற்ற
பாதவம்போல் வீழ்ந்து பதைத்துப் புரண்டழூஉ
வீதவமா காதினியா னென்செய்கென வுய்த்தோர்ந்து. (சுஎ)

காசியனீர்க் காசினியிற் காசிமுதற் காசினகர்
மூசியவண் வாழிலிங்க மூர்த்தியெலாம் போற்றல்செயாத்
தேசிகவாத் தென்பாலிற் செல்வானுக் காகூழான்
மாசிரியுஞ் சீர்வெற்றி மாபுரநேர் தோன்றிற்றே. (சுஅ)

தென்னகரந் தோறுமலி தெவ்வுகரர் செறிவாற்
பொன்னகரம் வீழ்தருமப் பொற்பதியைத் துன்பனைத்தும்
பின்னகர வின்பம் பெருக்கெடுத்து முன்னீர்ப்பத்
தன்னகரஞ் சேகரத்தின் சார்முகிழ்த்துச் சார்ந்தனனால். (சுகூ)

தேரோடு வீதியினைச் செவ்வே சுலாய்ப்படர்ந்து
காரோடு பைம்பொழிலுப்பக் காண்பார்க் கருள்பரம
னூரோடு வெற்பரையு மென்று வளர்த்தவுமைப்
பேரோடு வன்றேற்றம் பெற்றதிருக் கோயில்புகா. (எ0)

தூய நறுந்தண் சுவையபுனல் சூழ்கிடப்ப
வாய நடுவட்பா சடையிடைவற் றுங்காங்குச்
சேய கமலந் திகழ்தலாற் றன்பள்ளி
மேய கடலின் மிளிருந் தடங்காணூஉ. (எக)

உள்ளும் புறம்பு மொருவா வழுக்கிலொடு
தள்ளுந் தகையவலாத் தாபந் தனைத்தொழியப்
புள்ளும் பொழிச்சுரும்பும் பூமென் பெடைதழீஇ
கள்ளுஞ் சிறப்பிற்றந் நற்றீர்த்தந் தோய்ந்தெழுந்தான். (எஉ)

ஆயுத்த மோத்கமப்பட் டாடை யிரண்டுடீஇ
மீயுச்சி முன்னு விதித்தவற்றில் வெண்ணீறு
சாயுச்சி யாநந்த சாதனமாஞ் சாதனமுந்
தோயுற்ற கோலத்தான் றாயவெழுத் தஞ்சோதி. (எங)

மெய்வாய்கண் மூக்குச் செவியென்னும் வெய்யபொறி
வைவாய பாந்த ளவாயபுலம் போக்கடக்கிச்
சைவாக்கி நேராமல் வையவே தம்பாதி
யுய்வா னடந்து விடைவிடைபெற் றுள்ளணைந்தான். (எச)

மன்னிதிகா சத்தையுயா மாட்டுவரை மாட்டுவரை
நன்னிதிநால் வாயானை நாப்பணிள வல்லிவல்லிக்
கன்னிதினை தோளானைக் காலவணங்கி யெம்பெருமான்
சன்னிதியி லெட்டுறுப்பான் மூன்றுமுறை தாழ்ந்தேர்ந்தான். ()

பாகம் பிரியா திருமுன்னும் பஃறாமுட்
டாகந் தவிரத் தரைமேற் பணீஇத்தனியை
யேகங் கெழுமாது மெல்லவெழு காவலஞ்சூழ்ந்
தேகன் பழம்புற் றிடங்கொண்ட வீசனைசிர். (எசு)



மீண்டு மணுகி வியன்பூ சனையுஞற்ற
வேண்டு மெனமனத்து மீதூர்ந்த வேட்கையினு
ணுண்டு கலப்பை யனைத்துந் துறுவித்து
நீண்டுளசித் தாந்த நெறியுளியஃ தாற்றுகிற்பான். (எஎ)

நாகவுல கத்த நளிமண் ணுலகத்த
மாகவுல கத்த வுபகரண மந்திரத்தாற்
பாகமுறத் தூய்மை படுத்துமா யாமயத்தன்
றேகமனைத் தூத்த சிவமெய்யாப் பாவித்து. (எஅ)

கந்த மலிதயிலக் காப்பிலங்க மூர்த்திக்கு
முந்த வினிதாட்டிப் பின்னர் முனியாவின்
வந்தனவைந் தத்தொகைய வானமுதந் தேனிளநீர்
சந்தம்விரைத் தண்கமல மின்னவபி டேகியூஉ. (எகூ)

மெல்லியன வொற்றுடை கொண்டுதிரு மேனிமிசைப்
புல்லியதட் பத்தைப் புலர்த்தியினைத் தென்னவிலை
சொல்லியவொண் ணூனைழநுண் பட்டுத் துகில்சாத்தி
நல்லிய னூற்றத்து நளிர்சாந்து மட்டியா. (அ0)

சாம்பூ நதத்திற் சமைந்த வுபவீதம்
வாம்பூ ரணகிரணக் கற்றைமணி மோலி
தாம்பூல நேருருப்பூண் சால்பட்ட மேனகலன்
றேம்பூவா ருய தெரியல்வகை சேர்ப்பவணீஇ. (அக)

நிகர்ந்த பரியந்தஞ் சென்று கமழுஞ்
சுகந்த பரிமளத்த தூபத்தி னோடொப்
பிகந்த பரிமிதமா யீண்டுசுடர்த் தீப
முகீந்த பரிவின்மனு வோதியெதிர் கோட்டி. (அஉ)

நெய்தவழ்ந்து வாரப் பசும்பொன் னிறப்பருப்புப்
பெய்தமைந்த வன்னம் பிணர்நீ ரிலிகுசச்சா
றெய்தநன்று வாக்கி யியன்றபுளிஞ் சொன்றி
வெய்தகன்ற வக்கார மிக்கார்த்த பாலடிசில். (அங)

உந்தியவிர்ங் கூதி ருழைத்தோன் றுவாமதியின்
சந்திரிகை போலுந் தவளந் தழீஇயததி
நந்திவிர வோதனமற் றேனை நலத்தபதம்
வந்திவர்குய் வாசக் கருனை துவைவறையல். (அச)

மோதகமா டாபூப மொய்சுவையி லட்டுகங்கண்
மேதகைய வப்புமுதிர் வெந்தையதிரசத்தோ
டோதவரு வேறுபல்சிற் றுண்டிய பானகமுப்
பேதமுறு தீங்கனிமுற் பெட்கும் பலவர்க்கம். (அரு)

பாடலமென் போது பயின்ற நறுந்தண்ணீர்
பீடணவு பூகப் பெரும்பவளச் செங்குலைப்பாக்
கோடிய பைந்திரைய லின்முகவா சம்முதல
வாடகம ணித்தட்டி லார்வித்து நேரிருவி. (அசு)

நாத மணிகறக்கி நன்மரபின் மந்திரித்துச்
சீத மலியுந் தெளிபுனறெ ளிஇச்சுழற்றி
யர்தரவு சான்றிவ் வனைத்தையுமெம் மம்மையப்ப
நீதலையா னுண்டருள்க வென்று நிவேதித்து. (அஎ)

அப்பான் மகாதீப மன்றியுகா ரவிதந்த
துப்பார் சுவாலைச் சுடர்கள் சுடர்வித்துத்
தப்பா றுபசார சோடசமுந் தானியற்றி
முப்பாழ் துமிக்குங் குமிப்புவார்த்து மூன்றுதளம். (அஅ)

கொண்டுதிக ழாகின்ற கூவிளமு ருந்தளிரான்
மண்டுதிருப் பேர்சொற்றர்ச் சித்து மறுவலுங்கற்
கண்டுபெடு பாயசமுற் பண்டங் கனிந்தருத்தி
வெண்டகுகற் பூர மிலக்கி முறையிடுவான். (அகூ)

தேவாதி தேவ திருவெற்றி யூரிலெந்தாய்
மேவா ரெயிலடுநீ வெஃகியஞான ரன்கரத்து
ளோவாகப் பெற்றூர்வே யியாரென் றிருமாப்பே
னுவா பவக்கடல்வீழ்ந் தாழ்ச்சிமுறை யோமுறையோ. (கூ0)

சிந்தோ விடுஞ்சிர்த் திருவெற்றி யூரிலெந்தாய்
முந்தோர் விழிதொட்டு முண்டகமா நின்கழற்கீழ்த்
தந்தோ வியத்தெழுது சக்கரம்வாய்த் தேமாப்பே
னந்தோ பவக்கடல்வீழ்ந் தாழ்ச்சிமுறை யோமுறையோ. (கூக)

தென்னே வுருத திருவெற்றி யூரிலெந்தாய்
சென்னே நெறியோதித் தேவி கறுமுறுப்ப
வுன்னே டிடப்பா லுறைவுள்ளி யூங்குகப்பே
னன்னே பவக்கடல்வீழ்ந் தாழ்ச்சிமுறை யோமுறையோ. (கூஉ



செய்யோய் சிவனே திருவெற்றி யூரிலெந்தாய்
பையோ வெனுமல்குன் மோகினியாய்ப் பற்றுபுநின்
மெய்யோ கையிற்புணர்ந்து சாத்தானை மேனுயிர்த்தே
னையோ பவக்கடல்வீழ்ந் தாழ்ச்சிமுறை யோமுறையோ. (கூங)

அச்சோ மனுவெனக்கொ ளன்னால்வெற்றி யூரிலெந்தா
யச்சோ வழிப்பானி யூர்ந்த வகனிலத்தே
ரச்சோடி யற்றுழியே ருகியுனைத் தாங்கியயா
னச்சோ பவக்கடல்வீழ்ந் தாழ்ச்சிமுறை யோமுறையோ. (கூச)

பஞ்சகத்தால் விண்டு பழிச்சு முறையிடு
வஞ்சகத்தார் வார்த்தைபுகா வள்ளல் செவிப்புகறு
நெஞ்சகத்தை வெளவு நிலவுலவு வேணிமுக்க
ணஞ்சகத்து நின்று நகுகளநாற் றோளபொலிய. (கூரு)

எண்ணியவெக் காலுமன்பர்க் கேவா ளிமையாசேற
கண்ணியமர்ந் தோர்பாற் கலந்திலகு நந்திகண
நண்ணியமன் றேத்த நமாது பரம்பதி
புண்ணியசொ ரூபவிண்ட யேயியெதிர் போந்தனனால். (கூசு)

நாடினு னன்றுதிருக் கோலத்தை நாரணனே
ரோடினன் சித்தத் துவகை புவிட்டெழுல
லாடினன் வீழ்ந்தா னழுதான் றொழுதெழுந்தான்
பாடினன் சாமமே பரவசனுய் நின்றெழுந்தான். (கூஎ)

பின்னொருவா றுதெளிந்து பெருமானை
யன்னமலை யன்ன வளித்த திருமானை
தன்னரடி போற்றி நயந்தெம் பிருநூனீ
ரென்னதவஞ் செய்தே னெளியேனீ ரிங்குவர. (கூஅ)

என்றுபரா யம்பகங்கா ணின்ப வருவிமுக
குன்றிழியத் தானுக் குழறப் புளகரும்ப
வொன்றுமுடல் கம்பிப்ப வுள்ளங் கனிந்துருக
நின்றவனை நோக்கி நிமலன்மணி வாய்மலர்வான். (கூகூ)

நல்லபுரு டார்த்தமொரு நான்கையுங்க முற்றெருக்கு
வல்லதர வற்றுகி வல்லார்வெவ் றானையெல்லாம்
வெல்லுதலின் வெற்றிநகர்ப் பேர்த்தாய வீண்டெமைநீ
யொல்லுவகை யன்பா லுஞற்றுவழி பாடுவந்தாம். (க00)

வேட்டவர் யென்னை விளம்புதியே வி றுமெனக்
கேட்டபுயல் வண்ணன் கிளப்பான் பிருகுமுனி
மாட்டகலாக் காதலியென் மாமி தயித்தியரை
வீட்டவிடாக் காரணத்தவ் வெய்யாடன் மெய்போழ்ந்தேன். ()

கண்டவிரு டீசன் கனன்று பிறப்பொருபான்
மண்டலமீ யெய்துபுநான் மையாக்கு மாவைதான்
றண்டமிது நன்றாகத் தன்கருணை பாலித்துத்
தொண்டனேற் காத்தி சுயம்புவே யென்றிரந்தான். (க0உ)

அக்கூற்று வார்குழைக்கா தன்முதலும் வேதாதி
யெக்கூற்று மானு மினிதுணர்ந்த மாணிநற
மிக்கூற்று வண்மலராற் பூசித்து வேண்டலுங்கோ
பக்கூற்று மாற்று பகத்தான் பகர்கின்றான். (க0௩)

சொற்ற பிருகுவெனுந் தூயோன் சடசித்தா
வுற்ற பிரபஞ்சத் துள்ளளமையு மூவிதத்தென்
னற்ற பசுவோ டளப்பரும்பா சப்பொருளைக்
கற்ற புலங்கடந்த நம்மகத்துங் காண்கிற்போன். (க0௪)

ஆர்த்தி யறியாத வனைய தவ னேத்திரமெம்
மூர்த்தியொழித் தொன்றையுநா டாவம் முனிவர்க்கெஞ்
சீர்த்தியல தோதா தவனுடைய சிந்தனையெம்
பூர்த்தியிடை யன்றிப் புணராதா லெப்போழ்தும். (க0௫)

முற்றுணர்ந்தேங் கண்ணன்றன் வைத்தமுதிர் மெய்யன்
பிற்றெனவொன் றோதேனு மீண்டொருவா றுயுங்கா
ளற்றகுதி சால்யாய்க்கு நாள்பலபன் னென்புழந்து
பெற்றவிளஞ் சேய்பாற் பெருகுபரி வெற்றற்றே. (க0௬)

அன்மருவா நெஞ்சத் தவன்கரத்தா லர்ச்சிக்கும்
புன்மலரெம் மெய்க்குமைமென் பூங்கையினுங் கின்புறுக்குந்
தொன்மறையோ னேத்தெடுப்புச் சொன்னல்வா யானிளவல்
சின்மழலை வார்த்தையினு மெஞ்செவிக்குத் தித்திக்கும். (க0௭)

வனுக்க வானு மெடுத்தமொழி யானுமிக்குச்
சோதிக்க வேண்டா துனைத்துசிவ சோதிதனைச்
சாதுக்கள் சார்கவெனச் சாற்றுமறை யுய்த்தயிந்து
மீதுக்க நீங்கநமை வந்தடைந்தா னப்பெரியோன். (க0௮)



நீவரிய நீள்சுருதி நின்னை விதியையும்பர்
காவலனை யென்றாழைக் காமர் மதியைவிண்கால்
பாவகனீர் மண்ணைப் பரமென்றுங் காங்கிசைப்புச்
சிவபரி பக்குவத்தை நோக்கியெனச் சிந்தைதெளீஇ. (க0௯)

மேதகவி ரோங்கி விளங்கு நிகமாந்தந்
நீதியலாச் சுத்த சிவமே திமையபதி
யேதிலரெல் லாமவனை யெண்ணியின்பு மேம்பசுவென்
றோதியமெய் யோர்க்கெமது தாள்சேர்ந்தா னும்மேலோன். ()

சந்திநீ பாதந் தலைப்பட்டார் தம்பொருட்டியா
முத்திநெறி நான்காப் பாத்து மொழியருளா
னத்தி யுணர்ந்துபர ஞானமுறீஇ யெம்மொடுநா
னத்துவித மாய்ப்பே ரானந்தந் துய்க்கின்றான். (ககக)

அன்று விசோப காமு மறுக்கிரு
பொன்றுக வின்றும் புகல்கின்றாங் கேளித்தை
யின்றைக வெஞ்ஞான்று மெய்யாகக் கொண்டொன்று
சொன்றாற் பயந்தன்றி வாரா தொலையாதால். (ககஉ)

பல்லா யிரவிழுவு ளீத்தெமையே பற்றியுளா
ரெல்லா வுலகு மினிது படைத்திருவி
னில்லா தழித்து நினைப்பின் மறைத்தருள
வல்லா ரெனினவனையர் மாண்பினியென் செப்புவதே. (கக௩)

பூவருபொன் வாழ்க்கைமனை புத்திரர்தாய் தந்தைதமர்
யாவருநம் பூங்கழலென் றெண்ணியிறு மாப்போர்க்குத்
தேவர்முத லோர்வணங்கித் தொண்டு செயற்பால
ரேவலவர் கோள்வெஃகின் யாமுமரு மன்றே. (கக௪)

உள்ளமெமக் கீந்த வுழுவலன்பர் மேம்பாடு
கள்ளவிழுஞ் செய்ய கமலத் திருநயனே
விள்ளவொரு சற்றும் விறலில்லா நீயுமன்னை
தெள்ளவிதந் தோதுந் திறத்தா ரெவரம்மா. (கக௫)

வானந் துளங்கினென்னை மண்கம்ப மாயினென்னை
தானம் பெயர்ந்துவரை தான்றடுமாற் றெய்தினென்னை
மீனம் படிலென்னை வெய்யசுடர் வீழினென்னை
யூனந் தமாதநமக் காட்பட்ட வுத்தமர்க்கே. (கக௬)

ஓட்டிலெள்ளிர் காஞ்சனத்தி லொத்தியங்கு முள்ளத்தார்
கேட்டினொடு மாக்கங் கெழுமாத் திருவுடையா
ரீட்டியுபே ரன்பா லெமைக்கும் பிடலன்றி
வீட்டினையும் வேண்டார் விறந்தநெடுஞ் சீரடியார். (௧௧௭)

ஆயாதி யம்புமெழுத் தைந்துடைய மெய்த்தொழும்பர்
பேயாதி யாவனுகல் பேர்கென்பர் காலனைவெங்
நோயாதி நோவரினு நாயினிவை யெம்பெருமா
னீயாதி யென்று பிறதெய்வ நேர்ந்திரவார். (௧௧௮)

வெண்டிரு நீறே விரைநாறு சாந்தமாக்
கண்டிகையே சாலச் சுதிருமணி யாரமாத்
தொண்டினிதெம் பாற்புரிவே தொல்லைமுறை செய்தெழிலாக்
கொண்டிருமாந் தின்புறுவோர் யாதுங் குறைவில்லார். (௧௧௯)

நாமருவு காயமுதல் யாவுநம்பாற் றந்தொழிந்தார்
யாமலது வேறொருபற் றின்மையா லாடுவது
மாமகிழ்வு மெங்கண்ணே வைத்த தொழும்பர்புரி
நாமவியுந் தீயவற்றை நல்லவெனா நாங்கோடும். (௧௨0)

மாதிவனை வாமத்து வாழ்வித்த நம்பொருட்டுத்
தீதுபல வாற்றினரு மீண்டு திருவடிபுக்
காதரவால் வேண்டினயா மாற்றுவோ மன்பருக்குப்
பேதையர்கள் செய்புன் பிழையும் பொறுக்ககிலேம். (௧௨௧)

சித்த மிறந்து சிவாநந்த மேலீட்டாற்
பித்த ரெனவும் பெரிது பிசாசாவே
சத்த ரெனவுமுழி தந்திடுவ ராயினுநம்
பத்தரை யாமாகப் பாவித்தல் வேண்டுமால். (௧௨௨)

என்னவொரு வாறுதொருத் தியார்க்கு மளப்பரிய
நன்னடியார் சால்பனைத்துஞ் சாற்றிக்கற் சார்ந்தவரி
யின்ன லிழவாமை யிருடிமொழி பொய்யாமை
யன்ன கடுவுண்ட வமுதவாய் விண்டருள்வான். (௧௨௩)

பந்தமிலான் சொற்றுங்கு நீமேம் பகம்பத்து
ஊந்தி லனுக்கிரக மற்றைந்தி ளிக்கிரக
நந்த விறைதந்துன்னை நயக்கான்வோ மின்பிறவி
யுந்தீ வுலகிற் குபகார மாய்முடிக. (௧௨௪)



என்ற திருவாக்குக் கேட்டனுமே யிந்திரையோ
னன்று மகிழ்கூர்ந்து நாயகநீ கேர்போந்து
மன்ற வருளொறுப்பு வைத்தாள வென்னேற்றேன்
முன்றமியே னென்ன மொழிந்திறைஞ்சி நின்றற்கு. (௧௨௫)

வெள்ளியமெய்ச் செங்கண் விடையான் விடைகொடுத்துப்
பொள்ளெனத்தோல் வன்மீகப் பொற்குழியின் பாற்கரந்தா
னௌவ்வொளிக்க வுத்துவஞ்சே ரோங்கன் மருமத்தான்
மெள்ளவரி தந்திலெரீஇ வைகுண்ட மேயினன். (௧௨௬)

வேறு.

வெருவொ ழிந்தவன்
றிரும டந்தைய
மருவி வாழுநாள்
ஞெருறி னத்தரோ. (௧௨௭)

சோம கன்னெனு
நாம தானவன்
பூம னித்தர்தன்
றீம வாயினன். (௧௨௮)

ஆவ வந்தணர்
தேவர் தாபதர்
யாவ ருந்துயர்
மேவ ரும்படி. (௧௨௯)

நாத ரூபமாம்
வேதம் வெவ்விரீ
டோத் தீரினுட்
போத ராப்புக. (௧௩0)

பின்றை வேட்பிவட்
பொன்றி மாய்தலிந்
தன்று வெம்பசி
துன்ற மாழ்கியே. (௧௩௧)

சுரரோ டிந்திர
னாவு நேமிபூங்
கரம ணிந்தவற்
சரண டைந்துமேல். (௧௩௨)

அறையும் வெய்யவன்
மறைக வர்ந்தமை
முறைக ரைந்தவற்
பறைவி யென்னலும். (கஙங)

கேட்ட வச்சுத
ஞட்ட மேனியாய்
வாட்ட நிற்செய
வேட்ட வஞ்சனை. (கஙச)

கோறு மஞ்சனீ
சேறி யென்றசொற்
றேறி மீண்டனன்
வீறு வச்சிரன். (கஙரு)

பின்னர் நாரணன்
சொன்ன தீயவன்
றுன்னி வைகிட
முன்னி யோர்ந்துடன். (கஙசா)

பிருகு சாபமும்
பொருவி றெய்வமும்
பெரிதி யக்கலா
விருதி லத்திழீஇ. (கஙஎ)

மயிலை யாய்ச்சனித்
துயிர்கொள் வார்கடற்
பயில்பு சோமக
னுயிர்கு டித்தனன். (கஙஅ)

உகவை நெஞ்சினை
னகல்பு வித்தல
மிகவ ளத்தக
நிகம நாட்டினன். (கஙகூ)

தோமளாவிய
சோம காசுரக்
கோம கன்றனை
யாம லாதியார். (கச0)



முருக்கி யாரனம்
பெருக்கு வாரெனக்
கருத்த கத்தறச்
செருக்கு கிற்புழி. (கசக)

நெடுங்க டற்குண்முன்
மடிந்து பாவியோ
டொங்கு றைந்துளான்
மிடைந்த வெவ்வியான். (கசஉ)

வந்த டர்த்தனுஞ்
சந்த மீறுருஉத்
தந்த மாதவ
வந்த வாதனை. (கசங)

யசன மாந்தர்பால்
விசன முட்டுபெஞ்
சசன னச்சம
னசன மாக்குபு. (கசச)

வெங்க ளுறைவ
னங்க மாகிய
சங்கம் வெய்ந்தனன்
பொங்க மீக்கவீ. (கசரு)

இருவ கைப்பட
வருத ருக்கன்வீந்
தருகு வார்ச்சியன்
பெருமை யக்கினன். (கசசா)

நிலத்தொன் றுவிமுற்
றலக்கண் சேரிய
கலத்கம் போதினைக்
கலக்கங் கண்டனன். (கசஎ)

மேல மாதிரப்
பால ளிங்கவைஇக்
கால காலன்மாட்
டோல மிட்டனன். (கசஅ)

குகன்ற ளுறுநழ்
விகந்த தானுவவ்
வுகண்ட யீன்கமீரு
டகந்தை கட்டனன். (௧௪௯)

வேறு.

ஈந்த மைஇரா விபச்சத்
மேதனம்பன் வியன்பிர
சாத மெயர்விய தன்மையான்
மாத வத்திரு வாசனும். (௧௫0)

முத்தன் வைத்து மூழ்கிய
மெத்து பள்ளா மீட்கிய
துத்த வண்கட ரூல்வரை
மத்து நட்டு மதிக்குநாள். (௧௫௧)

அந்த மந்தர மாழ்வுகன்
டுந்து மாறுனி யும்பர்கோ
னந்து தாங்கியை நண்ணின
னெந்தை காத்தி யெனத்தொழ. (௧௫௨)

மாமை நீனிற மாயவன்
றீமை தீர்ந்த பயோததி
சீமை யூடமிழ் திண்கிரி
யாமை யாயுருத் தாற்றினன். (௧௫௩)

நரலை நன்று கடைந்திடக்
கரவு கொண்ட கணக்கிலாத்
திரவி யங்கள் செறிந்துமேல்
வரலு மோகையன் வாசவன். (௧௫௪)

கவர்பு சென்று கவின்குலா
வுவனை யுற்றன னுற்றபி
னிவறு கிற்பதொ ரித்தொழி
லெவரி யற்றுவர் யாமலால். (௧௫௫)

என்ன வென்னுபு கேசவன்
முன்ன மொப்ப முனைத்தன
னன்ன தன்மை யறிந்துநீங்
கன்னன் மொக்கு கணேசனை. (௧௫௬)



உய்த்தக் கூர்மவெந் கோட்டொடு
கைத்துச் செற்றிய தற்பமும்
புய்த்திட் டேழ்பொழில் போற்றினன்
மைத்துச் சிர்த்த மணிக்களன். (௧௫௭)

வேறு.

நிற்க வின்னது வீடு மாற்றலா
ரெற்க மின்றுபெற் றளவ ரத்தினன்
பொற்க ணூனெனப் பெயரி யான்புவிப்
புற்க லர்க்கெலாம் புதிய கூற்றனன். (௧௫௮)

பண்டு வையகம் பேர்த்துப் பாதலங்
கொண்டு சேறலுங் கோனை விண்ணவர்
விண்டு வின்புடை விளம்ப வெந்திறன்
மண்டு வன்றியாய்த் தோன்றி மாலவன். (௧௫௯)

இரணி யாக்கனை யினைம ருப்பினன்
முரணி யீர்ந்துடன் முருக்கி முன்னையிற்
றரணி தாபியாத் தன்னை யின்றியோர்
சரணில் பார்க்கெனுத் தருக்கி விந்நபு. (௧௬0)

உலகி னுக்குநோ வுறவு ளைத்தல்கண்
டலரின் மன்னியா ளுதி வானவர்
நிலவு லாவியு நீர வேணியன்
மலர டித்தொழா வரவு ரைத்தனர். (௧௬௧)

நாட்ட மூன்றுடை நாத னெய்யென
வேட்டு ருக்கொடு போந்து மேதினி
கேட்ட னீங்குமா றனைய கேழலின்
கோட்டை வேரறக் குற்ற ளித்தனன். (௧௬௨)

சில்ல வானியஞ் சென்ற பின்றைவா
னெல்ல னுக்குமெய் யிரணி யப்பெய
ரல்ல டர்ந்தவுள் ளவுணர் காவலன்
பல்ல வல்வரம் படைத்து ளானரோ. (௧௬௩)

உரவு நீர்முடை யிப்பி யொள்ளொளித்
தரள மாமணி தன்னை யின்றெனப்
பிரக லாதனும் பெயரி னோங்கிய
வரகு மாரனைப் பயந்து வாழுநாள். (௧௬௪)

உலகம் யாவையு முறுக ணேய்த்தனன்
புல்வ ரச்சுதன் புடைய வன்புரி
கலக மோதனுங் கண்ணன் றேன்றபு
வல்லன மன்றமோர் நரம டங்கலாய். (௧௬௫)

தந்தி போலுமத் தான வேசனை
யந்தி மாலைவா யணிகொள் வாய்தலு
டுந்தி யூருவார்த் துகிரி னுடல்
கொந்தி யீர்த்திழி குருதி மாந்தினன். (௧௬௬)

மையல் விஞ்சினன் மன்ப தைக்கணர்
செய்ய முற்றனன் றிருவு மன்புடை
வெய்யன் மஞ்சனும் வேண்டிக் கூறிய
மெய்ய வின்மொழி சிறிதுங் கேட்கலன். (௧௬௭)

பிரம னத்தனை பிறந்து தைவயிற்
பரம னென்கழற் பணிந்தி ரக்குறும்
சாப நேர்கவான் வாய்த்த கொளிகோல்
சாப மேனிதான் றரித்தெ ழுந்துபோய். (௧௬௮)

மாய வன்னெனப் பட்ட மானிடச்
சீய யாக்கையைச் செற்றிக் காலிடைத்
தூய தண்டத்துத் துண்டக் கண்டகன்
சேய நாப்பண்யிச் சேக்கி விக்கினான். (௧௬௯)

முழங்கு சேரதிலீ தனைக முதல்வன்
வழங்கு சக்கர வர்த்தி மாவலி
தழங்கு றற்கழற் றனுச நாயகன்
பழங்க ணண்டரைப் படுத்து வைகினன். (௧௭௦)

யாக மொன்றனை யியற்று மெல்லையின்
மாக மேகினர் மாறு ழைந்தம
சோக மோப்புமா சொற்றி றைஞ்சவற்
றுக வென்றரி யதிதி மேல்வயின். (௧௭௧)

மதிப்ப ருங்குறள் வடிவ மாணியா
யுதித்துக் கோப்படர்க் குலகின் மூவடி
மிதிப்பி டந்தர வேண்டு மென்னவாள்
விதிர்க்கு மாவலி வேந்தை யேற்றனன். (௧௭௨)



அத்த யித்திய னளிப்ப வாறொடு
மித்த டப்புவி யீர டிப்படுத்
துத்த மப்பதத் தொன்ற வன்முடி
வைத்த ழுத்தினன் பிலத்து மாழ்குற. (௧௭௩)

மாவ லிப்பெயர் மன்னை யங்ஙன
மாவ லித்திட வமிழ்த்தி னுமெனப்
பூவ லிக்குரந் தந்த புங்கவன்
றூவ லிற்கிளர் தருக்கு கெஞ்சினன். (௧௭௪)

உயிரொ வைக்குமிக் குலவி ழைத்தனுஞ்
செயிரி னீக்குவான் சிவனு ணர்ந்தடல்
வயிர வற்கொடவ் வாம னன்றனுப்
புயிறு வக்கினைப் பகிர்ந்து ரித்தொடா. (௧௭௫)

அரிய கஞ்சுக மாத்த ரிப்பியூடக்
கரிய னீடகங் காரந் தீர்த்தென
விரிக டற்படி விசும்பு பாதலக்
கிரிவொ ழித்தன னீறு நிற்கவே. (௧௭௬)

சமத மச்சம தக்கி னிப்பெய
ரமல மாமுனி யயர்த்த கோன்பிறற்
பிமா மில்லவன் பன்னி பெய்வளைச்
சுமதி ரேணுவை கருவுட் டின்றுபு. (௧௭௭)

அரபி நான்மலர்த் தோகை மார்பினு
னரன ருட்கிலக் காத ரேன்றுமா
பரசு பாணியாய்ப் பவித்தி ராமநாம்
விரவி விற்றொழின் மேதக் கானரோ. (௧௭௮)

தாதை யாணையாற் றாயைச் செற்றவற்
காதி யிட்டமன் கார்த்த வீரியன்
வீத லெய்திய விளித்துக் கோக்குலம்
பேது றச்சலாய்ப் பெரிது நாமினன். (௧௭௯)

அத்தி தோடகோர்ந் தச்சு றுத்தனுஞ்
சித்த மேனிமை யாந்து தேம்பியோ
னெத்தி றத்தினு விஃது நீர்மெனு
வுய்த்து ணர்ந்தியோ குழந்து தேறுபு. (௧௮௦)

ஒன்றுமா நகர் மெய்த்த விப்பழம்
புற்று நாதனைப் போற்றிப் பூசியாத்
தற்று யர்த்தநீஞ் சாயை நீத்தொளி
பெற்று வையமீப் பிறங்கு கின்றனன். (௧௪௧)

கேச வன்பினர்க் கிளர்செங் கோலினுற்
சாச னங்கடாந் தயா தற்குரிக்
கோச லைப்பெயர்க் கொம்ப னுள்கருப்
பாச யத்தினுற் பவம ரீஇயினுன். (௧௪௨)

இராக வாக்கியை யேய்ந்து தாடகை
விராதன் வெங்கவந் தன்சு வாகுவெந்
தராவி ராவணன் றம்பி யின்னரைப்
பொராவி ளித்தனன் போரி னென்பவே. (௧௪௩)

யாத ரெண்ணிலா வாகை வீரரென்
றோத நின்றவ ருயிரை யெவ்வியப்
பாத கக்குலம் படிவு கொண்டெதிர்
போத லுற்றிடர் புரிந்த லைத்ததால். (௧௪௪)

மதியல் லாந்துடன் மழுங்கி யன்னவன்
பொதிய மால்வரைப் போந்து பொன்னிநன்
னதியொ டுந்தமிழ் நல்கி யாழியுண்
பதித பாவனன் பாற்ச ரண்புக. (௧௪௫)

அகத்தி யப்பிரா னபய மீத்தனன்
சகத்தின் மிக்குயர் சயபு ரித்தினை
யுகப்பின் வாழ்வுகூ ருமையொர் பாகனை
யிகப்பில் பூசனை யியற்று கிற்றியேல். (௧௪௬)

வன்ப ழித்திரண் மாண்ம தான்றுநின்
றன்ப மேனவுந் துமியு மென்றலு
மன்ப தத்தினை மறுவ லும்பணிந்
தன்ப னம்முனி யனுஞை யேற்றெழா. (௧௪௭)

மதுனை யம்பதி மருவி யுற்பலம்
பதும மல்கிய பாசு தீர்த்தநீர்
கதுமெ னக்குடை இக் கண்டி றைஞ்இ
முதுவன் மீகமா முனிவன் கோயிலுள். (௧௪௮)



வேறு.

வேகந்தப மெல்ல வலங்கொடுபோ
யேகந்திகழ் தந்தி யிளங்குமரன்
பாகம் பிரியாதவள் பாதமல
ராகம் புவியண்ம வணங்கியரோ. (௧௪௯)

பழம்புற்றிறை பாங்க ரணைந்துதொழூஉ
முழங்கிப்பொலி சீர்த்திய மூர்த்திதனை
வழங்குற்ற சிவாகம வாய்மையினு
லழுந்தற்பொடு பூசை புரிந்தனனால். (௧௫0)

சீராதனை யாற்றிய தாசரதி
நீரேறனை நோக்கிர நின்றுழிய
வோராடிய மெய்புள செய்தமுடி
யோரார்கர மேறிய வேத்துதலும். (௧௫௧)

பத்திக்கு மகிழ்ந்து பரன்குழியி
னெத்திக்கு மிலங்க வெளிப்படுபு
தித்திக்கு மொழிச்சிலை யோடுறுதி
யத்திக்குழு வீடிய தஞ்சலினை. (௧௫௨)

இருமைக் குரவீரு மெனக்கெதிர
வருதற் கறன்யாமுன் வருந்தனனென்
றருகச் சிலைவீர வுரைப்பநெடுந்
தருளைக் கிடலாகிய கண்ணுதலோன். (௧௫௩)

வரம்பற்ற வரங்கள் வழங்குதலிக்
கரந்திட்டன ருற விராகவன்மிக்
குரம்பெற்றரி நங்க ளெறிஇத்தனது
பரம்புக்குயர் போக மடுத்தனனே. (௧௫௪)

அலகிற்றனிர் வைகு லகன்றபினர்
மலைவைத் திருமால் வகதேவன்மனை
மலர்கற்பெழின் மாதர் வயிற்றுதியாப்
பலபத்திர கண்ண ரெனப்படலே. (௧௫௫)

ஏர்கின்றுழி வீதியின் வாயொர்படந்
தளர்வொன்றி விழுந்தது தான்றெரிபூஉ
வளமந்தனை முந்தவ ளங்கையினுல்
வள்ளன்றிரு வெடுத்தது மாயந்தரோ. (௧௫௬)

அக்கோவத வன்பவ மட்டிவேன்
மிக்கோத வியன்கடன் மேதினியென்
டிக்கோடு தீர்த்தமெ லாங்குடையா
வெக்கோயிலு மீசனை யேத்தினனால். (௧௯௭)

சேதுத்தனி யாத்திரை செய்யவலி இப்
போதுற்றவ னல்விதி புக்கமையான்
மேதக்க விறப்புர பேமளவிற்
றீதற்கு பழிப்பொறை தீர்வுணர்பு. (௧௯௮)

இரும்பூதின னீர்ம்பில கங்கையடு
நரும்பூதியொ டக்க நயந்தணியூட
வுரும்பூசை பிரானை யுகுத்தியமா
சுரும்பூமுக லாய கலப்பையொடு. (௧௯௯)

வரதத்திரு மந்திர வாய்க்குறுகிப்
பிரதக்கிண வந்தனை பெட்டினையாப்
புராணத்தியல் புற்றுறை நாயகனைத்
திரவத்தின னர்ச்சனை செய்துதொழு. (௨௦௦)

மழிதங்கிய வன்கைய னேர்வவொய்க்
குழிநின்றெதிர் கொம்மென வந்தருளி
பழியின்றி யடுத்த வறன்கடைநிற்
பிழிதந்தது வெஃகிய பேசெனனும். (௨௦௧)

எளியேன்பவ மெத்தனை யாயினுமுன்
னளிதேய்ந்து பதாம்புய நான்மலரு
டளிபோன்று றமேவண் டெனையெனக்
களிகூர்ந்தது நல்குபு கார்த்திகனன். (௨௦௨)

மாணித்திரு மேனி மறைத்தமைகண்
டாணிப்பொ னனிந்த வலப்படையைப்
பாணிக்கடை பற்றியு மாங்கொருவி
யேணிற்பொலி தன்னுல கெய்தினனே. (௨௦௩)

இவன்றம்பி பிரங்கடை யின்மைகுறித்திக்
கவன்றந்த வடற்புரி யைக்கலவித்
தவங்கன்றி யியற்றினன் ஊத்தலையிற்
சிவன்பைந்தொடி யோர்புடை சேர்த்திலக. (௨௦௪)



மருங்கண்ணினர் பாரிடர் வாழ்த்திய
நெருங்கண்மைய னேற்றிடை நின்றருளக்
கருங்கண்ணா னெழுந்து கழற்பணியூஉ
வொருங்குன்மைய புளக்கன் வழுத்துதலும். (௨௦௫)

நார்வைத்த தனாந்தமை நாகின்வயிற்
சூர்வைத்த பல்புத்திரர் தோன்றுவரத்
தார்வைத்தவர் தம்மு ளொருத்தனை நம்
பேர்வைத்தழை யென்று பிரானகல. (௨௦௬)

தானைவிற்று வரைப்பதி தன்னுடமா
வினைவற்றன னின்ற மகாருளொரு
தனையற்குறி மைப்பெயர் சாம்பனெனப்
புனைவித்து நிவந்து பொலிந்தனனே. (௨௦௭)

கலியாலினி நீதி கவிழ்த்துயிர்கள்
மெலிகாலையில் வெண்பரி மாமுகனு
மொலிநீர்சல வுங்க ணுதித்தரியிம்
மலிசீர்நகர் மன்னு சிவக்குறியை. (௨௦௮)

ஆராதன மாதர வாலிழைபா
வாராவருள் வாய்த்து நெறிப்பிறழ்விற்
றீராவழல் சேதனர் யாவரையு
நேராய வொழுக்கி னிறுத்துவனால். (௨௦௯)

திருவாசுகி யென்று நினைத்திகெத்
திருவாசுகி யாரியி றைச்செயிவெங்
கருவாசுகி நீந்துறு காதையினு
கருவாசுகி பேறு கதைப்பதினி. (௨௧௦)

ஆகத் திருவிருத்தம் ௨௧௦.

திருமால் வழிபடு படலம் முற்றிற்று.

## வாசுகி சிவத்துரோக நீக்கப் படலம்.

நன்மணித் துணிநீர் வாழ்க்கை நயந்தவு மூர்வ தாமு
னென்மயிர் கெழீஇய வொண்கேழ் வியன்கிறைப் புள்ளரு மாவு
மின்மணங் கமழ நிற்கு மினார்த்தறு மரனு மெல்லாம்
பொன்மய மாகி மிக்குப் பொலிவெய்தொன் றுவனே யன்றே. (௧)

நியமமின் றெவர்க்கும் வேட்ட நிரப்புக நிரப்பு கின்ற
வியலியல் காம தேனு விருந்திப் பதும சங்கர்
தயலினைம் பாத வருசிந் தாமணி யவண வேலங்
குபர்தினை வண்மை யுண்மை யுரைப்பவும் வேண்டு மேயோ. (௨)

நவைப்பொதி யழுக்குத் திய நாற்றம்வேர் வின்ன நீங்கிச்
சுவைத்தொறு மினித்தி யற்கைச் சுகந்தரன் றமிழ்ந்தி யானார்க்
குவைக்கல ஞமு றப்புக் கொண்டகப் பொருள விக்குஞ்
செவைப்படி திஞ்சொற் றெய்வத் தெரிவையர் செவியிற் றம்மே. (௩)

வாலிய சாயல் சேக்கி மதிப்பொரு மான்சு வைத்தாய்ச்
சாலவு மேன்மைத் தன்மை தழீஇப்பரி மளமன் கான்று
காலுமெவம் பொழிகட் கின்ப நல்குபு சாவா மூவாச்
சீலமும் பெறுத்தா நின்ற தெள்ளமு தாயி டைத்தால். (௪)

மருமலி பன்னி றத்த மலரினு சிகைகள் வவ்விப்
பருகிய கனிகித் தித்துப் பரிசெப்பிற் றவத்தன் னொன்று
குருகதின் குரல்கா தார்த்துக் குளிக்குநர் பவஞ்ச வட்டி
வருபய னுயிர்மெய்க் கீயும் வரநதி யாவ யிற்றே. (௫)

காவற நூறத் தோன்று கரும்பழந் தவிர்க ருன்று
காவத மாறு நாறு காறுநீன் முருகு யிர்த்து
மேவரு நறவு தெவ்வ மிறிற்றெறு கரும்பு மூசாப்
பூவர்கூர் கற்ப கப்பைம் பொதும்பரன் னுழிய மாதோ. (௬)

சண்டையார் கனவி லேனு மெற்றைக்கு முணர்ந்தி லாத
காண்டா நயனர் கூகார் காகங்கேழ் மின்னும் பொன்னு
மாண்டிழி யேவ லாள ரலகிடுங் குப்பை யென்றான்
மாண்டகு செல்வப் பொம்ம லெம்மனோர் வகுக்கற் பாற்றே. (௭)

ஒவறு குமாரச் செவ்வி யொளிகிளர் யாக்கை வாய்த்தி
யாவரும் விதிநீ டேத மென்றும்பாப் புறவின் றுள்ள
மேவன புரிந்து நாளும் விழுப்பெரும் போக முன்மார்
தேவராங் கிகவா ராயி னன்னதிற் சிறி துண்டே. (௮)

சேட்டவிர் துறக்க வாணர் சிலையுரந் தினிதோள் வேய்ந்த
தோட்டலர்க் கன்னி தாமந் தொங்கலும் புலர்வ கின்றேன்
மோட்டடு பசிநோய் தாக முதலிய வற்று லன்னோர்
வாட்டமெஞ் ஞான்று மெய்யார் வயங்குத விரும்பூ திற்றே. (௯)



அழிவொழி கற்ப காட்டு ளாமிய மாடந் தெற்றி
பிழிமலர்த் தடனும் யானம் பிறங்குசெய் குன்றி வற்றி
னெழினல மொருங்கு காட வினிதுருழ்ந் தவனு ளார்க்கு
விழிகள்சும் புளியா வாக விதித்தனர் விதியார் மன்னோ. (௧௦)

போனிறச்* சுவர்க்க மன்னு போக்கியப் பொருள னைத்து
மானிடாத் தூய வாயு வாற்றினுன் மறுத லேத்த
வீனிட மிதிப்ப தற்கு மினைந்தரு வருப்புற் றன்றோ
காணிலந் தோய்க லாமை கடவுளர் கடைப்பி டித்தார். (௧௧)

தாமரைக் கண்ணன் றன்வாழ் தனிப்பதந் தாமந் தன்னிற்
காமரு மல்லற் றுகல் கருத்திடை நனித்துத் தெள்ளி
யேமவன் புரத்தி னிற்போந் துபேந்திர னென்னப் பட்டு
மாமகிழ் பூத்து வைகி னதனையார் வழுத்த வல்லார். (௧௨)

துன்பமார் கின்ற வைப்புச் சூர்த்தபா தாள மென்று
மன்பதை யின்பந் துன்ப மகிழ்க்குந் தேம் வைய மென்று
மின்பமே நுகருந் தான மினைதவிர் சேணு டென்று
முன்பனூல் கூறிற் றாயின் முதனுவீர்ந் தியாத வற்றுள். (௧௩)

மூன்றன்மு தலகத் துள்ளு முதிர்கதிர் விதிர்சு வர்க்க
மான்றதென் றுறைய கிற்றற் கழிக்கு வேறு வேண்டா
தின்றதனை யிலமும் பாருங் கிழக்கவா யிழிந்தி ருப்பத்
தான்றக வோங்கி மேக்குத் தங்கலான் விளங்கு மாறே. (௧௪)

திருவுநல் லறிவுமொன் றிச் சேர்வருங் குரைத்†தெனுந்தொ
லருகவிட் புலத்துச் செல்வ ரடைமொழி யென்று மின்றிக்
குருவெனப் பெயரி யானைக் குரவனுக் கொடுமேம் பட்டுத்
தெருளுமன் னுடைய் பாத நேற்றுமால் விபுத நாமம். (௧௫)

வேதத்து விதந்து ரைக்கும் வேள்விமுற் பலவு றத்த
மேதக்க வறங்கண் முற்றும் விதிமுளி வழாமை யாற்று
நீதற்ற சான்றோர் பேறு நிப்பிய சுவர்க்க மாணு
லோதற்கு முணர்வ தற்கு மொன்றுமே புதன்வி ழுப்பம். (௧௬)

இவறுயர் மகளிர் மைந்த ரெழினகர் போகா திக்குத்
தவலில்விட் பொருளை யொப்பாச் சாற்றினர் கவிஞ செல்லா
முவமன்மற் றுவமே யத்தி னேங்குமேம் பாடு டைத்தென்
றெவருநன் றறிய வற்றே லெற்றுக்கு விரிப்பா னின்னும். (௧௭)

* போனிறம் - பொன்னிறம். இது சிந்தாமணி நாமகளிலம்பகத்து 237-ம் செய்யுளுரையானுணர்க.

† குரைத்து—அரிது.

இத்துணைச் சிறப்பிற் றூய விருவிசும் புவனை நாப்பட்
டத்தொளி வயிரங் கோமே தகமர கதமா ணிக்க
முத்தம்வை டூயந் துப்பு முற்படு மணிசெய் கோயி
லெத்திசை யிருளுங்கீறி யிந்திரற் கமைந்தன் றன்றே. (௧௮)

அதனிடை யவுணா ராற்று மடைதுயர் சுரேசற் கென்றாழ்
முதலன கோளு நாளு முறையிட மொய்த்தாங் கெண்ணில்
விதவர தனங்க ளென்று வில்லுமிழ் தருமத் தாணிச்
சுதன்மையிற் சிய வேறு சுமந்தமெல் லணையி னும்பர். (௧௯)

மகபதி சசிதம் பாங்கர் வயங்கவீற் றிருந்தோர் கூற்று
னகமக ளிறைவன் சென்னி நண்ணுநாந் திருமான் முன்னோன்
றகவுடை முடித்து வாத சாந்தத்தின் மேலால் வைகன்
மிகமுறைத் தெனச்சேர் திங்கள் விழையவெண் கவிகை யோங்க.

மின்னுடைச் செங்கோ லோச்சி விண்முழு தாளா நின்ற
தன்னுடைச் சீர்த்தி யிட்டந் தழைத்தபே ருவகை பொங்கித்
தென்னுடை யிருமருங்குந் திரண்டெழீஇ யாடன் மானப்
பன்னுடைத் தாளக் காம்பிற் பாணிறக் கவரி தாள்வ. (௨௧)

பொய்யமை றமைரா கப்பிற் புலோமசை வான்முகத்தைத்
தெய்யமா மதியென் றூர்த்துத் தெவ்விய செவ்வி பார்த்துப்
பையசீன் றுழல்வி யங்கும் பையரீன் பாந்த ளெய்ப்ப
வைபசாந் தாற்றி செற்றி யசைந்திளங் காலி ரட்ட. (௨௨)

அழகெனும் புணரித் தோன்று மறல்கரு நெய்தல் முத்த
மிழன்மணி பவளகண்ட கீர்த்திப் பணில மொக்கு
ளொருகலை சுழிம ணற்குன் றொளிர்நெண்டு வரால்கூர் மம்போல்
விழுமிய வவய வத்து மேனகை யடைப்பை யேந்த. (௨௩)

அளகமாம் பைம்பொ ழிற்கீ ழவிருமா வடிக்கு மிழ்ம்பூந்
தளவரும் பிலவு வீழி தண்கமு கமைதெங் கங்கா
யிளமையா லரசி வற்றி னிலமகிழ் கதலி யென்ன
வுளனிவ ருறுப்பு வாய்ந்த வுருப்பசி களாசி யேந்த. (௨௪)

நிலைஇப நலத்த தான நேரிழை மின்ன ஞருட்
டலைமைபா டானே யாய தகுதியை வெளிதி யார்க்கு
மலைவற வவா ரம்பை மாரெனும் பெயர்தெ ளிக்கு
மலைகட லமிழ்தின் சாய லரம்பைகோ டிகம்ப ரிக்க. (௨௫)



பொதுவொழித் தொருபெண் ணூக்கும் புகிதென மாத ரங்கங்
கதுவிய வுபர்பு மிக்க கவின்றொ றெட் டனைகொண் டாக்கிச்
சதுர்முகன் றன்பே ரல்கு றழால்வலா ததுபோ ஞறும்
பதுமகள் வதியச் சேர்த்த திலோத்தமை பண்ணிற் பாட. (௨௬)

இங்கிதத் திறத்தாற் காம வின்பநூற் பயன்வ ழக்கிச்
சங்கிதக் கருவி யைந்துந் தழங்கவுள் ளைகிழ்ந்து கண்டோ
ரெங்கிதற் கொப்புண் டென்ன வில்லையின் வேறென் றோர்பாக்
கங்கிதத் திலக மிட்டா ரமக ளீர்ந டிப்ப. (௨௭)

புணர்ந்தகப் பொருள்கூட் டுண்டு போகியை யென்றுந் தீரா
வணங்கயி ராணி யென்று வனையளா நோக்குந் தோறும்
வணங்கொள்சிந் தியரி யக்க மாதர்கந் தருவ நல்லார்
மணங்கமழ் குழலின் விஞ்சை மங்கையர் நறுமு றுப்ப. (௨௮)

திருந்தெழிற் செயல்கள் மிச்சி நீர்க்குநள் ளேய்பாற் றுய்போற்
பெருங்கிரி மனைத்தெங் கோனும் பிராட்டியை யின்ன ளிரை
யிருந்திடு கென்னக் காட்டு மேற்றஞ்ரா ணிண்மைக் கற்பி
னருந்ததி யருள்கூர்த் தொண்ணி ராசன மெதிர்சு முற்ற. (௨௯)

பெருகிய பவத்து மூர்த்தம் பெயர்கிளப் பளவிற் பாற்றுந்
திருவுடை யைவ ருள்ளுஞ் சிறந்துள கன்னி யாய
வருமணிப் பாவை யன்ன வகலிகைக் கிளியு மேனை
யிருடிபன் னியரும் பல்லாண் டிசைந்தவண் பாலி சைப்ப. (௩௦)

விற்படை வல்லன் மாயன் வீறருள் செல்வி கேள்வன்
பொற்படை யான்ம வர்க்கம் புரக்குமா லேனுந் தம்பா
லற்புடை யாமைகாணி னவன்பொலி வனைத்து மாங்கே
சொற்படை கொடுநா றுற்றற் றாயவ ராசி கூற. (௩௧)

என்னைநின் வேட்கை யீதென் றின்னுயி ரிணுஞ்சி றந்த
பின்னுமேற் றலைவாழ் வீதி விடங்கனுந் தியாக ராசன்
றன்னைமுன் முசுகுந் தற்குக் கந்தகன் பெருவள் ளன்மை
யின்னன பிறபு கழ்ச்சி யெடுத்துவந் தியரி யம்ப. (௩௨)

கலங்கரு ருலகுக் கேய்த்த கடிபரன் மூன்றுஞ் செற்ற
விலங்கிழை பாகன்மாள விருமைமிக் குயர்பு திட்பம்
விலங்கலில் விலங்கற் கெல்லாம் விரிசிறை யறைசெய் வாசித்
துலங்குறு பிரதா பங்க டொடுத்துமா கதர்மு ழங்க. (௩௩)

இருட்குழற் பொன்னோர் மார்பத் தினைபவ னிடத்தி ருப்பத்
திருத்தகு வடிவா லீசற் சிவணிய பன்னோர் கோடி
யுருத்திரர் வலப்பான் மன்ன வுவமையொன் னிரட்டி கொண்ட
வருக்கருள் விட்ட தேவ ரனுக்கவர் பணிக்க னிற்ப. (௩௪)

கருடர்கின் னரரி யக்கர் கந்தரு வந்தி யோர்கிம்
புருடர்சீ ரெகர் சித்தர் புகரில்விச் சாத ராதி
வருபதி னெண்க ணத்தர் வாய்மையிற் புதைத்தி றைஞ்சித்
தருணநன் கோர்ந்து தேர்ந்து தத்தம குறையி ரப்ப. (௩௫)

அணிகிளர் கற்ப மைந்து மருமுனி யாவுஞ் சிந்தா
மணியுநன் னிதியி ரண்டு மாண்கலை யுண்டி யாந்தம்
பிணியவிழ் மலர லங்கல் பிறங்கொளிக் கலனென் றின்ன
குணிதமில் பண்டம் வேட்ட குழிப்பறு நூதவு கிற்ப. (௩௬)

இன்னணந் திருவோ லக்க மெய்திமூ வுலகு மானை
முன்னவன் செங்கோ லோச்சித் துரிசற வாழு நாளி
லன்னவ னுக்க லிக்க மவுணர்நேர் கண்டுங் கேட்டு
மன்னமுக் கறுத்தார் தன்ன மனனமுக் கறுத்தி டாதார். (௩௭)

உரந்தகு தகுவ ராயோ ரோருழிக் குழீச்குழ் கின்றார்
வரங்கிடந் தெம்மை யீன்றான் மாற்ற வளநிதி மைந்தன்
புரந்தரன் றிருவத் தோங்கப் பொலிவிழுந் தியாமெல் லேமு
மிரங்குது மடவார் போனம் மெறுழினோ டுணர்ச்சி யெற்றே. ()

வரம்பல தவத்த ழைத்து வாம்பல தவத்த ழைத்து
நிரந்தர முயிர லைக்கு நீர்மையேம் வாளாங் குற்றாற்
பரந்தவா னவரே யல்லர் படித்தலை மனித்தர் தாமு
மரந்தைமிக் கார்த்து நம்மை யாட்கொளற் பால ரம்மா. (௩௯)

விலங்குகட் கிறைமை மேய விறலுண்ட வெங்கட் சீயக்
குலங்கரிக் குழாத்திற் கோறற் குயிப்பொரீஇ வழித ருப்பி
னலங்குவெள் ளுளைய வன்ன வடலரி யேற்றி னத்தை
மலங்குபுன் னரியுமச்சோ மைத்துன முறைபா ராட்டும். (௪0)

ஆதலால் வானோர் வீறு ளாக்கல மினித்து னைந்து
காதலி னின்பந் துய்க்குங் கடவுளர் வருக்க முற்று
மோதக வமரி யற்றி யாறுதா ருக நாமிக்
கோதறு மனையர் செல்வங் கூட்டுனல் கரும மென்றார். (௪௧)



அப்பொரு ளாசனன் மாட்டாய்ந் தசுரர்கோ விசைத லோடுந்
துப்பொரு வீரெல் லீருந் தொல்படை சுலவி மொய்ப்பச்
செப்பொரு கொடியி னீண்டுச் சேர்மின்வேந் தாஞ்னொரு மென்ன
முப்பொரு முரசு மொன்று முழங்கிற்றேற் முகிலும் வெள்க. ()

அரைக்கணத் திர்த்துப் பற்றி யற்றைநா ணமது வாசந்
தரைக்கண வாகிவீழ்க் கடிந்தவா சவனை யின்னே
புரைக்கண வாத வல்போ ருஞற்றுபு வேறு மென்று
வரைக்கண்ம் வருவ மான வந்தவா னிவந்த தின்டோர். (௪௩)

வயமலி வச்சி ரத்தின் வைகறு முடல்பொ றுத்தெம்
பியலிற நெருக்கி யூர்ந்து பிழிந்தாற் பொருமா றேகு
முயர்கிரிக் குகவி செய்யாக் குற்றனை யாது மென்னப்
புயலொருங் கணைந்தாங் கார்த்துப் பொழிமதக் களிறு போந்த. ()

குழியமெய்க் கொடிய கோன்பிற் கொழுந்தமிழ் முனியா னம்மை
யழிகுழி யின்றான் பித்தின் கயமடுக் காற்செற் றுற்றுச்
செழிதுயர் மால்வெற் போடு இனிச்சியாம் வினைந்து மென்று
வெழிதிரைப் புணரி யேர்ந்த தேப்பலாம் புரவி யாற்ற. (௪௫)

ஓர்வயிற் றுதித்தார் தம்மு ளொருவன்மற் றையரை யெல்லாம்
பேர்வற வாள்வெ னென்றுப் பிணங்குபு கூற்றுங் காற்றுந்
தீர்வருந் தீழற்சித் தீயுஞ் சேர்ந்தருப் பல்வே றெய்திப்
போர்வலித் தரிமேற் செல்வான் புக்கெனப் பொருநர் புக்கார். ()

பெரிதலர் மாலைச் செக்கர் பிறைநகக் கங்கு றன்சேர்
வரியனின் றுடற்ற மேனி யளப்பில பரித்துற் றாங்கு
விரிதரு சேந்த பங்கி வெள்வளை யெயிறு மின்னக்
கரியமா காயச் சேனைக் காவலர் மேயி னாரால். (௪௭)

தானவர் தலைவ னெல்லாத் தானையுந் திறுத்த தன்மை
மானமி லுவகை பொங்க வாள்விழி குளிர நோக்கி
யானதொல் லமைச்சு நின்றாற் கண்டாசீ ரமர்த்து வவ்வ
நானவின் முறைவ குத்து நோன்படை யெழுக வென்றான். (௪௮)

பேரிகை முருடு மொந்தை பீலிசங் கிரலை காளம்
வாரியன் முரசு பம்பை மத்தளந் துடியி டக்கை
பாரிய முழவந் தாளம் படகமா குளியென் றிப்பல்
லாரிய வகைத்து வைப்பின் றுழனிமுன் வான்புக் கன்றே. (௪௯)

கொழுங்கொடி யுகந்த வையங் கூம்புடை வங்க மாகச்
செழுங்களி வழுவைத் தோடு திணிந்தமுட் கூறல மாக
வெழுந்துபா யிவுளி யிட்ட மீர்ந்தெளி தரங்க மாக
வழுங்கொலிப் பதாதி யென்னு மார்கலி நடந்த தம்மா. (ருo)

திண்மற லவுணர் ஞாட்புச் செய்யிய . ருந்தி றந்த
ளெண்மக ளுதி யாயவும்பரை வெவ்வே றேந்த
மண்மக ளுறுவிற் பல்ல வடிவெடுஉ மீப்ப டர்ந்தாங்
கெண்மலி யனிகப் போக்கி னெழுந்தகள் விசும்பிற் சென்ற. (ருக)

வேறு.

நயந்து மாற்றலர் நண்ணியுந் தெம்பா
வியன்ற மின்ன வியற்றுது மெனப்போ
ரியார்ந்து சேனுல் கூறு படுத்துவ
வயக்கு வித்து வயங்கு பதாகையே. (ருஉ)

படிக்கந்த வருகினிப் பொரம்பல
விட்டி தெனு பிமையவர் கன்னுவிறு
பட்டி தோட்டு செயிமைல மாயதெனா
பட்டினு வென்குடை யம்பிப்பார்தன. (ருங)

முன்னொர் ஞான்றெம் முதல்வரு வல்வினை
றன்னை மாட்டிய சாருந்திசூரற்
கின்ன நன்றி யிழைத்துமென் றுரிரு
மென்னு மாறு துதைந்த தழைப்பிச்சம். (ருச)

கோல வட்டத்தர் கூரிய வாளினர்
சில வட்டத் திசைபுகழ் மன்னரை
ஞால வட்ட நடைத்துயர் நீப்பவொத்
தால வட்ட மளிந்தவங் கூழிரர். (ருரு)

அகிர தாதியர் தங்க ளமர்ந்தன்பிக்
கதிய கின்னை கரியுற்ற மர்த்தற்கு
விதியி லெல்லை மிகக்களித் தார்ப்பபோன்
முதிர்மு ழக்கின முந்தின சந்தனம். (ருசு)

இதனி னுன்ற திலையெனத் தேர்ந்ததம்
வதனம் வாய்த்து வலவைமன் னொன்னர்க்கு
முதன்மை யெய்தின னென்று முனேத்தென
மதர்வி றேங்கி மதகயஞ் சென்றன. (ருஎ)



தங்கண் மாமுகஞ் சார்தலின் யாவையு
மங்க றுங்க வடைவைவற் றுயதென்
றிங்க ணேனைப் படையை யிகழ்ந்தெனத்
தூங்க வாசித் தொகைசிரித் தேகின. (ருஅ)

இரதம் யானை யிவுளியெ லாந்துணைக்
கரண மாகக் களத்துறி மித்தமாய்
விரவு மின்னரை வீழுங்கொ லென்பபோ
னரலு வார்கழல் வீரர் நடந்தனர். (ருகூ)

அந்த வேலை யசுர குலாதிபன்
றங்க வெற்பிடைத் தாமரி யேறென
மங்க லப்பெரு வையமி வர்ந்தனன்
சங்க முஞ்சுர சங்கமு மேங்கவே. (சுo)

ஒற்றி னுலிந் நிகழ்ச்சி யுணர்ந்தரி
யெற்றி னிச்செயற் பாலதெ னுவிட
ருற்றி ரங்கி யுரைப்பரும் பொன்னுரை
யிற்றி ருந்தி யிருஞ்சமர்க் கேன்றரோ. (சுக)

தந்தி ரந்தின் றலைவரைக் கூய்நம
திந்தி ரப்பதஞ் சாடிய வெய்திறு
ருந்தி ரக்க முருத்த தயித்திய
ரெந்தி ரம்படை யீண்டெழு கென்றனன். (சுஉ)

கடவு ளிரிறை கட்டளை யிற்றிரீன்
டடலி னீடவு ளார்க்கு நமர்கட்கு
முடல்வ டுத்தது மற்றையு றுப்பொடும்
படர்மி னென்று பறைபறை தந்ததால். (சுங)

மதன்க லைப்பொருள் வல்லதங் கொண்கராற்
றிதங்கொள் செய்கையி னின்பு ததும்பிய
கதம்ப வார்குழற் கன்னியர் காஞ்சிரும்
நிதம்ப நேர நிவந்தசைந் துற்றதேர். (சுச)

மலையும் வாட்கண் மகளிர்கச் சேர்ந்துவெம்
முலைக டுப்ப முகத்திற் படாம்புனை
யலைவி றின்மைய வாகிச் செருக்கிறுற்
றலைநி மிர்ந்து ததைந்தன தந்தியே. (சுரு)

கன்னித் தார்ப்பொருப் பென்றிர் கருத்தென
மன்னிற் பாய்வன மாதிரத் தோடுவ
விண்ணிற் செல்வன வேக துரகமாங்
கென்னிக் கோடற்கொண் டுவகை யீண்டின. (சுசு)

மங்கை மார்கணைக் காறுதன் மைவிழி
கொங்கை போன்றொளி ராவங் கொடுமைசந்
துங்க நாந்தகந் தோற்பரந் தாங்கின
ரங்கண் வெங்க ணமர ரணவினார். (சுஎ)

இன்ன நால்வகை வாகினி யீண்டிறப்
பொன்ன கர்க்கிறை போர்க்குவெண் டேகன்மீ
மன்னு சீத மதிக்குடை நீழற்கீழ்த்
துன்னி யேற்றனன் றுன்னலர் சேனையை. (சுஅ)

தான வப்படை வீருஞ் சார்ந்தெதிர்
வான வப்படை மன்னர்த மேற்றெறக்
கூனு வில்லிடைக் கோத்துக் கொடுங்கொலை
யீன மெய்ப்படை யென்னில வெய்தனர். (சுகூ)

விட்ட வப்படை வீழற மாறுநந்
றிட்டர் வாளிக ளேவி யிறுத்தவர்க்
கிட்டி விண்ணவர் கேழ்கிளர் பூணின்றோள்
கொட்டி யார்த்துக் கொடுங்கணை கொட்டினர். (எO)

அன்ன வண்டுகள் வண்டுத லாகவே
பன்னொ மெய்ப்படை பற்றலர் தூர்த்தனர்
முன்னெ திர்ந்து முனிந்திமை யோரும்வெங்
கொன்ன வின்ற கொடுஞ்சரம் வீசினர். (எக)

தாளுங் கையுஞ் சரிந்தனர் விண்ணக
ராளும் வேந்த னனிகத் தவர்சிலர்
தோளு மொய்ம்புந் துணிந்தனர் தானவக்
கோளின் வீரர் குழுக்களிற் பற்பலர். (எஉ)

வைய மோடெதிர் வையங்கண் மோதின
மையன் மாவொடு மாவின முட்டின
செய்ய வாழி சிகரமொ டிற்றன
வெய்ய மத்தகம் வெள்கோ டுடைந்தன. (எந)



வேறு.

தானவர் தலைவ னின்ன சமரினை நோக்கி மிக்க
மானம தாக்கக் கோப மண்டிக்கட் டீயு குத்துக்
கூனல்வன் சிலைகா னேற்றிக் குணத்தொனி படுத்தெ திர்ந்து
மேனிலைத் தலைவன் மேனி வெதுப்புறத் திக்கோ றொட்டான். ()

புரந்தரன் சாபம் பூட்டிப் புனற்படை விடுத்த வித்தா
னரந்தைகொ ளவுணர் கோன்றுரு மப்படை தொடுத்தான் போகி
யுரந்தரு கிந்த வாக னுறுபடை தூரத்தொ ழித்தான்
கரந்திடு வஞ்ச னந்தக் கணையினை மீட்டுத் தொட்டான். (எரு)

கரியவ னஞ்ச பில்குங் கட்செவிப் பகழி யுய்த்தா
னரியெனத் தருவன் காரு டாத்திரந் தொடுத்து மாய்த்தான்
றெரிமறுத் தற்ப நாடன் சிங்கக்கோ றொட்டான் றீயோர்
பெரியவன் சிம்புள் வாளி பெய்தனன் றுணிந்து நின்றான். (எசு)

வானவர் கோமான் மோக வாளியை விடுத்தா னந்தத்
தானவர் கோமான் ஞான சரத்தினால் வீட்டி நின்றான்
மானமிப் பொருது போகி வச்சிரந் திரித்துத் தாக்க
வீனமுற் றவுணோர் சூல மெடுத்தெதிர் தனைய வன்றோள். (எஎ)

அன்னது வராமை கண்ட வாயிரங் கண்ண னஞ்சா
வெந்திடு கிட்டுப் பொன்னன் விரைமல ரடியிற் றாழ்ந்து
தன்னது தோல்வி சாற்றித் தமரொடு மேங்கி நின்றான்
றன்னிகர் தருவர் வேந்தன் சயமுரா சறைந்து மீண்டான். (எஅ)

வக்கமிக் குற்று நின்ற விமையவர் முகங்க ணோக்கி
வீக்குதா னவரை நீவிர் வேறன்மிக் கரிதோர் சூழ்ச்சி
நோக்கின னதுபா லாழி நோன்மையி லசுர ரோடு
மேக்குறக் கடையி னுண்டாம் வெள்ளிய வமுது மாதோ. (எகூ)

அன்னதை யவுணர் துய்க்கா தரியினால் வஞ்சித் துன்னி
றுன்னலர் படையா லிவி ருகவிலி யாது வாழ்வீ
ரென்னவுஞ் சுருசி ரன்று னென்னலர்ப் புகழ்ந்து பொய்த்து
நன்னய முரைத்து நட்டன் னுரொடு நகலை புக்கான். (அO)

மந்தர மலைமத் தாக்கி வாசுகித் தாம்பி யாப்பிட்
டிந்திர னிமையோ ரோர்பா லெழும்வலி யவுண ரோர்பாற்
பந்தியி னுறீஇக்க டைந்தார் பயோததி யாப்ப னில்லா
முந்தாப் பொருதா நஞ்சை முனிவில்வாய்க் கக்கிற் றம்மா. (அக)

எழுந்தவா லாலங் கண்டோ ரியாவரு மச்சுற் றாழி
யெழுந்தகாற் படுபூ ளைப்பூ வெனவிரைஇப் பறந்து போய்ப்பெண்
ணொழுந்தவோர் கூற்றி னானை யிணைச்சரண் சரணென் றோதா
வெழுந்தபே ரோதை யோடு மெய்தின ரோல மென்றார். (௮௨)

அக்கடு கடுகக் கையா லள்ளினன் கண்ட மட்டாப்
புக்குறப் பெய்து வாயிற் பொறிகலை மகண்முன் னானோர்
தொக்கபஃ றுளி காத்தான் றூயமா தேவன் யார்க்கு
நக்கனே யுயர்ந்தோ னென்ன நமமே காட்டு மன்னோ. (௮௩)

பின்னரன் னவர்தா மீட்டும் பெட்டுமத் தித்தா ராகப்
பொன்னவிர் மணியா வைந்து பொற்றரு வெண்மா வாதி
மன்னிய பொருள்க டோன்ற மான்முதற் றேவர் கொண்டா
ரின்னமு தெழுந்த தப்போ திமையவர் வலத்தோ டுள்ள. (௮௪)

மாதவ னுலக மெல்லா மயக்குமோ கினியாய்ப் போந்தப்
போதமு தெம்ம தெம்ம தென்றுசொற் போர்பு ரிந்த
தீதிலா வதிதி மைந்தர் திதிமைந்தர்ப் பந்தித் தேமுன்
போதிய முன்னோர்க் கேயீந் தொழித்தனன் பின்னோ ரேங்க. ()

ஆசிலா வமுதுண் டேவ ரமராய் வாழ்ந்தா ராக
வீசுவா னொளியா ரீண்டு வியன்றுணைக் கருவி யாய
வாசுகி யுமிழ்ந்த நஞ்ச மாதேவற் கூறு யுற்ற
மாசுதா னுயிற் றந்தோ மாசிவத் துரோக மென்னீ. (௮௬)

அச்சிவத் துரோகத் தானே யன்றுதொட் டங்க முற்றும்
பச்சிரத் தஞ்சிழ் நாற்றம் படிந்திழி விரண முற்று
மெய்ச்சுவை பொறுஞ யீசன் விரைமலர்த் தாள்வீழ்ந் தைய
வச்சனே னடியா தாற்றுந் துரோகநீத் தருள்க வென்று. (௮௭)

இரந்தனன் வேண்ட நீண்ட விமயமி னிறையோர் பாகன்
சுரந்தநல் லருளி னல்வா சுகிமுக னோக்கிச் சொல்வா
னிரந்தரு கழுவா யீசற் குஞற்றிய துரோகந் தன்னை
வரந்தரு மவனே யன்றி மாற்றுந ரேவ ருள்ளார். (௮௮)

பாரினிற் பல்கு பொம்மற் பாண்டிமா நாட்டி டானப்
பேரெனுந் தலக்கு ணக்கிற் பெரும்புக ழாடா னைக்குப்
பூருவ தக்கி ணத்திற் புனவாய்க்கு நிருதி திக்கிற்
சாருவீரஞ் சயபு ரிப்பேர்ச் சைவமா தலமொன் றுண்டால். (௮௯)



ஆங்குற் றீஇச் சிவதீர்த் தத்தி லாடிவன் மீக நாதன்
பூங்கழ லருச்சி செய்மெய்ப் புண்ணோயும் பவநோ யும்போ
மீங்குற லென்னப் பெம்மா னின்னரு ளாற்ப ணிந்தா
னீங்குவா சுகிமென் மெல்ல நெளிந்தூர்ந்து வழிக்கொண் டாறுல்.

பாதல நீத்துப் புவிப் பாண்டிநா டுற்றுப் பெம்மா
னோதிய குறிப்பி னாடி யொளிர்திரு வெற்றி யூரைத்
தீதறீ வண்மி யீசன் றிருமுனர்த் தீர்த்த மூழ்கி
வேதகத் தியமா சென்ன மெய்ப்புண்மேர்ந் திடக்கி ளர்ந்தான். ()

அன்னவா சுகிவி யப்புற் றச்சிவத் துரோகத் தால்யா
னின்னநாள் வரைகொ ணோய்த்தன் பிழைப்புற்றேன் பழம்புற்றீசன்
றன்னருள் வலத்தா லென்றுந் தன்சிரக் குவிகை யாறை
சன்னிதி யடைந்து முக்காற் றலைகுந் தோயத் தாழ்ந்தான். ()

பான்முத லமுத மைந்தும் பஞ்சகவ் வியக ளுவுங்
கான்மிகு பனிநீர் சாந்தங் கனிக்கழுப் பழமுங் கொண்டு
மான்முத லாரோர்க் கெட்டா வண்மீகக் குறியை யாட்டித்
தேன்மலி கொன்றை வில்லந் தெரியல்சாத் தாடை யொழுந்த. ()

அறுவிதைத் தூபந் தீபஞ் சமுற்றிமை யத்து வாழை
மறுசுவைப் போன கங்க ளவெறி நிவேதித் தாடிறை
மறுவிலா வில்லத் தானு மருவுசெம் மணியி னாலு
முறுபெயர் நாறீறுப் பத்து முறைத்தருச் சனைபு ரிந்தான். (௯௪)

ஆடினா னாகத் தக்கன் னாருவிசீ ராடி னானை
யாடிறு னவகை பொங்கி நீளிரு குவிகை சென்னி
சூடிறு மட லமுற்றார் றூன்னிய புகழ்ப் போர்வை
மூடினான் வலஞ்செய் தாற்று முன்னின்று பழிச்ச லுற்றான். (௯௫)

முன்னமோர் மாக லத்தின் மூம்மலக் கனிதுன் றேமீட்டுத்
தென்னினத் தொன்று பூசை யியற்றவுட் கொண்டாய் போற்றி
பொன்னிலத் தவர்க ளென்றும் புக்குறை வெற்றி யூரிற்
பன்னக குலங்க ளிப்பப் பழம்புற்றில் வாழ்வோய் போற்றி. (௯௬)

என்குலத் தொருவற் கீச னென்றொர்தேத் திருந்தாய் போற்றி
யென்குலத் தவரைப் பூணா வெடுத்தணிந் திட்டாய் போற்றி
யென்குலத் தென்னை நாணா விசைத்திகல் கட்டந்தாய் போற்றி
யென்குலம் போற்ப மும்புற் றிருந்தருள் சோதி போற்றி. (௯௭)

பணியின்கா தணியாய் போற்றி பணியினு ழியினய் போற்றி
பணியின்முந் நாலாய் போற்றி பணியரை ஞானைப் போற்றி
பணியின்கங் கணத்தாய் போற்றி பணியினங் கதத்தாய் போற்றி
பணியினேன் பணிகொண் டாண்ட பழம்புற்று நாதா போற்றி. (௯௮)

என்னநின் றேத்தி ஞானை யெம்பிரான் பழம்புற் றீச
னின்னரு பூசை யென்றோ நிற்குவேன் வெவேன் டென்னப்
பன்னக வேந்தென் புண்ணைப் பாற்றமிப் புனித தீர்த்த
மென்னபி தானத் தா லிலங்கவேண் டும்மி தான்றா: (௯௯)

சாச்சிவ துரோகத் தாறு மெய்நாறி வினைக ளெல்லா
மிச்சிவ தீர்த்தந் தோய்கா லெதிர்ப்பிறு மோவல் வேண்டுஞ்
சச்சிதா நந்த வீடுஞ் சார்தல் வேண்டு மென்று
ளச்சிய வாறு கென்று நம்பிரா னருளிச் செய்தான். (௧௦௦)

கேட்டவாக் கினைம கிழ்ந்து கிளரொளி மேனி வாய்ந்து
தாட்டுணை பணி இவெ ழுந்து சயபுரி யீசன் றன்பால்
மீட்டிடா வன்பி னோடும் விடைபெறீஇப் படர்வுற் றுத்தன்
னாட்டினை யடைந்து வாழ்ந்தா னலத்தவா சுகிதா னன்றே. (௧௦௧)

ஆகத்திருவிருத்தம். அ௬௫.

வாசுகி சிவத்துரோக நீக்கப்படலம் முற்றிற்று.

---

# முனிவர் பூசனைப் படலம்.

ஐம்புல னொருக்கிக் கரணநான் கடக்கி
யருந்தரு குற்றமுன் றகற்றி
வம்புறு மிருமை யொருவியோர் பொருளை
மாலறக் கண்டமா தவத்தோர்க்
கம்புவி போற்றுஞ் சூதமா முனிவ
னருளினால் வெற்றியூர்க் காதை
யும்பர்த மமுதை வென்றவின் புருக்க
வுயர்கிலை யமுதிறுள் ளுறுத்தான். (௧)



என்றுமோ ரியல்பி னின்றுசிர் படைத்த
வியற்றிரு வெற்றியூர் மேன்மை
சென்றுசென் றுயக் கடவினு மாழ்ந்து
சிந்தையிற் றெளிதர லில்லின்
மன்றமற் றேங்கி மகிழிற்சிர் தூக்க
மகிதலத் தாங்குமன் கனத்துந்
தன்றனி யுயிலை யாழ்ந்தியர் திருந்தர்
சற்றுகின் றுற்றிலுந் தாற்றும். (௨)

கடவுளர் தம்முட் கண்ணுதல் போல
நதிகளுட் சிறந்தகங் கையைப்போற்
படர்புகழ்க் குருவுட் காழிவள் ளலைப்போற்
பவமறுந் தவத்துணி றுபோற்
புடவிமங் கையரு ளரசியே போலப்
புருடருட் குலச்சிறை போல
வடைவுறு தலத்துட் சயபுர மென்று
மதிகமெய் மறையின் றுதிர். (௩)

பதிபிற வெல்லா மொன்றிருந் தழிமற்
றொன்றிரா பயநனி படைத்துக்
கதிநில மாறி விஇக்குந்தக் கெக்குங்
கலந்திட வல்லவரீக் கன்பு
விதியினால் வெற்றிக் கொடியவன் படாட
வீரபே ரிகைநனி முழக்கித்
துதிபெறத் தனிப்பே ரரசவீற் றிருக்குந்
தொல்பதி சயபுரந் துணிமிர். (௪)

கற்பினிற் சிறந்தகன் கனிட்டையென் றுற்பின்
சேட்டையென் கடவளென் றிருக்க
கிற்பதும் வேண்டுங் கொல்லிரே மூலகுங்
கிளத்துசிர் நிம்பமா வனத்தைத்
விற்பனப் புலவர் குழுவெலாம் வெற்றி
யூர்க்குறி யான்விதந் துரைத்தார்
சிற்பமா ரிதனின் வைத்தொழிற் றவற்றை
யுய்த்துணர் வாற்றெளி கென்றே. (௫)

பொருளெலாஞ் சமட்டி வியட்டியாம் வெற்றிப்
பொருளுமவ் வியற்றன்றே புனிதனி
மருளறு தருக்க நான்முடி பிறவே
மாயில்சிர் மிப்பமா வனத்தைத்
தெருளினர் சமட்டி வெற்றிமா நகரந்
தோன்றுமித் தாக்குஞ்செய் தவனைக்
கருளிநீ இ நிருப பகங்குறி யிட்டாற்
கன்கூடு காட்டின னன்றே.

காயனை வெயிதோற் காமனு மாயி
காவினைக் காற்றுகா வுறுமென்
பூமனைக் கிரங்கொப் பூமணங் கவன்றோல்
போக்கியோர் புரிந்தபங் கயமும்
மாமனைத் தடந்த மாமனும் புரை
வாட்டிய வனிதைவாழ் புரனு
சாமனைத் தகற்கொல் சாமனந் தகனுஞ்
சனக்காற் றடிசலக் காரணம்.

என்றிவ வொன்மர் செவசம் வியட்டி
யாகமற் றினைவெப்ரு கேய்ந்த
துன்றிய சமட்டி வியாபக மயந்தன்
சொரம்மெனக் கொண்டிசே வகனூர்
வன்றிறற் பலபுயப் புந்திடந் தானென
பதிரு விளக்மெய் வழக்கே
யன்றடை மொழியாஞ் சமட்டிக மத்தா
லாய்த்தெளி வன்றல்யான் டையதே.

வீரட்ட மட்ட மென்றவைக் கேயிவ்
விதிதலைப் படுமெனி னிவ்வென்
போரட்ட மென்றே துனிதொறுங் குதுமேற்
புரிவதில் வெறெனைப் பொருவில்
காரட்ட கண்டர் பதிபிற வெல்லாங்
கைமுதி கங்கைப் பிடித்தே
பாரட்ட திக்கும் பரந்தன வென்றார்
பழுதில்சொற் பாவல ரன்றே.



நீத்தொழி லசுரர் குழுவினை யொருகாற்
சிவனருள் வலிகொடு தேவர்
தேய்த்துறு களிப்பா லமரர்கோன் முதன்மை
சேர்ந்துமா சபைதிரண் டுறுங்காற்
சோத்தமெம் பிராற்குப் புரிந்திலர் தாமே
சுவசத்தி கொடுசெயித் தனரென்
றுத்தனை மறந்து தருக்கினு ரைய
னுதுநுடைப் பானுளங் கொண்டு. (கo)

இயக்கதல் லுருக்கொண் டச்சபை முகப்பி
லேவிலர் போலமற் றெவரும்
வியக்கவாண் டிறுமாந் திருந்திட விண்ணோர்
வித்தக னுளக்கிடை விளங்கா
ருயக்கதி காட்டு மொருவனென் றோரார்
யார்கொலோ வுவனென வுசாவி
மயக்கம தறிவு பறிமுதல் செய்ய
வொருவர்மற் றொருவராய் வந்து. (கக)

யார்கொனீ யென்ன வெமைவின வுதற்கீண்
டியார்கொனீ யெனத்திறற் கரித்தாங்
கோர்சிறு துரும்பை நிறீஇயசைக் கெனலு
முறுவலிப் பவனன்மற் றதனை
யார்வலி கூட்டி முயன்றுமெய் வேர்த்தாங்
கயர்த்தன னவிக்கென வங்கி
நீர்கொளுள் வடவை யுருக்கொளீஇ யடுத்தான்
றகித்ததங் கவனையந் நிலையே. (கஉ)

மகபதி செலுத்திவச்சிர மொடிந்து
மயங்கினன் மற்றுமற் றுயர்ந்த
சகபதி களுந்தம் வலிகுலைந் தர்ச
மதிசயஞ் சார்ந்துளந் திகைத்தா
ரகவயின் மானத் தசாவினர் நிற்ப
வருளுருக் கரந்தன னங்காங்
கக்கம வெனுறுங் கவரவர் தம்மை
யாட்டுவ னுகிய வண்ணல்.

மலைமலை யாய வானவர் தலைவர்
வான்றிசை காவலர் வாரி
யலைகடல் வாய்ப்பெய் தலகிலை விழுங்கு
மத்தரு தருவரை யலைத்து
வலையிடை மாச்செய் வலியினர் பிழிதோர்
அரும்புக்கு வாளமர்ப் பயிக்கய்
கலைவொரீஇ யளிக்குங் கைத்தில ரானார்
கைத்தியான் றொடையவன் கவர்ந்தால். (௧௪)

காட்டுவான் முனே காட்சிதந் தமர்ந்துங்
காண்பவர் கண்டிலர் கழறிற்
காட்டுவா னென்னுங் காட்டிடுங் கருவை
கலந்திடா விடிவிது கருத்தாற்
காட்டுவா னுப தானுந் தன்றைய
அம்மெனுஞ் சுருதிகண் டனமாற்
காட்டுவாற் காட்டு விப்பவள் காண்பாற்
காண்பிப்பாள் கருணையங் கணையே. (௧௫)

அருமந்த தேவ ருமன்ற தமக்கு
மருமன்ற வெள்ளிடை யமர்ந்துந்
திருமந்த வதற்குக் கருணையங் கணைமா
தேவிதான் றிருவுள மிரங்கி
வருமந்தக் காட்சி தந்தமக் கானீர்
மயங்கினீர் வலியர்க்கும் வலிபாய்ப்
பொருமந்த மதனை சிவமன்றே வென்ற
பொருளுமச் சிவமன்றே புலவீர். (௧௬)

உருத்திர னின்னின் வலியனில் லென்று
முரைத்திடு வல்லிலோ னென்று
மருத்தியா னமவுங் கிராயச பீமா
யவ்வென்று மகிலபூ தங்க
டரித்துறு மீசு வான்சர்வை சுவர்ய
சம்பந்தன் சர்வேசு வரனென்
றுரைத்தெழு சுருதி கற்றவு மறந்தீர்
சமயத்திற் குதவில வாக. (௧௭)



சிவமன்றி யெதுதான் செயனும் வெற்றி
சிவமன்றி யெப்பொருட் சேருஞ்
சிவசோமற் றதுவென் சமர்ப்பண மறிவாற்
செய்திலீர் தெருமந்தி ரினிநீர்
சிவமரு வன்பாற் சரண்புகுந் துய்தி
சேர்குதி ரெனவவர் தெருண்டு
சிவமலி வைப்பாய் வெற்றிசேர்ப் பிடமாய்க்
காட்சிமிக் கெளியதே மெதுகொல். (௧௮)

அன்னையிங் குணர்த்து கென்னலு மையை
யமரர்கா ளவனியிற் றமிழ்த்தேந்
தென்னுறு திசைய தங்கதிற் பாண்டி
நாட்டினிற் பொருநைதீ ரத்தின்
மன்னுசீர்த் தேவி சாலமா நகரத்
தணியது நிம்பமா வனமற்
றன்னதிற் புகுந்து சயசய சயவென்
றலைகடன் முழக்கென வார்த்து. (௧௯)

வணங்குதி ரென்றுய் மறைதலும் விண்ணோர்
வருத்தவா நிம்பமா வனத்தை
யணங்கொரீஇ யணைந்து சயசய சயவென்
றம்பர மமுங்குற வார்த்துப்
பிணங்கொள்பாப் பணியார் பழையபுற் றிடத்தார்
பாகமா தேவியார் பதும
மணங்கொடா டலையிற் பொருந்தமுன் வீழ்ந்து
வணங்கினர் மற்றெழா ராக. (௨௦)

பாகமன் பிரியா நாயகி யுடனே
பழம்புற்று நாயகர் விடைமேற்
பாகம னுகித் தமதருட் காட்சி
பாவித்துப் பண்ணவீ ரினிச்சற்
பாகம துறுக வெற்றியும் வலியும்
படைக்கமற் றெழுகவீண் டெக்குப்
பாகம னுப வரமுரைக் கெனலு
மெழுந்தவர் பகர்கு ரானர். (௨௧)

வெற்றியும் வலியு நினதுடை மைகளா
　　வெமதென்ற பாபம்விண் டிடவும்
வெற்றியும் வலியு நின்னவென் னிமலை
　　விதியினால் வெற்றடி யேம்யாம்
வெற்றிநின் பாற்சேர்த் தமையினா லின்பால்
　　வெற்றிசேர்த் தமையினா லிவ்வூர்
வெற்றியூ ரெனும்பேர் ஞாலமே லிடத்தும்
　　விளங்கவு மருள்குதி விமலா. (௨௨)

நின்றனை வெளியே கண்டமோ கத்தா
　　னின்னிடம் புகுந்தன மிமலா
தொன்றுறு சுருதி சதங்கள்கூ றியவவ்
　　வழியெலா மொருமிறு துரும்பிற்
கின்றமைத் தன்ற னருளது துரும்பே
　　லருளிலா மலையதுந் தெளிய
தென்றதுங் காட்டி மறைந்தனை யெம்மோ
　　யெளிவந்தங் குணர்த்திட வுணர்ந்தேம். (௨௩)

துரும்புக்கும் பற்று நாயினே மென்று
　　தொல்லையோர் துதிக்கநசொன் மாலைக்
கரும்பினு மினிய மொழியுப சாரங்
　　கயமையே யிடத்தது பவமா
விரும்பினும் வலிய மனத்தினேங் கடைப்பட்
　　டிழிந்தன மெமக்கரு ளிறைவி
சுரும்பிசை பாடு ஞானப்பூங் கோதை
　　சொற்றிட வுளவெலாந் துணிந்தே. (௨௪)

அம்மையா லப்பா நினைச்சரண் புகுந்தே
　　மடியமற் றின்னினி நினது
மெய்ம்மைசே ரருளை யெல்லையா லேனு
　　மறக்கிலா விபவநன் குறவு
மெம்மையின் டளித்தாட் கொள்கவென் றிறைஞ்ச
　　வெம்பிரா னியைந்தியற் கையினா
லெம்மையு மீது வெற்றியூர் நும்மாற்
　　செயற்கையாஞ் சிறப்புமெய் தியதால். (௨௫)



சயசய வென்று நமையடுத் திட்டோர்
　　சார்வரம் வேண்டினீ ரதனாற்
சயபுர நாமம் பதிக்கரு ளுமக்குச்
　　சார்கெனச் சங்கரன் மறைந்தான்
சயசய கூறி யருளினா லமரர்
　　தம்பதி புகுந்துவாழ்ந் தனராற்
சயபுர மேன்மை யொன்றுகொன் முனிவீர்
　　சத்துவ குணத்தினிற் சான்றோன். (௨௬)

ராமசந் திரன்முன் னரக்கனை வீட்டி
　　ரமையைமீட் டிம்வெற்றி தனக்காங்
காமதோ வென்று சலித்திட வெற்றி
　　யாமென வருட்சய புரியார்
காமுகற் றடிந்து மனையொடு மீண்ட
　　காலையிற் கருணையால் வெற்றி
யாமென வளித்த சயபுர மிதுகா
　　ணன்னமே யெனவழி வுறுத்தான். (௨௭)

அன்னமென் னடையான் மின்னினுண் ணிடையாள்
　　சாநகி சயசய வன்பாற்
பன்னினள் கொழுந னெடுபெணிந் தனளாற்
　　பரவுசீர்ச் சயபுர நாம
முன்னிபம் பலவான் முனிவிர்கா ளின்னு
　　மொழிந்திடின் விரியுமற் றதன்சீர்
சொன்னதைப் பின்னும் விருப்பினா லுமையாள்
　　கேட்டிட விறைவர்சொல் குவரால். (௨௮)

இரவுநண் பகலுஞ் சயபுர மேன்மை
　　யாயிரத் திருகவர் நாவாற்
பரவுவா னகிப னயன்பரம் பரிக்கப்
　　பற்பல வூழியாப் பகர்ந்தும்
விரவிலன் முடிபை யயன்பல்கால் வந்து
　　முடிந்ததோ வெனவினுஞ் சேட்
மருவிய தென்றுன் சேடனு மெனப்பேர்
　　வழங்கிற்றவ் வனமென்பர் வல்லோர். (௨௯)

வேறு.

என்று சூத னியம்பிடத்
துன்று நற்றவர் தோத்திர
மன்ற பன்னி வழுத்தியே
பின்று மொன்றது பேசுவார். (௩௦)

வேறு.

ஆலெலா மையந் திரிபற வுணர்ந்த
நோன்மைசான் மாதவக் குரவ
ஞால ... வைப்பகை கடந்து
நயத்தகு வெற்றியின் வைப்பாய்ப்
போதுமென் னுருபைப் பின்னிடா நகரின்
பொற்பெலாம் புலங்கொளப் புகன்றாய்
பாலர்கட் கூட்டு மன்னையே போலப்
பண்டுநாம் பயின்றபாக் கியத்தால். (௩௧)

கங்கையிற் கொண்டார் கங்கையிற் கொண்டார்
காதலால் வழிபடு மவர்க்குச்
சங்கையி லாதே சங்கையி லளிப்பார்
சாதலும் பிறத்தலு மாகி
மங்கைகூ றத்தர் மங்கைகூ றத்தர்
மன்னுசீர்ச் சயபுர மன்னர்
பங்கச மிரிக்கும் பங்கசத் தாட்ச
பரியைசெய் திடவுளம் பரித்தேம். (௩௨)

சிவனருட் பூசை சயபுர மதனிற்
செய்வது மதியெமக் கடிகாள்
பவமற வருள்க வதன்விதி பகரும்
பரமவாக் கியமெது பகர்க
தவமுனி காத வென்றடி தாழ்ந்து
வேண்டிடச் சத்துவ குணத்தி
ரவமிலீர் சத்தி நிபாதத்துத் தமர்நீ
ராகலி னறைகுதுங் கேண்மின். (௩௩)



வேறு.

சச்சிதா நந்தசிவ மொன்றேமற் றதற்குச்
சத்திதா னக்கினிக்குட் டணம்போலச் சாரு
மெச்சுசிவ ஞானமாங் கிரியைசத்தி யாகும்
விளம்பிவற்றின் சமநிலைதான் மேவுசதா சிவமாம்
பொச்சமின்மெய்ச் சதாசிவத்திற் பிரமமைந்து முகமாம்
புகலுமீ சானந்தற் புருடமகோ ரஞ்சீர்
வைச்சவா மஞ்சத்தி யோசாத மூர்த்தம்
வரைகீழ்தென் வடக்குமேற் கிவைவழங்கு திசையே. (௩௪)

ஐந்துசத்தி வடிவாகி யைந்தொழிற்கு முதலா
யைவர்க்கும் பிறப்பிடமா யைந்துபா சமுமா
மைந்துறச்செய் கலையைந்தாய் மாபூத மைந்தாய்
வருமுகமுஞ் சடங்கமுமாய் மன்னுமரு வுருவாய்ச்
சந்தமுறு பீடலிங்கா காரமாய் நடுவாய்த்
தனியொளியாஞ் சதாசிவமே சதுர யோகிகட்கும்
பந்தமகல் யதிகளுக்குந் தீக்கிதயோக் கியர்க்கும்
பத்தர்க்கு முபாசியமாப் பகருமரு ளாலே. (௩௫)

இத்தகைய சதாசிவத்திற் பத்திதலை நின்றே
யியற்றுவர்மெய்ப் பூசையகம் புறமெனமற் றிரண்டாஞ்
சுத்தமிச்சிர கேவலமா மூன்றுறு மிவற்றின்
றொகைவகைவி ரித்திறத்தாற் சொற்றவிதிப் பரப்புஞ்
சத்தியதி காரிகளு மந்திரமுங் கிரியா
சாதனமும் பாவகமும் பலமுமுப கரண
வத்துவுங்கா லமுந்தலமு மரபுமிவை யெல்லாம்
வகுப்பதுமெய்ச்சிவாகமமென் றுரைப்பர்வழக்குணர்ந்தோர்.

மறைநான்கு மாகமங்க ளெழுநான்கு மிவையே
யான்பிரம மாஞ்சிவத்தின் வந்தமுத னூல்கள்
மறைநான்குந் தற்புருட முதனான்கு முகத்தின்
வந்தனவா மாகமங்க ளெழுநான்கு மற்றைத்
துறைநான்கு ளூர்த்தவீ சானத்தி லுதித்தார்ந்
துவசுரோ தோற்பவங்க ளெனுந்தலைமை தோய்ந்து
மறைநான்கி னுட்பொருளைப் பூர்வபக்கம் போக்கி
வகுத்துரைத்துச் சித்தாந்த வான்பெயரும் பெறுமே. (௩௭)

மறைநான்கும் பல்லோர்க்கும் பலபொருளு மீந்து
மதகோடி கட்கிடனுப் வைதிகத்தாற் பொதுவாந்
துறைநான்கா மாகமங்கள் சத்தினிபா தர்க்கே
தொல்சிவமாம் பொருளீந்து சைவத்தாற் சிறப்பா
மறைநான்கும் பூர்வபக்க மலிந்துயர்சித் தாந்த
மறைந்துபொதுச் சுருதியென வழங்குமதை மாற்றித்
துறைநான்கா மாகமங்கள் சித்தாந்த மலிந்து
சொல்பூர்வ மறைசிறப்புச் சுருதியென லாமால். (௩௮)

மறைநான்குங் கருமமென ஞானமென விரண்டாம்
வருகரும மெச்சாதி பலஞ்சுவர்க்க மாதி
மறைநான்கின் ஞானமத்தி யான்மகமாம் பலமும்
வருமான்ம லாபமென வகுப்பர்கண்மெய் யுணர்ந்தோர்
துறைநான்கா மாகமங்கள் கருமஞா னத்தாற்
சொல்லிரண்டாஞ் சரியைகிரி யாயோக ஞானத்
துறைநான்கின் முன்மூன்றுங் கருமமற்று ஞானந்
தொல்சிவமே மெய்ப்பொருளாத் துணிந்தவழி யிவையே. ()

சரியைகிரி யாயோகத் தருநெறியின் பலந்தான்
சாலோக்கிய சாமீப்பிய சாரூப்பிய மென்ப
வுரியசிவ ஞானத்தின் பலஞ்சாயுச் சியமா
முயர்ஞான மதுபரமற் றபரமென விரண்டா
வருதுறைக ளொன்கினிரண் டாவதெனுங் கிரியை
வரதனுர் பூசையென வழங்குவமற் றதனை
விரிதாமெய்ச் சிவாகமம்போ லெந்நூலும் விளம்பா
வெள்ளிடையின் மலையென்ன வறுபவமற் றிதுவே. (௪0)

ஆகமத்தின் முறையுணரி லரியசிவ தீக்கை
யடைந்தவராய்ப் பூர்வபக்கத் தயல்விரும்பா மதியாற்
பாகமொத்த கருத்தினர்க்கே யதிகாரம் பகர்ப
பண்டையநற் றவத்தார்க்கே பலிக்குமது வன்றிக்
காகமதாய்ப் பசுநூல்கள் கதறுபவர்க் கெங்ஙன்
கனவினிலுங் காணவற்றுந் தீக்கைபெற்றோர்க் கன்றி
யாகமத்தி னதிகார மிலததுவுங் குருவா
னன்றிவரா தவனுமருட் பருவம்பார்த் தளிப்பன். (௪௧)



கண்ணன்றான் யமுனாநதிக் கரையதனிற் பூசை
காதலினுற் செய்துமருட் சிவதீக்கை குருவா
னண்ணினு னிலன்பலமு நண்ணியதின் றெங்க
ளுதனுர் புலியினகப் பாதனுர் மகனுர்
பண்ணினுர் வெள்ளானைப் பவனியிற்செந் தமிழின்
பாவலரை நாவலரைப் பரஞ்சோதிப் பொருளைக்
கண்ணினுற் கண்டதவக் காட்சியார் தொண்டர்
கதையுரைத்தக் கரைகண்டா ரக்கரையின் வருவார். (௪௨)

பர்றகூடனுண் சைசவத்தின் மாற்கருளும் வரத்தைப்
பரிந்துதிரு வுளந்தெரிந்தப் பதுமைகோன் பூசைப்
பாற்கழிநின் மாலியந்தன் னுற்கரையி னெதுங்கப்
பற்றியத னுற்பூசை முற்றியருட் சைவ
நூற்கதியே தீக்கைபெறு நீற்குரிசில் பூசை
நுவன்றசிவ பூசையன்மை நவின்றருட்சோ கத்தாற்
காற்பதும மவன்றலையின் பாற்பதித்துச் சைவா
கமமொழியு மைந்தெழுத்தைத் தமமொழியக் கரைந்து. ()

உரைத்தசமற் காரங்க ளொழிந்தனவும் புரிந்தே
யுடையவரைத் தந்துசிவா கமத்தினுரைப் படியே
தரைத்தலத்திற் பூசைசெயூ மகப்பெறுக வென்று
தண்ணளிசெய் தேகினனெம் மண்ணுப மநிய
னிரைத்தகூர் மத்தும்பா ரதத்தாறு சாச
நிகத்துமற்றைத் தலத்துமிது நேர்ந்தபொழு தெல்லாந்
தரைத்தலத்தி னயனையீ ருரைத்தனமன் றேமன்
றக்கபிரா சங்கிகத்தாற் சாற்றிலமற் றீண்டும். (௪௪)

உமையாளங் கணபதிசெவ் வேளயன்மால் போகி
யும்பர்முனி யிருடிகண முரகர்நரர் விலங்கு
கமையாள்புள் ளூர்வனநீர் வாழ்வனதா வரமாக்
கதித்திடுயோ னியிற்பிறந்து கன்மவிசே டத்தா
லெமையாளு மிறைபூசை புரிந்தவர்க ளெல்லா
மியைந்தவதைக் கிரமவழி யியற்றியதெல் லாநந்
தமையாளுஞ் சித்தாந்த விதிவழியா லன்றிச்
சாத்திரமற் றெதனுலோ சாற்றுகசத் தியரே. (௪௫)

ஓதுமிஃ துணரார்விப் பிரர்பல்லோ ரும்மை
யுறுவலியி னசுரராக் கதாகி யுழன்றோர்
கோதுமலி கலியதனிற் பிரமயோனியிற்பு
குந்துபிறப் பாரென்ற கொள்கையினாற் பிறந்தோர்
வேதநெறி யுளவுணரார் மிருதிபுரா ணத்தின்
விதியுணரார் வெறிபிடித்த வெறும்பேயுக ளாகி
யாதிசைவ நூற்கிலா கவமுரைத்தாங் கெரிவா
யருநரகிற் கிரையாகி யலைகுநரா யினரே. (சசு)

அவர்கதையென் பயனமைக தவமுனிவீ ரென்று
மரன்விரும்பு முதனூல்சை வாகமமென் றறிதிர்
தவரெனீஇப் பூசைபகர் பரமவாக் கியமங்
கதுவென்க சயபுரத்திற் சார்ந்துமெய்யா தரவாற்
சிவனருட்பூ சனையுஞற்று கென்றருளக் குரவன்
சேவடியிற் றாழ்ந்துதுதி செப்பியற வோர்கள்
புவனிபுக ழருட்பாகம் பிரியானு யகரைப்
போற்றிசய போற்றியெனப் போற்றிவழிக் கொண்டார். ()

வேறு.

பாவி ரித்துறை பாடிடு பாவலர்
நாவி ரித்துறை நன்மது வுண்டளி
பூவி ரித்துறை பூம்பொழில் சூழ்கொளுங்
காவி ரித்துறை நாடு கடந்தரோ. (சஅ)

ஆண்டி னூட்டுற வாரமு துண்டவ
ரீண்டி நாட்டுள ரென்னத் திரிதரூஉ
வேண்டி நாட்டுறு வேள்வியி னூண்கொளும்
பாண்டி நாட்டினைப் பண்ணவர் நண்ணினார். (சஅ)

எல்லை யாயவெள் ளாற்றி னிருங்கரை
யொல்லை யேறி யுரக நதியொடு
மல்லல் வாய்ந்த மநுநதி தாண்டிமுற்
சொல்லு மக்குறித் தேத்தினைச் சூழ்ந்தனர். (ரு௦)

அலகி லாத வறவர்தாங் கண்டன
ரலகி லாத வறங்கண் மலிந்துசீ
ரலகி லாதன வாம்பொரு ளீண்டியே
யலகி லாநல னூர்திரு வெற்றியூர். (ருக)



பன்னி லாவும் பழம்புற்று நாதனு
ருண்ணி லாவு முவப்பொ டுறைந்தருள்
விண்ணி லாவு விமானநேர் கண்டது
மெண்ணி லாமகி ழீண்டி யிறைஞ்சினார். (ருஉ)

கிட்டி யாலயக் கீட்டிசைத் தாகிய
மட்டி லாத வரங்கொளும் வாசுகிப்
பட்ட நீரிற் படிந்துவெண் பூதிப்பூச்
சிட்டு மெய்யி லெழிற்கண்டி பூண்டனர். (ருங)

கோயி லின்றிருக் கோபுர வாயிலுட்
போயு வந்து புகுந்து விடைக்கொடி
மீயு யர்ந்த வியன்றம்பக் கீழ்நிலந்
தோய வெட்டுறுப் பேய்ந்துத் தொழுதனர். (ருச)

சென்னி மேற்கரஞ் சேர்த்து வலம்புரிந்
தின்ன றீர்ந்த வெழிற்கரு வில்லினுள்
மன்னி வாழ்வுறு வன்மீக நாதனை
நன்னர்ப் பூசனை நாட்டுதன் மேயினார். (ருரு)

தவன கும்பஞ் சமக நமகங்க
ளவமி லாமல ரைந்துவைத் தாவினைந்
துவம னில்லமு தைந்தி னுடன்சாந்தம்
பவம கற்றும் பரன்முடிக் காட்டினர். (ருசு)

நொய்ய நுண்டுகி லேனுறு நம்புலர்த்
தைய சாந்த மணிந்துபி தாம்பர
மெய்ய கண்டி விரிமலர்த் தார்புனைஇக்
குய்ய தூபமுந் தீபமுங் கோட்டியே. (ருஎ)

அறுசு வைத்தநெய் யன்னநி வேதித்துத்
தொறுவு கைத்த துழாய்விடை யண்ணற்கு
மறுவ லீரெட்டு மாணுப சாரமு
நிறுவி வில்லத்து நேர்ந்தா ருருச்சனை. (ருஅ)

ஆயி ரம்பெய ராலு மருச்சித்து
நேய கற்பூர நீரா சனம்வளைத்
தோயு மைம்புலத் தொண்டவர் தோத்திரம்
பாய வன்பினிற் பாடுதன் மேயினார். (ருசு)

சங்க ராசிவ சம்போ பணப்பணிக்
கங்க ணுபர காலகா லாவுமை
பங்கின் மேவப் பழம்புற் றமர்ந்தரு
ளெங்க ணுயக னேபோற்றி போற்றியே. (சுo)

இந்தி ரன்முத லெண்ணி லிமையவர்
வெந்த வுள்ளத்த ராக வெருப்புவான்
முந்தி ருந்தவர் முப்புரந் தியெழு
நந்தெ யிற்றி னகையினை போற்றியே. (சுக)

நாக மன்ன நகிலத் துமையவள்
பாக நீங்காப் பரம்பொருள் போற்றியே
மேக மென்னுமெய் விண்டு வணங்கமெய்ப்
போகந் தந்த புராதன போற்றியே. (சுஉ)

இன்ன வாறு பழம்பதி யீசனை
நன்னர்ப் பூசனை யாற்றி நலம்பெறீஇ
யன்ன வாறுபா கம்பிரி யாளையு
மன்னி யர்ச்சித்து வாழ்த்தினர் மாதவர். (சுங)

பின்னர்ப் பாகம் பிரியாள் பழம்புற்று
மன்னு மீசன் வரங்க டரப்பெறீஇ
யன்னர் பால்விடை கொண்டுமீண் டண்ணினர்
நன்னர் மாதவ நைமிச வாணரே. (சுச)

## வாழ்த்து.

பூவுலகிற் றிருவெற்றி நகரம் வாழ்க
புங்கவனும் பழம்புற்று நாதன் வாழ்க
மாவனுறு மான்பாகம் பிரியாள் வாழ்க
வவர்மதலை யாவாரும் வாழ்க வாழ்க
பாவுபுக ழுத்தலத்தா லயத்துப் பூசை
பணிவிழாச் சிறப்பினியற் றிடுவோர் வாழ்க
மாவுறுமா கமம்வாழ்க மறையும் வாழ்க
மலிவினைதீர்ந் தின்பமுறீஇ யுயிர்கள் வாழ்க. (சுரு)

ஆகத்திருவிருத்தம் அகஅ.

முனிவர் பூசனைப்படலம் முற்றிற்று.

---

# திருவெற்றியூர்ப்புராணம் முற்றிற்று.

---

திருச்சிற்றம்பலம்.